சிந்தாமணி

ஏப்ரல் 1927

Y15 m211, N24 CM
N26-3.9
207614

... No. M. 1957. WHOLE NUMBER 33. VOL. III No. 9.

REGISTRAR OF ... 4-JUN 1927 MADRAS

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] பிரபவ—சித்திரை April 1927. [இதழ் 9.

சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

நிரந்தர (சாசுவத) சந்தாதார்க்கு உள்நாடு ரூ. 50-0-0 வெளிநாடு ரூ. 60-0-0

	ரூ.	அ.	பை,
மகா ராஜாக்களுக்கு வருஷ சந்தா	50	0	0
ஜமீந்தார்களுக்கு	30	0	0
போஷகர்களுக்கு	25	0	0
நன்கொடையாளருக்கு...	15	0	0
அபிமானிகளுக்கு	10	0	0
உள்நாடுகளுக்கு	5	0	0
வெளி நாடுகளுக்கு	6	0	0

Some Select Opinions on "Chinthamani."

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl., M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—*

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

ஸ்ரீமான் கரு. குமு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மைடான் பேட்டையிலிருந்து 12-4-26ல் எழுதுவது:—

அன்பார்ந்த சகோதரியே!

நமது அருமை நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் விண்ணவரும் போற்றத்தக்க வீர புத்திரர்களை-உலகம் புகழத் தக்க உத்தமர்களை-வள்ளல்களைப் பெற்று உதவியெடுத்த தாய்மார்களை இந்நாள் அடிமைகளாய், கண்ணிருந்தும் குருடராய்ச் சிற்றின்பப் பொருள்களாய் மின்விளக்கு விருந்துக்கு தக்கதே. அவர்களை-உலகிற்கு பராசக்தி அம்சமாயிலங்கும் பெண்மணிகளை-இவ்விழிய நிலைக்குக்கொண்டு வந்த ஆடவர் செய்யும் கொடுமை தக்கதாகும். இவர்கள் இந்நிலையை யடைந்ததாலன்றோ, நமது பாரத நாடு ஒளிமழுங்கிக் கிடக்கின்றது. இறைவனருளாலும் தம கூரிய மதியாலும் உணரப்பெற்ற பெரியார் பலர் இப்பொழுது ஆடவரால் ஒதுக்கித்தள்ளப் பெற்ற அருமைத் தாய்மார்களும் தீண்டாத வகுப்பினரெனப் படுவோரும் முன்னேற்றமடைவதற்கான முயற்சியைச் செய்து வருகின்றனர். இச்சமயத்தில் தாங்களும் தங்கள் "சிந்தாமணியும்" செய்து வரும் தொண்டினும் உயர்ந்தது வேறுண்டோ? ஒவ்வொரு மாதமும் பல திறம்பட்ட மக்களையும் தங்கள் கொள்கையில் ஈடுபடுத்தும் முறையில் நாவல், கதை, விகடம் ஆகிய பல வழிகளிலும் விஷயங்களைப் புகுத்தி எழுதி வருவது பற்றி அளவிலா மகிழ்ச்சியடைகின்றேன். நமது சிந்தாமணியின் போதனையாலேயே 'பெண்கள் படிக்கக் கூடாது' என்று பேசிய ஆண்டில் முதிர்ந்த பெரியார் பலர் இப்பொழுது பெண் பாலார்மீது அனுதாபங்காட்டி வருவதையும் அடிக்கடி "சிந்தாமணி வந்து விட்டதா", "சிந்தாமணி வந்து விட்டதா" என்று விஷயத்தையும் கால நேரில் கண்டிருக்கின்றேன். இங்ஙனமாக நமக்குண்டாகிவரும் நமது "சிந்தாமணி" பல்லூழி வாழும்படி பரமன் அருள் கூடுவதாக. இத்துடன் இரண்டு புதிய சந்தாதார்களின் பணம் அனுப்பியிருக்கிறேன். நமது "சிந்தாமணி" நாட்டிற்கும் பரவ என்னாலியன்ற தொண்டியற்றுவேன்.

ஸ்ரீமான் C. V. சங்கரநாராயண ஐயர் அவர்கள், பெடிகல ஆபீசர், 28—[illegible]—25ல் அலஸ்டாரிலிருந்து எழுதுவது.

அன்பார்ந்த சகோதரியே,

தாங்கள் அன்புடன் விடுத்த "சிந்தாமணி" இதழ்கள் வரப்பெற்றேன். படித்து மனமகிழ்ந்தேன். நம் மடந்தையர் முன்னேற்றத்துக்கு நம் பெண் பாலரே வழிதேடல் அவசியம். அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு பெருந்தகையும் பெண்மக்களுக்கே ஓர் பெருமையுமாகும். எனவே இன்னும் எவ்வளவு விரித்துரைத்தாலும் மிகையாகாது. சமயமின்மையால் இத்துடன் விடுத்தனன்.

ஸ்ரீமான் S. B. பத்தர் அவர்கள் 23—5—'25ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு க்ஷேமம். தாங்கள் அனுப்பிய கடிதமும் சிந்தாமணி பத்திரிகையும் கிடைத்தன. வந்தனத்துடன் பெற்றுக்கொண்டேன். தாங்கள் நம் தேசம் முன்னேற வேண்டுமெனப் பேரவா கொண்டவர்களென்பதைத் தாங்கள் ஆரம்பித்துள்ள சிந்தாமணி பத்திரிகையைக்கொண்டு அறிந்துகொண்டேன். அதற்காக யான் வந்தனமும் செலுத்துகின்றேன். கடவுளும் தங்கள் முயற்சியை நிறைவேற்றியருளக் கருணைபுரிவார்.

ஸ்ரீமான் M. S. ரத்தினசாமி அவர்கள் 25—9—25ல் தைப்பிங்கிலிருந்து எழுதுவது.

சகோதரீ!

தங்களால் நடத்தப்படும் "சிந்தாமணி" என்ற மாத சஞ்சிகையைக் கண்ணுற்றேன். படிக்க மிகவும் ஆனந்தமாயிருந்தது. தாங்கள் பெண்களுக்கோர் தலைமை நாயகமாய் விளங்குவது பற்றி நாட்டிலுள்ள பெண்கள் கூடிய சீக்கிரம் மேன்மையடைவார்களென்பதில் சந்தேகமுண்டோ? எல்லாம் வல்ல ஈசன் செய்யும் அப்படியே முடிக்கும். நான் இன்று ஒரு வருஷ சந்தா அனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு தயவுசெய்து எனக்குப் பத்திரிகையை யனுப்பி வரவும்.

பொருளடக்கம்.

	பக்கம்.
சுபோதராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்)	... 514
தாதித்தொழிலும் பெண்மக்களும் (பத்திராதிபர்).	515
பி. ஏ. (B. A.) சிறுகதை (நன்மை நாடி)	... 517
பெண் கல்வி அத்தியாவசியம் (ஸ்ரீமான் கே. தியாகராஜ ஐயர்.)	... 528
நூர்ஜஹான் அல்லது பாரத கண்டத்துச் சௌந்தரிய கொடி (ஸ்ரீமதி பார்வதியம்மாள்)	... 531
நெட்டாலில் மாதர் சபைகளின் அவசியம் (ஸ்ரீ எஸ். ஆர். நாயுடு)	... 534
மார்க்கோ போலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்)	... 535
கணவன் (ஆசிரியர் ஸ்ரீமான் ராமசுப்பிரமணிய நாவலர்)	... 540
பர்வத குமாரி (ஸ்ரீமான் மகேச குமார சர்மா)	... 542
பெண்கல்வியில் நாட்டுப்புறமும் நகரப்புறமும் (ஸ்ரீமதி P. S. அரங்கநாயகி)	... 546

	பக்கம்.
இந்தியாவின் காவியங்கள் (1) இராமாயணம் (இராம இராவணர்) (ஸ்ரீமான் B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை)	... 548
எங்கள் சிந்து யாத்திரை (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)	... 551
பிதுர் வாக்ய பரிபாலனம் (CASABIANCA) (ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்)	... 554
இராணி பவானி	... 556
நிராசை அல்லது நீங்காத் துயரம் (சகோதரி வி. பாலம்மாள்)	... 561
குற்றம் புரியும் ஸ்திரீகள் (ஒரு நிபுணரின் ஆராய்ச்சி)	... 565
ஹொரேஷஸ் (ஜனாப் A. M. அல்லாபிச்சை)	... 567
பலமணிக்கோவை (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)	.. 574

M. R. Ry. K. V. Sesha Aiyangar Avl., M.A., B.L., High Court Vakil, 23, Nadu Street, Mylapore, writes under date 9th January 1927 :—

I have always looked forward to the next issue of the "Chintamani" with much interest and its articles have been read by myself and my friends with pleasure and instruction. Though perhaps primarily intended for ladies, its contents will amply repay perusal to gentlemen also. I have no doubt that the journal will grow in popularity and usefulness.

Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—

Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the womanhood of India is of great interest.

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home,as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani ,contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards **emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.***

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI **AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.**

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows :—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes :—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows :—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

P. G. Naicker Esq., Durban ; 25th April 1925.

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

Goonaruthinum, Esq., Durban, Natal ; 14th March 1925.

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. III.] April 1927. [No.

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

2007614

सुबोधराम चरिते

॥ अरण्यकाण्डः ॥

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL

अयोमुखीं स सौमित्रिरभिभूय निशाचरीम् ।
अन्वगच्छद्वने रामं क्रौञ्चारण्यमहापथे ॥ ३९ ॥

सः அந்த सौमित्रिः லக்ஷ்மணர் क्रौञ्चारण्यमहापथे கிரவுஞ்சமென்ற ஆரண்யத்தின் வழியாகிய वने வனத்தில் अयोमुखीं அயோமுகி என்ற निशाचरीं ராக்ஷஸியை अभिभूय அவமானப் படுத்திவிட்டு रामं ஸ்ரீராமனை अन्वगच्छत् பின் தொடர்ந்தார் ॥ ३९ ॥

कबन्धबाहुयुगलं विच्छिद्य रघुनन्दनौ ।
सम्बोधितौ ततस्तेन तद्देहमपि देहतुः ॥ ४० ॥

रघुनन्दनौ ராம லக்ஷ்மணர்கள் कबन्धबाहुयुगलं கபந்தனென்ற ராக்ஷஸனின் தோளிரண்டையும் विच्छिद्य வெட்டி வீழ்த்திவிட்டு ततः பிறகு तेन கபந்தனால் बोधितौ ஏவப்பட்டவர்களாக तद्देहमपि அவன் சரீரத்தையும் देहतुः தகனம் செய்தார்கள் ॥ ४० ॥

लब्ध्वा दिव्याकृतिमसौ प्रोवाच रघुपुङ्गवम् ।
सुग्रीवमेत्य वैदेहीमवाप्नोतु भवानिति ॥ ४१ ॥

असौ அந்த கபந்தன் दिव्याकृतिं தேவ சரீரத்தை लब्ध्वा அடைந்து रघुपुङ्गवं ராகவனை (நோக்கி) भवान् நீர் सुग्रीवं சுக்ரீவனை एत्य அடைந்து वैदेहीं சீதையை अवाप्नोतु அடையும் इति என்று प्रोवाच சொன்னான் ॥ ४१ ॥

तदादिष्टेन मार्गेण गच्छन्रामस्सहानुजः ।
शबर्या कृतमातिथ्यं जग्राह प्रार्थितस्तया ॥ ४२ ॥

तदादिष्टेन அவனால் உரைக்கப்பட்ட मार्गेण வழியால் सहानुजः லக்ஷ்மணரோடு கூடிய रामः ஸ்ரீராமர் गच्छन् செல்பவராயும் शबर्या சபரியினால் प्रार्थितः (सन्) வேண்டப்பட்டவராக तया அச்சபரியினால் कृतं செய்யப்பட்ட आतिथ्यं விருந்தளிப்பை जग्राह உட்கொண்டார் ॥ ४२ ॥

ससौमित्रिस्ततो रामश्शबर्यादिष्टवर्त्मना ।
सीतावियोगविधुरः प्राप पम्पासरस्तटम् ॥ ४३ ॥

ततः பிறகு ससौमित्रिः லக்ஷ்மணரோடு கூடினவராயும் सीतावियोगविधुरः சீதையின் பிரிவைப்பற்றுக்கவராயுமுள்ள रामः ஸ்ரீராமர் शबर्यादिष्टवर्त्मना சபரியினால் கூறப்பட்ட வழி பிடித்து पंपासरस्तटं பம்பா நதிக்கரையை प्राप அடைந்தார் ॥ ४३ ॥

॥ इति अरण्यकाण्डस्समाप्तः ॥

ஆரண்ணிய காண்டம் முற்றிற்று.

(To be continued)

ஸ்ரீராமஜெயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] பிரபவ—சித்திரை [இதழ் 9.

தாதித் தொழிலும் பெண் மக்களும்.

(பத்திராதிபர்)

நம் நாட்டில் நவநாகரிக வாழ்க்கையில் தலைசிறந்து விளங்கும் பல காரியங்களில் ஆங்கில வைத்தியமும் ஒன்றாகும். சித்த வைத்தியம் முதலியன இன்னமுயிர்த்திருக்கின்றனவென்றாலும் ஜன சமூகம் மட்டும் பொதுவாக ஆங்கில வைத்திய முறையைத்தான் பெரிதும் போற்றிவருகின்றதென்பது உண்மையே. ஆங்கில வைத்திய முறைகளில் நோயாளியை உபசரித்தல் என்பது முக்கிய அம்சமாகக் கொள்ளப்படுகின்றதுபற்றி இதற்கெனத் தாதித் தொழில் (Nursing) முறையில் பெண்மக்கள் அமர்த்தப்படுகின்றார்கள். பெண்கள் சுபாவத்தில் இரக்கத்தன்மை வாய்க்கப்பெற்றவர்களாதலால் அவர்களின் உபசரிப்பால் நோயாளிகளிடம் குணமடைவதில் சந்தேகமில்லை. நன்னோக்கத்துடனும் மெய்யன்புடனும் உதார சிந்தையுடனும் வேற்றுமையின்றி உபசரித்தலே தாதித்தொழிலெனப்படும்.

மேல் நாட்டினர் சமூக வாழ்க்கையில் ஆண் பெண் என்ற வேற்றுமை கொண்டாடும் வழக்கமின்மையால் இத்தகைய பொறுப்பு வாய்ந்த தாதித் தொழிலில் இளம் வயதுள்ள பெண்களை ஏற்படுத்தி வைத்தியசாலைகளிலும் வெளியிலும் நோயாளியான ஆடவருக்கும் தாராளமாகப் பணிவிடை செய்யும்படி அமர்த்துகின்றனர். ஹிந்துக்களின் சம்பிரதாயத்தில் இம்முறை அவ்வளவாக ஏற்கக்கூடியதாயிருக்கவில்லை. இன்றும் ஹிந்துக்களின் கிராம வாழ்க்கையைக் கவனிப்போமாயின் வயதில் முதிர்ந்த பாட்டியொருத்தி நோயாளியைக் கவனிக்க முன்வருவதை இன்றும் காணலாம். நாகரிக வாழ்க்கையின் பய

ளுக நகர வாசிகளுக்குக் கிராம வாசத்திலேற்படக்கூடிய சௌகரியங்கள் ஒன்றுமே கிடைப்பதில்லை என்பது வெளிப்படை.

இச்சந்தர்ப்பத்தில் அயல் பெண் ஒருத்தி, அதிலும் பருவ வயதினளாக, நோயாளியை உபசரிப்பதென்றால் இம்முறை அக்குடும்பத்திற்கே சற்றும் மனமொவ்வாததாக விருக்கின்றது. நமது பூர்வீக நூல்களை நோக்கின் மனைவி யெனப்படுவாள் நோயற்ற காலத்தில் சஞ்சீவியைப்போல் உதவுகின்றாளெனக் கூறப்பட்டுள்ளது கண்டு அத்தகைய உயர்ப் பதவியைத் தற்காலத்திய பெண்பால் ஒவ்வொருத்தியும் ஏன் அடையக்கூடாதென்பதே நமது கேள்வியாகும். பெண்மக்களுக்கு அனுவசியக் கல்வியை பயிற்றுவிப்பதில் செலவிடும் நேரத்தை அவர்கள் தங்கள் குடும்பத்திற்குத் தாங்களே தாதிப்பெண்களாக நடந்துகொள்ளக் கூடிய நிலைமையடையச்செய்வதில் நம்மவர்கள் சிரத்தை யெடுக்காதவரை இல்லற வாழ்க்கையைச் சிறப்பிக்கக்கூடியவளான பெண்பாலுக்கு முக்கிய அம்சமொன்றும் சிறந்த கடமையிலொன்றும் குறைவென்றே கருதவேண்டியிருக்கிறது.

சுகாதாரம், நோயாளியை உபசரித்தல் என்ற இருவகைகளிலும் நம் பெண் மக்கள் தேர்ச்சி பெறுவார்களாயின் இதைத் தங்கள் குடும்பத்திற்கோ அல்லது தங்கள் சமூகத்திற்கோ உபயோகித்து மேன்பாடடைவார்களென்பதில் தடையென்ன விருக்கிறது. நோய் வாராது தடுக்க ஆரோக்கிய வழியும் நோயுற்ற பின் அதைத் தீர்க்க உபசரிப்பும் பெண்மக்களிடத்தில்தான் அமையவேண்டுமென்றி ஆடவர்களின் ஏட்டுப் படிப்பால் மட்டும் ஒன்றும் நடைபெறவே மாட்டாது. வீட்டிற்கு யஜமானியும் கணவனுக்குப் பாதி உடலும் மக்களுக்குத் தாயும் லாப நஷ்டங்களுக்குப்பொறுப்புள்ளவளுமான பெண்பால் தன் குடும்பத்திற்குத் தாதிப் பெண்ணாக அமையக்கூடிய தன்மை கொண்டிருப்பின் அக்குடும்பத்தில் நோய் நொடிகள் எட்டியும் பார்க்கமாட்டாவென்பதே நமதபிப்பிராயம். உணவைத் தயாரித்து உண்டி யளித்து ஏற்றவாறு உபசரிக்கக்கூடிய பணிவிடை ஒன்றுமறியாதவளாக விருந்து தான் நோயுற்ற காலத்தில் அயல் நாட்டு முறையில் அயல் பெண் ஒருத்தி தனக்குபசரிப்பதென்ற நிலைமையை ஓர் ஆடவன் அடைவானேல் அவனது துர்ப்பாக்கிய நிலைமையை என்னென்றுரைப்பது? தங்கள் குடும்ப வாழ்க்கைக் கனுகூலமாயும் பெண்மக்களுக்கு உயர்ப் பதவியை யளிக்கக்கூடியதாயுமுள்ள வழியில் பெண் கல்வியை யபிவிருத்தி செய்ய மாட்டாது பெண்களுக்கு சமத்துவ மளிப்பதாயும் உயர் நிலையை யளிக்கப்போவதாயும் பெண் கல்வியை யபிவிருத்தி செய்துவிட்டதாயும் ஆடவர்கள் பகற் கனவு கண்டுகொண்டிருக்கும் வரையில் பெண்மக்களின் ஸ்தானம் அதற்கேற்ப உச்ச நிலையில் ஸ்தாபிக்கப்பட்டுக் குன்றிவிட்ட விளக்காக நம் பாரத நாட்டில் ஒளிவீசப்போவதில்லை என்பதை ஸ்திரீ வித்தியாபிமானிகள் இனியேனும் சிந்திப்பா

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

பி. ஏ. (B. A.)

(நன்மை நாடி)

தென்னிந்தியாவில் சில விடங்கள் ஆற்றங்கரையோரத்தி லிருப்பதனாலும், மற்றும் சில காரணங்களாலும் செழிப்புற்றதாய் பார்வைக்கு மிக்க அழகுபொருந்தியவையாயிருக்கின்றன. 'லக்ஷ்மிபுரம்' எனனும் கிராமம் இத்தகைய ஓரிடத்தில் அமையப்பெற்றிருந்தது.

சாம்பசிவ அய்யருக்கு இப்பொழுது அறுபது வயதாகிவிட்டது. கண்கள் முற்றிலும் தெரிவதில்லை. ஆனால் குருடன் கைக்கோலைப்போல் வெகு நாட்களுக்குப் பிறகு அவருக்கு ஒரு புதல்வன் பிறந்திருந்தான். அதோ பாருங்கள்! அந்தப் புதிய சாலைக் கடைசியில் ஓர் பங்களா காணப்படுகிறது. தோட்டத்தில் பூஞ்செடிகளின் நடுவில் சாய்வு நாற்காலியில் தனது வயது முதிர்ந்த தந்தையாரை வீற்றிருத்தித் தான் பணிவுடன் பக்கத்தில் நின்று ஏதோ பேசிக்கொண்டிருக்கிறான். இவன்தான் சாம்பசிவய்யருடைய அருமைப் புதல்வனாகிய கோதண்டபாணி. சாம்பசிவய்யர் லக்ஷ்மிபுரத்து ஜமீன்தார். இவருடைய பத்தினி இறந்து இரண்டு வருஷங்களாயின. அவளிருக்கும் வரையில் தன் மகனை லக்ஷ்மிபுரத்திற்குச் சமீபத்திலுள்ள பட்டணத்திலிருக்கும் ஹைஸ்கூலுக்கு (High School) இரட்டை மாட்டு வண்டியில் அனுப்பிக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பிறகு கோதண்டபாணி வீட்டை விட்டு வெளிக் கிளம்புவது கஷ்டமாகிவிட்டது. வயது முதிர்ந்த தந்தையாரை எவ்வாறு தனிமையாக விட்டுச் செல்வது? அவன் எப். ஏ. (F. A.) படிப்பும் முடிந்துவிட்டது. மேற்படிப்பு படிக்கவேண்டுமானால் மதுரை, திருச்சி முதலிய விடங்களுக்குப் போய் ஹாஸ்டல்களிலிருந்துகொண்டு படிக்கவேண்டுமே யல்லாது வேறு வழி கிடையாது. சில ஹாஸ்டல்களில் நடக்கும் அக்கிரமங்களை சாம்பசிவய்யர் நன்கறிவார். ஆகலால் அத்தகைய ஹாஸ்டல்களிலிருந்து மேற் படிப்பு படித்து சீலத்தையும் உடம்பையும் கெடுத்துக்கொள்வதைவிட படிக்காமலே யிருக்கலாமென்பது சாம்பசிவய்யருடைய கொள்கை. சாம்பசிவய்யர் பழைய பழக்க வழக்கங்களைத் தழுவியவராதலாலும், அவமானத்திற்குப்பயந்தவருமானபடியால், ஸ்திரீகளுக்காக ஹாஸ்டல்கள் ஏற்பட்டு அவர்கள் சுயேச்சையுடனும் சுதந்திரத்துடனும் நடக்கும் இக்காலத்திலுங்கூட சாம்பசிவய்யர் தம் மகனை அனுப்பத் துணியவில்லை.

கோதண்டபாணி படித்துக்கொண்டிருக்குங் காலத்தில் அவனுடைய அத்தை ஜானகியம்மாள் வீட்டிற்கு இடைநேரத்து ஆகாரம் புசிக்க வருவது வழக்கம். ஜானகியம்மாள் விதவை. தற்காலம் அவள் தனது சொந்த பங்களாவில் தன் மாமியாருடனும், தனது ஏக புத்திரியான சாவித்திரியுடனும் வசித்துக் கொண்டிருந்தாள். கோதண்டபாணி படிப்பு விட்டபிறகு இங்கு வருவது அரிதாயிற்று. ஏதாவது வியாபார நிமித்தமாய் வந்தால்தான் உண்டு.

சாவித்திரி தன் வீட்டிற்குச் சமீபத்திலுள்ள பெண்கள் பாடசாலையில் ஆறுவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தனள். சாவித்திரி இயற்கையாகவே மிக்க புத்திசாலியானபடியால் தாயார் கற்பித்து அவள் கற்கவேண்டுமென்கிற குறை அவளிடத்தி லிருக்கவில்லை. ஜானகியம்மாளுக்குத் தற்காலத்து நாகரிகத்தின்படி தன் மகளும் பி.ஏ. பாஸ் பண்ண

வேண்டுமென்று சிற்சில சமயங்களில் தோன்றியபோதிலும், மேனாட்டு நாகரிகம் முதலியவற்றில் முன்னேற்றமடைந்த சென்னை முதலிய விடங்களில் பெண்ணைப் படிக்கவிட்டால் ஸ்திரீகளுக்குரிய பெண்மையான குணங்களுக்கு இழிவு வருமோவென்று அஞ்சினாள். ஆகலால் பி. ஏ. பாஸ் பண்ணின வரனைத் தேடித் தன் மகளைக் கொடுக்கவேண்டுமென்று ஜானகி அம்மாள் மிக்க ஆவல் கொண்டாள்.

இன்று சாவித்திரி, ஒரு பீரியட் முன்னதாகவே பாடசாலைவிடப்பட்டமையால், மூன்று மணிக்கே வீடுவந்து சேர்ந்து கேட்டிற்குள் நுழைய, திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். கோதண்டபாணி விரைவாய் கேட்டை (gate) நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். வெகு நாட்களாகப் பார்க்காமலிருந்து பார்த்ததனாலோ அல்லது தான் விரைவாய் யௌவன பருவத்தை அடைந்து வருவதனாலோ, சாவித்திரி வெட்கமடைந்து தலையைக் குனிந்து கொண்டாள். கோதண்டபாணி அதை யுணர்ந்தோ அல்லது வேறு காரணத்தினாலோ கேட்டைத் தாண்டி வெளியிற் போய்விட்டான். ஆயிற்று; சாவித்திரியின் மனம் ஆழ்ந்த யோசனையிலாழ்ந்துவிட்டது. "என்னிடத்தில் சகஜமாய் எவ்வளவோ விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருந்தவனான அம்மான் இன்று ஏன் இவ்வளவு அவசரமாய் என்னைப் பார்க்காமலே போகவேண்டும்? ஒரு சமயம் என்பேரில் கோபமாயிருக்குமோ? சே! காரணமே இல்லை. எவ்வளவு பொறுமையுடையவன்; என்பேரில்தான் தப்பு. நான் ஏன் அவ்வளவு பயந்து தலையைக் குனிந்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு படித்தால்தானென்ன? எனக்கிந்த வெட்கத்தை விட முடியவில்லையே! பெண்ணாய்ப் பிறப்பதே சில விஷயங்களுக்குப் பிசகாயிருக்கின்றதுபோல் தோன்றுகிறது"

இவ்விதம் சிந்தித்துக்கொண்டே சாவித்திரி புஸ்தகங்களை வைத்துவிட்டு, கைகாலலம்பி, பாட்டி அன்புடன் கொடுத்த சிற்றுண்டியைத் தின்றுவிட்டு வெளியில் வந்தாள். தன் தாயார் ஏதோ யோசித்துக்கொண்டே ஒரு மூலையிலிருக்கும் நாற்காலியில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திகைத்திட்டு "அம்மா. நான் பார்க்கவேயில்லை! ஏன் பேசாமல் உட்கார்ந்திருக்கிறாய்?" என்றாள். தாயார் "என்னவோ! நீ பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் நான் கவனிக்கவில்லை."

சாவித்திரி—அவ்வளவு யோசிக்கக் காரணமென்ன?

தாயார்—கோதண்டபாணி வந்திருந்தான். அவன் தான் மேலே படிக்கப்போவதில்லை என்று உறுதியாய்ச் சொன்னான். அதுவுமன்றி பி.ஏ. க்குப் படிப்பதைப்பற்றி பேசினதில் அவன் எண்ணங்கள் எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. நானும் உன் தகப்பனார் வாக்குறுதி செய்திருந்ததைத் தடுத்தாவது உன்னை பி. ஏ. பாஸ் பண்ணின வரனைத் தேடிக் கொடுக்கப்போவதாகக் கோபத்துடன் சொல்லிவிட்டேன். அதைப்பற்றிதான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

சாவித்திரி கொஞ்சம் சிரித்து மௌனமாயிருந்தாள். ஜானகியம்மாள் வெகு நேரம் வரையில் அவளை உற்றுப் பார்த்து கவனித்தாள். அவள் முகத்தில் யாதொரு விதமான குறிகளும் காணப்படவில்லை. அவள் வாயினின்றும் மறுமொழியும் ஒன்றும் வெளிப்படவில்லை. இம்மட்டும் இக்கலியாணத்தைப்பற்றி தன் பெண்கள் எதிரில் பேச வாரம்பித்ததே எத்தனையோ ஆண்டுகளாக விருத்தி செய்து வரும் பெண் கல்வியின் பயனாயிருக்க, ஜானகியம்மாள் நினைத்தபடி நமது பெண்கள் இவ்விவாக விஷயம் தம் ஆயுளின் ஓர் முக்கிய

மான சாதனம் என்று தெரிந்துகொண்டு தம் மனதிலுள்ள எண்ணங்களைத் தெளிவாய் எடுத்துரைக்க இன்னும் எவ்வளவு காலத்துப் பயிற்சி வேண்டுமோ!

மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. சாவித்திரியின் பரீட்சை முடிந்துவிட்டது. பரீட்சையில் பாஸாகும் ஆ[illegible]. கேட்கவும் வேண்டுமோ ஜானகியம்மாளின் [illegible]மையை! இருந்த போதிலும் இப்பொ[illegible]ளுக்குக் கவலை யொன்றும் குறையவில்லை. [illegible]பெண்கள் விவாகத்திற்குத் தகுதியான காலமென்றால் இது தான் என்பது அவளபிப்பிராயம். பதினாறு வயது வரையில் எப்படியோ நல்லதனமாய்ப் பழையகாலத்து மனுஷியான மாமியாரை சரிப்படுத்தித் தன் மகளை இம்மட்டும் படிக்கவைத்தாள் இனி அவளை வழிப்படுத்துவது அசாத்தியம். ஜானகியம்மாள் தன் கணவனிருந்த காலம் முதற்கொண்டு ஒரே விதமாக தீர்க்காலோசனையோடு தானே சகல காரியங்களையும் நடத்தி வருகிறாள். "அப்படியிருக்க என் அருமைப் புதல்வியாகிய சாவித்திரியானவள் எனக்கு உயிருக்குயிராயிருக்க, அவள் விவாக விஷயத்தில் அவசரப்பட்டால் என்ன கெடுதல் நேரிடுமோ? கேவலம் அற்பமான கோபத்திற்கு வசப்பட்டுக் கோதண்டபாணியினிடம் என்னென்னவோ பிதற்றிவிட்டேனே' என்று சில சமயங்களில் தோன்ற, அவள் மனதே அவளை உறுத்தலாயிற்று.

இவ்வாறு யோசிக்க இரண்டு காரணங்களுள்ளன. முதலாவது, சாவித்திரியின் ஜாதகத்திற்கு வரன் கிடைப்பதே துர்லபமாயிருந்தது. சரி, ஜாதகமே பார்க்கவேண்டாமென்றாலோ வீட்டிற்குப் பெரியவரும், காலஞ்சென்ற தன்கணவருக்குப் பரமபூஜ்யமானவருமான மாமியாருடைய மனதைப் புண்படுத்த வேண்டியதாகும். எவ்வளவு படித்திருந்த போதிலும் இவ்விஷயங்களிலெல்லாம் ஜானகியம்மாளுக்கு ஜாதி ஆசாரங்களை ஒழித்துவிட அவ்வளவுதைரியம்போதவில்லை. இரண்டாவது காரணமாவது சாவித்திரியின் தகப்பனார் இருக்கும்பொழுது அவளைக் கோதண்டபாணிக்கே கொடுப்பதாக இருதிறத்தாரும் பேசி நிச்சயித்திருந்தனர். இப்பொழுது திடீரென்று கேவலம் ஓர் பி. ஏ. யைப் பார்த்து இவ்வளவு நல்ல வரனை விட்டுவிடுவது என்பதை உலகத்தார் நம்புவது நிச்சயமில்லை, தன் மாமியாரோ நம்ப மாட்டாள்! வீணாகத் தன் அருமை மகளுக்கு உலகம் ஏதாவது கெட்ட பெயர் வைத்துவிடும் என்பதில் ஐயமேயில்லை! 'சே! என்ன தப்பிதம் செய்துவிட்டோம்' என்று அநேக விதமாக ஜானகியம்மாளுக்கு யோசனை ஏற்பட்டது. பாபம்! ஆனால் எல்லாவற்றிற்கும் காரணமும் தன் அருமைப் புதல்வியுமான சாவித்திரியினிடம் மாத்திரம் தன் எண்ணத்தை உள்ளதுள்ளபடி எடுத்துரைத்து அவள் எண்ணங்களைத் தெரிந்துக்கொண்டு பின்பு தக்கவாறு யோசித்து, அதன் பிறகு காரியத்தை நடத்த அவள் மனம் துணியவில்லை! அவ்வளவு சுயஅபிமானம்! இது நமது தேசத்தியத் தாய்மார்களில் காணப்படும் ஓர் குறைவேயன்றி வேறென்ன? சாவித்திரி என்ன குழந்தையா? யோசித்து யோசித்துப் பிறகு ஜானகியம்மாள் சாவித்திரியைக்கேட்காமலே "வரன் தேவை" என்று அவள் பெயர் ஜாதகத்துடன் சமாசாரப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தினாள்.

இந்த விடுமுறையில் சாவித்திரி முதலியவர்கள் திருப்பதி யாத்திரை செய்து வந்தனர். இன்று வெள்ளிக்கிழமை. சாவித்திரி எண்ணெய் தேய்த்து ஸ்நானம்செய்து சீக்கிரம் போஜனம் செய்துவிட்டாள். போஜனம் செய்யும்பொழுது அவள் பாட்டியார் அருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நாளைக்கு சனிக்கிழமை யாதலால் திருப்பதி போய்வந்த

தன் பொருட்டு சமாராதனை செய்வதாக நிச்சயிக்கப்பட்டிருந்தது. பாட்டியார் "ஏனம்மா சாவித்திரி, கோதண்டபாணி ஏன் நாலைந்து மாதங்களாக நம்மவீட்டிற்கு வருவதேயில்லை? இன்று உன் தாயார் ஜவுளிக்கடையிலிருந்து வந்த பிறகு அந்த வண்டியில் நீ லக்ஷ்மிபுரம் போய் மாமாவையும் பார்த்துவிட்டு, கோதண்டபாணியைச் சாப்பிட அழைத்துவிட்டு வருகிறாயா?" சாவித்திரி மெல்லத்தலையை அசைத்தாள். தன் தாயாருக்கும் கோதண்டபாணிக்கும் நடந்த வார்த்தைகளால் அவன் இங்கு வருவதை நிறுத்திவிட்டானென்பது அவள் நன்குணர்ந்திருந்தும் தன் பாட்டியாருக்கு இதைப்பற்றித் தானேசொல்வது தப்பென்று தோன்றியபடியால் அவள் பேசாமலிருந்துவிட்டாள். மணி ஒன்பதரை இருக்கும். ஜானகியம்மாள் இரட்டைமாட்டுவண்டியில் வியாபாரஞ்செய்த ஜவுளிகளுடன் வந்திறங்கினாள். சாவித்திரியும் தாயாரை எதிர்பார்த்துக்கொண்டே வாசற்படியில் நின்றுகொண்டிருந்தாள். வண்டிக்காரன் மூட்டையை உள்ளே கொண்டுவந்து வைத்துவிட்டு 'அம்மா, வண்டி அவுக்கட்டுங்களா?" என்றான்.

அதற்கு சாவித்திரி "வேண்டாம், வேண்டாம்; சற்று இரு" என்று சொல்லிவிட்டு உட்சென்று தாயாரிடம் "அம்மா, நாளைக்கு அம்மாஞ்சியைச் சாப்பிட அழைத்துவிட்டு வரும்படி பாட்டிசொல்லுகிறார். போகட்டுமா?" என்றாள். ஜானகியம்மாள் சற்று யோசித்துக்கொண்டிருந்தாள். என்ன மறுமொழியளிப்பாளோ என்று திகிலுடன் காத்திருந்தாள். அதற்குள் பாட்டியம்மாள் உள்ளிருந்துவந்து "அடே முருகா, சற்றிரு; வண்டியை அவிழ்க்காதே. குழந்தை வெளியிற் போகவேண்டும்" என்றாள். உடனே ஜானகியம்மாள் மகளைப் பார்த்து "சாப்பிட்டாயா?" என்று கேட்க, ஆயிற்றென்று பதிலளித்தாள். "அப்படியானால் சீக்கிரம் புடவையை யுடுத்திக்கொண்டு போ, இருட்டுக்கு முந்தித் திரும்பிவா. எதிர்வீட்டுமீனுவைத்துணைக்கு அழைத்துக்கொண்டு போ" என்று சொல்லிவிட்டு ஜானகியம்மாள் தன் காரியத்தை நாடிச் சென்றனள். சாவித்திரிக்குத் தன்தாயாரிடமிருந்து அரை மனதுடனாவது போக உத்தரவு கிடைத்ததே என்று வெகு சந்தோஷமாகிவிட்டது. அதற்குள் பாட்டியார் பெட்டியைத் திறந்து ஆடையை எடுத்துக் கொடுத்தார். சாவித்திரி எப்பொழுதும் கணக்காகத்தான் நகைகளை யணிவாள். இன்று பாட்டியாரின் திருப்திக்காக வைர மாட்டல் ஒன்று அதிகமாய் அணிந்திருந்தாள். நமது சாவித்திரி இயற்கையிலேயே மிக்க அழகு வாய்ந்தவள். அதிலும் இன்று அவள் பாட்டியார் கண்ணிற்கு நட்சத்திரம்போல் காணப்பட்டாள். எதிர் வீட்டு மீனு என்னும் ஆறேழு வயதுள்ள சிறுமியுடன் சாவித்திரி வெகு உற்சாகமாய்ப் புறப்பட்டாள்.

"கோதண்டம்! கோதண்டம்! வண்டிச்சத்தம் கேட்கிறது. யார் வருகிறார் பார்" என்று சாவித்திரியின் மாமா ஈஸிசேரிலிருந்தபடியே கூவினார். உடனே உள்ளிருந்து கோதண்டபாணி வர அவன் கண்ணிற்கு நமது சாவித்திரி தென்பட்டாள். அவளைக்கண்டதும் 'இவள் யார்? தேவலோகத்திலிருந்தும் வந்த கன்னிகையோ" என்று திகைத்து, கோதண்டம் சற்றுத் தயங்கினான். அவளைப்பார்த்து நாட்களானதாலும், அவளைப்பற்றி சிந்திக்காமலிருக்க வேண்டுமென்று அவன் முயன்றுகொண்டிருந்தமையாலும், அவனால் உடனே பேச இயலவில்லை. "வா" என்றழைத்துவிட்டுத் தோட்டத்தில் மாமாவுக்கருகிலேயே நாற்காலியைப் போட்டு அவளை உட்காரச் செய்தான். மாமா இப்பொழுது மிகவும் பலவீனதிசை அடை

திருப்பதைக்கண்டு சாவித்திரி மிக்க வருத்தப்பட்டாள். பிறகு மெல்ல வார்த்தைகள் நடக்க சாவித்திரிக்குச் வெட்கம் தெளிந்தது. கோதண்டபாணியும் தான் கேட்க உத்தேசித்திருந்த இரண்டொரு கேள்விகளைக் கேட்க இதுவே சமயமென்று அவனுக்குத் தோன்றியது. மாமா இவ்விருவரையும் உத்தேசித்து ஒரு பெருமூச்செறிந்து "என்னவோ; நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்றபடி, நான் கண் குளிரக் கண்டு களிக்கக் கண்களைத் தான் இழந்தேன் என்றாலும் உங்கள் சந்தோஷ வார்த்தைகளைக் காதாரக் கேட்டாவது மகிழலாமென்றாசை கொண்டிருந்தேன். அவ்வாசைக்கும் இப்பொழுது இடமில்லாமற் போய்விட்டது. என்னவோ; இன்று நீங்களிருவரும் ஓரிடத்தில் சந்தித்துப் பேசிக்கொண்டிருப்பதே என் மனதிற்கு எவ்வளவோ சமாதானத்தைக் கொடுக்கிறது. இப்பவும் ஜானகி மனது வைத்தால் எல்லாம் நன்றாகத்தான் முடியும். நீ என்ன அபூர்வமாய் இவ்வளவு தூரம் வந்துவிட்டாய்?" என்றார்.

கோதண்டபாணி—அம்மா இருக்கும்பொழுது வந்ததுதான். அதற்குப்பிறகு இப்பொழுதுதான் முதல் தடவை.

சாவித்திரி:—அப்படியல்ல, இத்தனை நாளாய் இந்த ரோட்டு ரொம்பக் கெட்டுப்போயிருந்தது. அம்மாவுக்கோ பத்து மைல் வண்டியில் வருவதென்றால் தலைவலி. நிஜம்தான், மாமா, எனக்கு வண்டியில் உட்கார்ந்து வந்ததுபோலவே யில்லை. சாலையின் இருபக்கங்களிலுமுள்ள மரங்கள் நிழல் கொடுக்க சாலை இப்பொழுது வெகு அழகாயிருக்கிறது.

மாமா:—கோதண்டபாணி இதற்காகத்தான் ஆறு மாத காலமாய்ப் பாடுபட்டுக்கொண்டிருந்தான். ஒருவாறாய் வழி பிறந்தது.

சாவித்திரி:—எங்கள் நெல் வந்தபோதே வண்டிக்காரர்களெல்லோரும் லக்ஷ்மிபுரத்து ரோட்டு ரிப்பேர் ஆனதைப்பற்றிச் சொன்னார்கள். இது எவ்வளவு உபகாரமான காரியம்!

கோதண்டபாணி உள்ளே போனான். சாவித்திரி மாமாவிடம் நாளைச் சாப்பாட்டிற்கு போஜனத்திற்கு அழைப்புக் கடிதம் (invitation) கொடுத்துவிட்டுச் சிறுமி மீனுவுடன் பூஞ்செடிகளின் அழகைப்பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தாள். கோதண்டபாணி நல்ல சுவை நிறைந்த மாம்பழம், வாழைப்பழம் முதலிய கனிவர்க்கங்களும், நல்ல வீட்டுமோரும் கொண்டுவர எல்லோரும் உட்கார்ந்து புசித்தனர். மாமாவுக்குச் சற்று கண்ணயர்ந்தது.

சாவித்திரிக்கு அங்கிருந்த ரோஜாப் புஷ்பங்களின் பேரிலேயே கண். "ரோஜாப் பூ பின்னலில் வைத்துப் பின்ன நன்றாயிருக்கிறது. இதழ்கள் பெரிதாயிருக்கின்றன. மீனுவுக்குப் பின்னல்போட்டுக்கொள்ளுவதில் வெகு ஆசை; அவளுக்காகக்கொஞ்சம் பூஎடுத்துக்கொள்ளட்டுமா please" என்று சாவித்திரி சொல்ல, கோதண்டபாணி—'இதற்கு இவ்வளவென்ன? வேண்டியது எடுத்துக்கொள். எடுப்பாரில்லாமல் வாடி உதிர்ந்து வீண் போகிறதேயல்லாமல் உன்னைத்தவிர என் தோட்டத்துப் புஷ்பங்களை இவ்வளவு விருப்பத்துடன் கேட்பார் இருப்பதாய் இதுவரையில் ஒருவரும் காணப்படவில்லை. நீ வந்து கேட்டதும் என் பெரும் பாக்கியமென்றே நினைக்கிறேன்.

சாவித்திரிக்கு இவ்வார்த்தைகள் தேவாமிர்தம்போல் தோன்றியன! மேலும் ஆழ்ந்த அர்த்தம் உள்ளதுபோலும் தோன்ற மெல்லத் தலையை உயர்த்திக் கோதண்டனைப் பார்த்தாள். அவன் சிரித்தான்.

கோதண்ட:—நான் சிரமப்பட்டு போடச்செய்த சாலையும் பிடித்துவிட்டது. நான் என்

கையால் வளர்த்த செடிகளின் பழ புஷ்பங்களும் பிடித்துவிட்டன. சரி; இந்தச் சாலையில் என் பெயரால் Bus Service வைக்கப்பட்டால் அதுவும் பிடித்துவிடுமல்லவா?

சாவித்திரி "Oh. Pani, how kind of you!" என்று ஆவேசத்துடன் ஆனந்தபரவசமாய் ஹஸ்தாக்ஷேபனம் செய்தாள். கோதண்டம் ஒரு புறம் தான் பெரிய குற்றவாளிபோலும், ஒரு புறம் தான் பிரம்மானந்தத்தில் மூழ்கிப் பரவசமானவனைப்போலும் காணப்பட்டான்.

சாவித்திரி—இந்தப் புஷ்பங்களுக்காகவாவது நான் தினம் ஒரு முறை பஸ்ஸில் இங்கு வருவேன்.

கோதண்டபாணி—அசடே! வீண் ஆசைப் படாதே. பஸ் ஸர்வீஸ் வைத்துவிட்டால் உன் தாயார் கட்டோடு உன்னை இவ்விட்டிற் கனுப்பமாட்டாள். B. A. பாஸ் பண்ணினவர்களுக்கும் பஸ் ஸர்வீஸ் வைத்தவர்களுக்கும் இடையில் ஆகாசத்திற்கும் பூமிக்கும் இடையிலுள்ள வித்தியாசமிருக்கிறது என்பது தான் அத்தையின் கொள்கையாகும்.

சாவித்திரி:—பாணி, இந்த அர்த்தமில்லா வார்த்தைகளின் காரணத்தால்தானா நீ எங்கள் வீட்டிற்கு வருவதை யொழித்தாய்? இது உன் சுபாவத்திற்குத் தகாது. எப்படியானாலும் நம்மிலுள்ள ரத்த சம்பந்தமான உறவை சிநேகத்திற்காவது நிலை காத்துக்கொள்வேன். எனக்கு என் ஆயுளை வேறுவிதமாகக் கழிக்கும்படிவந்தாலும் உன்னுடைய மேலான சுபாவகுணங்களும், அழகிய இப்புஷ்பங்களும், இனிய கனிவர்க்கங்களும் என் மனதைக் கவர்ந்துசென்றதுதான்.

கோதண்டபாணி—இது ஒரு பெரிய compliment என்றே நினைக்கவேண்டும். ஆம்; நீ பேசுவது சிறுகுழந்தை பேசுவது போலிருக்கிறது. இது உதவாது. உன் தாயாரோ சமாசாரப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி B. A. பாஸ் பண்ணினவரைத் தேடிக்கொண்டிருக்க நீ என்னவோ பிதற்றுகிறாயே. எவ்வளவுதான் படித்தாலென்ன, என்ன இருந்தாலென்ன நம்மில் பெண்களுக்குப் பூரண மனோபலத்துடன் கூடிய தைரியமிருப்பது மிக அரிதுதான்; பார்க்கலாம்.

சாவித்திரியின் முகம் பார்த்தாலன்றோ தெரியும்! தாயார் தான் அறியாமல் இவ்வளவு பிடிவாதத்துடன் வேறு வரனைத் தேடமாட்டாளென்றே இதுவரையில் எண்ணியிருக்க, திடீரென்று அவள் காதிற்கு இவ்வார்த்தைகள் இடிமுழக்கம்போல் தோன்றியது. தான் மடியில் பறித்து வைத்திருந்த புஷ்பங்களை எல்லாம் நழுவவிட்டுவிட்டாள். மீண்டு மெல்ல அவைகளைப் பொறுக்கித் தன் மடியிற் போட்டுக்கொண்டாள். கோதண்டபாணிக்கு சாவித்திரி இவ்விஷயம் அறிந்திருப்பாளென்றே எண்ணம். அவனுக்கு அவளுடைய நிலைமையைக் கண்டு பரிதாபமுண்டாயிற்று. அவன் சாவித்திரியைநோக்கி "எந்தக் காலத்திலும் நமது தேசத்துப் பெண்கள் தைரியத்தை இழப்பது அனர்த்தத்துக்கே இடமாகும். ஒன்று, நீ உன் இஷ்டப்படி நடக்கும்படி கேட்கவேண்டும், அல்லது தாயார் சொல்லை சிரஸா வகித்து, மனதைத் தக்கவாறு திடப்படுத்திக்கொள்ள வேண்டுமேயன்றி, 'ஆற்றிலொருகால் சேற்றிலொருகால்' என்றிருப்பது விவேகசாலிகள் என்பவர்களுக்கு சோபிக்காது. உன் தாயார் உன்னைக் கலியாணமில்லாமல் வைப்பதும் சமுசயமே; ஆதலால் இனி நாம் ஒருவாறுப் பிரிந்து விடுவதே இருவருக்கும் நலம் அல்லவா?"

சாவித்திரியின் மனது தன்னுடைய சிறந்த கிரணங்களுடன் மேற்கு திசையை நோக்கி ஓடிக்கொண்டிருந்த தினகரனுடன் ஓடிக்

கொண்டிருந்தது. எங்கும் சிவந்த ஒளி பரவ, சாவித்திரியின் சிவந்த நிறம் கொண்ட கராச்சிப்பட்டு பளபளவென்றுமின்ன, அவள் ஒரு சிலையைப்போல் அசைவற்றுப் பூஞ்செடிகளின் நடுவில் நின்றுகொண்டிருந்தாள். தான் உயிருடனிருப்பதே அனாவசியம் என்று அவளுக்குத் தோன்றலாயிற்று. ஆனால் அவளுக்கு எதுவும் சரேலென்று செய்து விடுவதில் இஷ்டமில்லையாது. ஆகையால் மனதை ஒருவாறாய் திடப்படுத்திக்கொண்டு எப்படியோ தேறுதலடைந்து தலையை நிமிர்த்தி நான்கு புறமும் பார்த்தாள். கோதண்டபாணியும் ஆழ்ந்த யோசனையிலிருந்தபடியே அவளது அழகு வாய்ந்த வடிவத்தைத் தன்னுள்ளத்திற் பதிய வைத்துக்கொண்டிருந்தான். இருட்டுக்குமுன் வீடுபோய்ச்சேரவேண்டுமென்கிற எண்ணம் உதிக்கவே மெல்லமெல்ல அடி எடுத்துவைத்துக்கொண்டே கிளம்பலானாள். கண் பார்வை கொள்ளாமலே "நான் போய்வருகிறேன் அம்மாஞ்சி. என்னை மன்னித்துவிடுங்கள். நாளைக்கு அவசியம் சாப்பிட வரவேண்டும். மாமாவுக்கு இன்னும் ஜுரமா?"

கோதண்டம்—ஆம். எழுப்பவேண்டாம். நாளைக்கு அவர் உடம்பு சௌஸ்தமாயிருந்தால் நான் அவசியமாக வருவேன்.

என்று சொல்லிக்கொண்டே கேட்டுப்பக்கத்தை (gate) நோக்கி நடக்கலாயினர். வண்டியில் ஏறினதும் சாவித்திரி கோதண்டபாணியைப்பார்த்து, "நாளைக்குக் கட்டாயமாய் வராமலிருக்கலாமல்லவா?" என்றாள்.

கோதண்டம்—எதற்கு? சற்று யோசித்தாயானால் நான் வருவது அனாவசியமென்றே தோன்றும். என் பக்கமாய் நீ சற்று யோசிக்க வேண்டாமா? தயவு செய்து அத்தையினிடம் ஒன்றும் சொல்லாதே. Good-bye Savithri. You will receive a wedding present from your affectionate cousin; you'll accept it, won't you?"

சாவித்திரி—Certainly! But—you shouldn't tease a poor girl like that. Good-bye.

வண்டி செல்லத் தொடங்கியது. கோதண்டபாணி வீட்டை நாடிச் செல்லலானான்.

வீடு வந்து சேர்ந்ததும் சாவித்திரி தான் கொண்டுவந்த ரோஜாப் புஷ்பங்களால் ஸரஸ்வதி படத்தை அலங்கரித்துவிட்டு, வீணை எடுத்து வைத்துக்கொண்டு இனிமையான குரலுடன் மிகவும் உருக்கமாகப் பாடவாரம்பித்தாள். பக்தி ஒருபொழுதும் வீண் போகாதல்லவா!

எவ்வளவு சிரமப்பட்டு ஜானகியம்மாள் சாவித்திரிக்காக இவ்வரனைத் தேடியிருந்தாள். B. A. தேறியவன், தகப்பனுக்கு ஒரே பிள்ளை. வயது இருபத்தைந்து இருபதுதானிருக்கும். வரன் தேடியதைவிட தனது மாமியாரை அதற்கு இசையும்படிச் செய்ததில் ஜானகியம்மாளுக்கு சிரமம் அதிகம்! "ஆசாமி பார்க்க கட்டைகுட்டையாயிருந்தாலென்ன? நம்ம குழந்தைக்குச் சிறுவன் கோதண்டபாணி தான் ஜதை. எல்லாத்தையும் விட்டு B. A. யை என்னவோ பிடித்திருக்கிறாயே. உன் தமயனுக்குப் பிறகு கோதண்டபாணிக்கு முப்பது, நாற்பதினாயிரம் ரூபாய் சொத்து உன் குழந்தைக்கு வருவதையும் கவனிக்காமல் இது என்ன அவசரக் காரியம்?" என்று பாட்டியார் இரைச்சலிட்டபடியே யிருந்தார்.

அதற்கு ஜானகியம்மாள்—"அது எவ்வளவு நாளைக்கு நிற்கும்? கல்விதான் அழியாத செல்வம். கதர் வியாபாரம் ஒன்றும்; Bus வேறே வைக்கப்போகிறானாம், இதுவும் என்னவோ உபயோகமற்றதல்லவாம்; மனிதனுக்குப் பணம் எத்தனை நாளைக்கு நிற்கும்? இப்படி

யெல்லாஞ் செய்தால்? எல்லாவற்றையும் யோசித்துத்தான் இந்த வரனை நிச்சயித்தேன்" என்று படபடப்புடன் பதற் சொல்லி மாமியாரை அடக்கிவிட்டாள். இப்பொழுது தேதி நிச்சயங்கூட ஆகிவிட்டது, கலியாணம் இன்னும் எட்டே நாள் தானிருக்கிறது. வரனுக்குத்தகப்பனைத் தவிர வேறு உறவினர் யாரும் இல்லையாம். சாவித்திரிக்கும் வேண்டுதல் (பிரார்த்தனை) இருந்தமையால் பதுமபுரம் என்னுமிடத்திற்போய் ஒரு நாளைக்குக் கலியாணக் காரியம் நடந்து வருகிறது. சம்பந்திகள் வெகு காலமாய் மேற்கு நாடுகளிலிருந்து கொண்டிருக்கிறபடியால் பழக்க வழக்கங்களெல்லாம் வித்தியாசப்பட்டிருக்கின்றன. இரண்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணையைத் தவிர வேறு எதையும் நிர்பந்தப்படுத்திக் கேட்கவில்லை. கலியாணமானதும் பெண்ணை அனுப்பிவிடவேண்டியது ஒன்றுதான். 'இவ்வளவு சுலபமாயும் அதிகப் பணச் செலவில்லாமலும் கூடிய சீக்கிரத்தில் வரனைத் தேடி விட்டோம்' என்று ஜானகியம்மாளுக்கு வெகு ஆனந்தம். எப்படியாவது ஒருவாறாய்ப் பெண்ணின் கழுத்தில் தாலி விழுந்துவிட்டால் பிறகு கோதண்டபாணியை ஏசிக் காட்டலாமல்லவா?

சில தினங்களாக சாவித்திரி ஏதோ மனக் குறையுடனிருப்பதுபோல் சிற்சில சமயங்களில் ஜானகியம்மாளுக்குத் தோன்றும். அதற்கிடங்கொடாமல் உடனே, 'எல்லாம் புக்ககம் போய்ப் பழகிவிட்டால் இதெல்லாம் குறைந்துவிடும்' என்று தானே மனதைச்சமாதானப்படுத்திக் கொள்வாள்! சாவித்திரி தன் சரீரத்தை எங்கு அலைய விட்டபோதிலும் மனதை கெஷ்டிபுரத்திற்கே அர்ப்பணம் செய்தவளென்று ஜானகியம்மாளுக்கு என்ன தெரியும்? அல்லது சாவித்திரியின இஷ்டப்படி எதுவும் நடக்காதென்பதற்கு தடை ஏதாவதுண்டோ? இல்லை. பெற்ற தாய் தெய்வத்திற்குச் சமானமானவளாயிருக்க அவளுக்கு இஷ்டமில்லாத ஒரு வரனையே மணம் புரியவென்று சாவித்திரியைப் போன்ற அபலை எவ்வாறு பிடிவாதம் பிடிப்பாள்? ஆகலால் சாவித்திரி தன் அருமை அன்னையின் திருப்தியின் பொருட்டு தன் சரீரத்தை அர்ப்பணம் செய்துவிட்டுத் தளர்ந்து போன தன் மனதை மறுபடியும் கருணைக் கடலாகிய ஈசனுடைய சரண கமலங்களிற் பதிய வைப்பதிலதான் தனக்கு ஹிதமிருக்கிறதென்று உணர்ந்து, மனதை திடப்படுத்திக் கொண்டாள். சில வாசகர்களுக்கு சாவித்திரியின் கொள்கை பதிவிரதா தர்மத்திற்கு எதிரிடையாயிருக்கிறதென்று தோன்றும். நீங்களே பாருங்கள். சாவித்திரி என்ன ஏழெட்டு வயதுள்ள குழந்தையா? தாயார் தானம்செய்து கொடுத்த இடத்திற்குத் தகுந்தபடி மனதைப் பழக்குவதற்கு? இந்த வயதில்தானன்றோ புராண காலத்துப் பதிவிரதைகளான சாவித்திரி, சகுந்தலா, தமயந்தி முதலானவர்கள் அவரவர்களுடைய மனதைப் பறிகொடுத்தார்கள்? அப்படியிருக்க நமது சாவித்திரி இக் கலி காலத்தில இன்னும் எப்படி நடந்து கொள்வது?

கோதண்டபாணியின் தகப்பனர் மரணமடைந்து ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. அவன் அஸ்தியைக்கொண்டு காசிக்குப்போய் இன்றுதான் திரும்பி வந்திருந்தான். சுப்பய்யன் என்று வெகு நாட்களாகப் பழகின பரிசாரகன் கொஞ்சம் பலகாரம், பழம், பால் முதலியவைகளுடன் சில கடிதங்களையும் கொண்டுவந்து கொடுத்தான். கோதண்டபாணியின் மனம் எதிலும் செல்லவில்லை, எவ்வித ஆதாரமுமில்லாமல்தான் தனிமையாக வாழ்நாட்களைக் கழிக்கவேண்டியதாயிருப்பதைப் பற்றி நினைக்க நினைக்க அவனுக்கு ஒன்றும்

தோன்றாமற் போயிற்று. ஏதோ கொஞ்சம் உணவை உட்கொண்டு கடிதங்களைப் பார்த்தான். லக்கினப் பத்திரிகையொன்று தென்பட்டது. சற்று தயங்கினான். பிறகு மெல்லப் படித்துப் பார்த்தால், எல்லோருக்கும் அனுப்புவது போல் இவனுக்கும் அனுப்பப்பட்ட சாவித்திரியின் லக்கினப் பத்திரிகை அது! உடனே எழுந்து மணியைப் பார்த்துவிட்டு ஏதோ ஒரு பார்சலை சுப்பய்யன் மூலமாய் வெகு அவசரமாய் அனுப்பிவிட்டு ஒரு பெரு மூச்செறிந்து சாய்வு நாற்காலியிற் சாய்ந்தான். அவ்வளவு அவசரமாக அனுப்பின பொருள் என்னவென்று கேட்பீர்கள். அது சாவித்திரிக்காக நெய்து வந்திருந்த விலையுயர்ந்த கதர்ப்புடவை. சரியான நேரத்திற் சேரும்படி அதை அனுப்பிவிட்டு, தான் கலியாணத் தாம்பூலத்திற்குப் போவதோ இல்லையோ வென்று சற்று யோசித்தான். அதற்குள் சுப்பய்யன் திரும்பி வந்து கடிதங்களைப் பற்றிய க்ஷேம சமாசாரங்களை விசாரித்தான். சாவித்திரியின் விவாகத்தைப் பற்றி வார்த்தை வர, சுப்பய்யன் பழகின மனிதனாதலால் "அப்பா, கோதண்டபாணி, அத்தை வந்து உன்னை துக்கம்கேட்டு சமாதானப்படுத்தித் தேற்றினது எல்லாவற்றையும் மறந்து விட்டனையா? நல்லதோ கெட்டதோ ஜானகியை விசாரிக்கப் போகாமலிருப்பது உறவினர் விஷயத்தில் தப்பாகும்" என்று அன்புடன் சொல்ல, கோதண்டபாணி அவசரமாயிருக்கும் சில காரியங்களை முடித்துக் கொண்டு நாளைக்குப் புறப்பட்டு விவாகம் நடந்த தினம் சாயங்காலம்போய்ச்சேர்ந்து கலியாணம் விசாரித்துவிட்டு வருவதாய் நிச்சயித்துக் கொண்டான். வீட்டில் எங்கு பார்க்கினும் உதாசீனமாயும், உற்சாகமற்றதாயும் அவனுக்குத் தோன்றியது! தன் அன்புடைய பிரியமான 'சர்கா' ஓர் மூலையில் தூசு படிந்து கிடக்க அங்கும் அவன் மனம் செல்லவில்லை. பூஞ்செடிகளெல்லாம் கவனிப்பாரில்லாமல் வாடிவதங்கிப் போயிருப்பதை அவனால் பார்த்து சகிக்க முடியவில்லை. கலியாண சம்பிரமமாவது பார்த்தால் ஏதாவது சற்று தேறுதல் கிடைக்குமோ வென்று அதையே எதிர் பார்த்தவண்ணமாயிருந்தான். மறு தினம் காலையில் போஜனமானதும் தன் சொந்த பஸ்ஸில் சுப்பய்யனையும் அழைத்துக்கொண்டு கோதண்டபாணி பத்மபுரத்தை நோக்கிப் புறப்பட்டான். வழியில் நல்ல சகுனங்களாவதாக சுப்பய்யன் சந்தோஷத்துடன் சொன்னான். அதொன்றும் கோதண்டபாணியின் காதில் ஏறவில்லை. ஏதோ யோசித்தவண்ணமாயிருந்தான். இருட்டுக்கு முன் பஸ் ஊரில் பிரவேசித்தது. நாலைந்து தெருக்கள் கடந்து சென்றபின் ஓர் பெரிய வீதியில் திரும்பியது. அந்தோ! இது என்ன காட்சி! பஸ்ஸை சாரதி சரேலென்று தெரு மூலையிலேயே நிறுத்தி விட்டான். கோதண்டபாணி கண்களைக் கசக்கிக்கொண்டு "சுப்பய்யா, இதென்ன விபரீதம்! கலியாண வீட்டுப் பந்தலெல்லாம் பிரிந்து கிடக்கிறது, ஏதோ பெரிய அழுகைக் குரல் கேட்கிறதே! இதென்ன? ஒன்றும் புரியவில்லையே! இந்தத் தெருவின் விலாசந்தான் பிள்ளை வீட்டதாகக் கொடுக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். சீக்கிரம் இறங்கி விசாரி" என்று கோதண்டபாணி பயத்துடன் சொன்னான். அதைக்கேட்டு சுப்பய்யன் இறங்கி எதிரில் வெகு க்ஷிப்ரமாய் ஓடிக்கொண்டிருந்த ஆற்றங்கரையில் உட்கார்ந்திருந்த இரண்டு பேர்களிடம் சென்று விசாரித்தான்.

அவர்களுள் ஒருவன்—'இன்னிக்குத் தான் தாலியைக் கட்டினன் பாவி; அதுக்குள்ளே ஆத்துலெ விழுந்து செத்துப்போனால் யார்தான் அழமாட்டார்கள்? ஐயோ, துர்ப்பாக்கியசாலியானபெண்ணே!" என்று மாரில் அடித்துக்

கொண்டான். சுப்பய்யன் ஒன்றும் விளங்காமல் திகைக்கலானான்.

"என்னையா ஆச்சு?" என்றான் குன்றிய முகத்துடன். "என்ன வாச்சா? சந்நியாவஸ்தனம் செய்யப்போய்/கால் வழுக்கியதாம்" என்றான் ஒருவன்.

"இல்லை, இல்லை அவனுக்குக் காக்கை வலிப்பிருந்ததாம்" என்றான் மற்றொருவன்.

சுப்பய்யன் பஸ்ஸினருகில் ஓடிவந்து கோதண்டபாணிக்கு சங்கதியைத் தெரிவித்தான். கோதண்டபாணி அப்படியே திகைத்து அசைவற்று நின்றான். சாவித்திரியின் விதிவினையைப் பார்த்து அவனால் சகிக்க முடியவில்லை. அவன் தன்னை மறந்து சாவித்திரிக்காகக் கண்ணீர் விட்டபடி பஸ்ஸை அடுத்த தெருவிற்கு விடச் சொன்னான். தெருவின் கடைசி வீட்டிற்கு வாழை மரங்கள் அரையும் குறையுமாகக் கட்டியிருக்கும் அடையாளத்தின் பேரில் பஸ் அங்கு நின்றது. கோதண்டபாணி வெகு ஆவலுடன் கீழே இறங்கினான். "அய்யோ! குழந்தையை வீணாக விதியின் வாயில் தள்ளினாயேடா பாவி!" என்று பாட்டியாரின் வார்த்தை காதில் விழ, கோதண்டபாணிக்கு அடி வயிற்றில் இடி விழுந்தது போலாயிற்று. பெருமூச்சு வாங்க அவன் சற்று நின்றான். "கல்யாணமாயிருந்தால் கோதண்டபாணி இப்பவும் என்னை மன்னித்து என் ரத்னமாகிய சாவித்திரியை வீண்போக விடாமல் அவளை ஸ்வீகரிப்பான். நான் அவனைக் கண்டு கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகிறேன். சாவித்திரி! மனதைத் தேற்றி திடப்படுத்திக் கொள்!" என்று நடுங்கிய குரலுடன் ஜானகியம்மாள் சொன்ன வார்த்தைகளும் அவன் காதிற்கெட்டியது. சற்று கோபம் மேலிட அவன் தேகத்தில் கொதிப்பு மேலிட்டது. உடனே பின் வருமாறு இனிய அழுகைக் குரலுடன் பேசிய வார்த்தைகள் காதில் விழுந்தது. "அம்மா, டிகிரிக்களால் தான் (பதவிகளால்தான்) மனிதனுக்கு மதிப்பென்று வெகு நாளாக உங்கள் எண்ணம். இது எனக்கு சுத்தமாக இஷ்டமில்லை என்பதை வெளியிட இதுதான் தக்க சமயமென்று என் எண்ணத்தை வெளியிடுகிறேன். என் விஷயத்திலாவது உங்களுக்கு இவ்வெண்ணம் வேண்டாம். கோதண்டபாணி என்றைக்கும் இவ்விஷயத்தில் உயர்ந்த கொள்கையுடையவன். இப்பவும் உங்களை மன்னிப்பானென்பதில் எனக்கு சந்தேகமேயில்லை. அதுவும் தவறினால் அம்மகா நதி என்னையும் ஏற்றுக்கொள்ள சித்தமாயிருக்கிறாள் என்பதற்குத் தடையுமுண்டோ?"

இனி நிற்க முடியாமல் கோதண்டபாணி சரேலென்று உட்புகுந்தான். ஜானகியம்மாள் பிசாசைப் பார்த்தவள்போல் திடுக்கிட்டு மூர்ச்சையடைந்து அப்படியே சோபாவிற் சாய்ந்து விட்டனள்! சாவித்திரிக்கும் கோதண்டபாணி காசியிலிருந்து திரும்பி வந்தது தெரியாது. அதனால் துக்கம், வெட்கம், கவலை எல்லாம் ஒருமிக்க மேலிட ஜன்னல் பக்கமாய்த் திரும்பி தன் வாடி வதங்கிய முகத்தைத் தாமரைப் பூவையும் பழிக்கும் தன் அழகிய இரு கரங்களால் மூடிக்கொண்டாள். 'செலவாத விடத்திற்குச் செட்டியார்' என்றபடி பாட்டியார் முன்னுக்கு வந்து "கோதண்டம் வாப்பா! கடவுள் செயல் எப்படியிருக்கு பார்" என்று சொல்லி ஓ வென்றலறியழலானாள்.

கோதண்டபாணி கலியாணக் கூற்றெல்லாம் பார்த்துவிட்டு அங்கிருந்த ஓர் நாற்காலியிலமர்ந்தான். பின் கட்டில் ஏதோ சளசளவென்று வார்த்தைகள் அமக்களப்பட்டுக் கொண்டிருந்தன. பேச நாவெழவில்லை; திரும்பிப் பார்த்தான் தான். அனுப்பிய புடவையையுடுத்திக்கொண்டு நீண்ட பின்னல் முதுகிற்

றொங்க சாவித்திரி நின்றுகொண்டிருந்தனள். பாபம்! அவன் கையில் விளக்கை எடுத்துக்கொண்டு அத்தையினிடம் சென்று "அத்தை, இதென்ன? சகலத்திற்கும் துணிந்த மனதையுடைய நீங்கள் இப்படியும் தைரியத்தை இழக்கலாமா?" என்று கம்பீரமான வார்த்தைகளுடன் அவளைத் தேற்றிப் பின்னும் சொன்னான்:—"என்னுடைய பஸ் வந்திருக்கிறது; சீக்கிரம் புறப்படுங்கள்; இனி வீண் பொழுது போக்குவதிற் பிரயோஜனமில்லை. மற்றதெல்லாம் சுப்பய்யன் பார்த்துக் கொள்வான். சீக்கிரம் புறப்படுங்கள்." சரேலென்றெழுந்து ஜானகியம்மாள் கோதண்டபாணியின் இருகரங்களையும் பற்றிக்கொண்டு "கோதண்டம்! என்னை முற்றிலும் மன்னித்து நான் கேட்கும் பிச்சையை யீவாயானால் நான் உயிருடனிருப்பேன். இல்லாவிட்டால் நான் இப்படியே ஆற்றிற்கிரையாவேன். இல்லை என்று சொல்லாதே. "ஏந்திய கையை மாய்ந்திடச் செய்யேல்" என்றலற்றினள்.

கோத:—"இதென்ன அத்தை!" என்பதற்குள் ஜானகியம்மாள் அவனைத் தடுத்து "இல்லை, நான் இவ்வளவு அவமானப்பட்டபின் என் முகத்தை நான் என் ஊர் ஜனங்களுக்குக் காட்டப்போவதில்லை. வா, சென்னபட்டணம் போகலாம். அங்கு நீ பெரிய மனது செய்து சாவித்திரியைப் புனர் விவாஹம்—அல்ல—பாணிக்கிரஹணம் செய்துகொண்டாலொழிய நான் உயிர் தரித்திரேன்" என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழலானாள்.

கோதண்டம் சற்று யோசித்தான். "படித்தவர்களுக்குரிய பொருளை நான் பெறுவது பிசகாகும்! இருந்தாலும் புறப்படுங்கள். சாவித்திரியின் நன்மையை யுத்தேசித்து என்ன செய்ய வேண்டுமென்பதை யோசித்துச் செய்வோம்" என்று சொல்ல, பிரயாணத்திற்குத் தேவையானதெல்லாம் ஆயத்தப்படுத்திக்கொண்டு மறுநாள் இரவு வண்டிக்குச் சென்னைக்குப் புறப்பட்டுப் போயினர். பாட்டியார் எல்லாவற்றையும் வாயைத் திறவாமல் பார்த்துக் கொண்டிருந்தனரே யன்றி ஒருவிதமான ஆட்சேபமும் செய்யவில்லை.

கூடிய சீக்கிரத்தில் ஓர் நல்ல நாள் பார்த்து, சாவித்திரி—கோதண்டபாணியின் விவாகத்தை நடத்தி வைத்துவிட்டு ஜானகியம்மாள் தன் மாமியாரை அழைத்துக்கொண்டு காசிக்குப்போய் தன் வாணாட்களை மாமியார் சிசுருஷையிலும் கடவுள் சிந்தனையிலும் கழிக்கலானாள்.

கோதண்டபாணி தன் விவசாயத்தில் நாளுக்கு நாள் முன்னுக்கு வந்து, மக்கட்பேறு பெற்று சாவித்திரியுடன் இல்லற சுகத்தை யடைந்து வாழலானான்.

சுபம்!

பெண் கல்வி அத்தியாவசியம்.

(ஸ்ரீமான் கே. தியாகராஜ அய்யர்)

பெண் கல்வி என்ற பதங்களை கேட்கும் பொழுதே என் மனம் பதறுகிறது. ஏன்? பெண்களுக்குக் கல்வி அவசியம் என்று நம் பாரத நாட்டு ஸ்திரீகளுக்கும் சொல்லும்படியான காலம் வந்திருக்கிறதே என்பதாகச் சொல்லொணு வருத்தமும் ஆக்ரஹமும் உண்டாகிறது.

கல்வி என்பது ஒரு பாலருக்கே இன்றியமையாதது என்று எந்த மகான்களும் சொல்லக் கேட்டிலோம்.

"கண்ணுடையோர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்"

என்று தெய்வத் தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனுர் திருவாய் மலர்ந்தருளியபடி, கல்வி கற்றவர்களுடைய முகத்தில் உள்ள இரண்டும் இரண்டு கண்களென்றும், கல்லாதவர்களுக்கு அவைகள் இரண்டும் புண்கள் என்றும் பொதுவாக மானிடர்களுக்குக் கூறியிருக்கிறாரே தவிர கல்வி கற்ற ஆண்மக்களின் முகத்தில் மாத்திரம் இருப்பதாகக் கூறவில்லை.

கல்வி அவசியம் என்றே யாவரும் ஒப்புக்கொள்வதால் அதைப் பற்றி விவரிக்க யான் முன் வரவில்லை. கல்வி அவசியம்; ஆகையினால் பெண்களும் கல்வி கற்கவேண்டும் என்று கல்வியின் மேன்மையைப் பற்றியே விவரித்துக்கொண்டு, பக்கங்களை நிரப்பிக் கொண்டுபோக எனக்கு இஷ்டம் இல்லை. பெண் கல்வி அவசியம், அனாவசியம் என்ற அபிப்பிராய பேதங்களை எடுத்துச் சொல்லி, அத்தியாவசியம் என்று ஸ்தாபித்து எழுதவே முன் வந்திருக்கிறேன்.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வியழகே அழகு."

என்று பெரியோர் கூறியுள்ளபடி கூந்தலழகும், மஞ்சளழகும் ஓர் பெண் பிள்ளைக்கு அழகல்ல; கல்வியழகே அழகு என்று வியக்தமாகப் பெண் பிள்ளைகளைக்குறித்தே கூறியுள்ளபடியால், கல்வி பெண்களுக்கு அத்தியாவசியம் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

முன் காலத்தில் சாவித்திரி, திரௌபதி, நளாயினி, அனுசூயை முதலிய பதிவிரதா சிரோன்மணிகள் கல்வி கற்கவில்லையா? சாவித்திரி யமதர்ம ராஜனுக்கு தர்ம சாஸ்திரத்தைப்பற்றி உபன்னியாசம் செய்து, தன் உயிருக்கரிய கணவனுடைய உயிரினை மீட்டுக் கொண்டு வரவில்லையா? திரௌபதியும் யுதிஷ்டிரர் மகா ராஜாவாகிய தன் கணவனுக்கு துரியோதனாதிகளால் அவருடைய மனது துன்புறுத்தப்பட்ட காலத்தில் தர்ம சாஸ்திரங்களை சண்டமாருதமாகப் பொழிந்து அவருடைய மனதின்கண் ஏற்பட்ட சகிக்க முடியாத வருத்தங்களை எல்லாம் மாற்றி சமாதானம் செய்ததை நீங்கள் மகா பாரதத்தில் வாசிக்கவில்லையா? கல்வி கற்காமல் இவர்கள் தர்ம சாஸ்திரங்களை எடுத்து கல்வியில் பாண்டித்தியம் உள்ள அவர்களுக்கே விளக்கமாய் எவ்வாறு சொல்ல முடியும்?

அப்படிக்கிருக்க, அப்படிப்பட்ட பதிவிரதா சிரோன்மணிகளும் வித்வத் சிரோன்மணிகளும் இருந்த புண்ணிய மிகுந்த நம் நாட்டில் தற்காலத்தில் அவர்களைப் போலவே

கீர்த்தியும் மேன்மையும் பெறுவதற்குத் தடையாக புருஷர்களாகிய நாம் எதற்காகப் பெண்கள் கல்வி கற்கக் கூடாதென்று சொல்லவேண்டும்.

நம்மவர்களுக்கு ஸ்திரீகள் எல்லோரும் பதிவிரதைகளாய் நளாயனியைப் போலவும் அனுசூயைப் போலவும் விளங்கவேண்டும் என்ற போாவல் மட்டும் இருக்கின்றது. அதற்கு அனுகூலமாய் இருக்கிற கல்வி மட்டும் அவர்கள் கற்கக்கூடாது. இது எம்மாதிரி இருக்கிறதென்றால்,

' காசுக்கோர் புரவியும் வேண்டும்
காற்றாய்ப் பறக்கவும் வேண்டும். "
"புல்லுண்ணுப் பசுவும் வேண்டும்
பூரணமாய்க் கறக்கவும் வேண்டும்"

என்று விரும்புவதுபோல் இருக்கிறது. கல்வி கற்காமல் பதிவிரதா சிரோன்மணிகளாகவும், சகல சாமர்த்தியங்களும் உடையவர்களாகவும் இருக்கும்படி நாம் எப்படி எதிர் பார்க்கமுடியும்? என்னே! இப்பேதமைத்தனம்.

வித்தைக்கு யஜமானி சரஸ்வதி. அவளே ஓர் பெண்மணி. அப்படிக்கிருக்க, பெண்கள் கல்வி கற்கக்கூடாது என்று சொல்ல (புருஷர்களாகிய) நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவர்கள் வேண்டுமானால் புருஷர்கள் கல்விகற்கக்கூடாது என்று சொல்வதற்குப் பூரண அதிகாரம் இருக்கிறது. ஆனால் அவர்கள் ஒரு வேளை தங்கள் மனதில் அவ்வித எண்ணங்கொண்டு கௌன்ஸில்களுக்கு நம் பிரதிநிதிகளாய்ப்போய் ஓர் தீர்மானம் கொண்டுவந்து சட்டமாக்கி நமக்குக் கல்வி கற்க வழியில்லாமற்செய்து விடுவார்கள் என்று நீங்கள் பயப்படவேண்டாம். நம்மைப் போல் முட்டாள்தனமாக நம்மைத் தவிர மற்றவர்கள் கல்வி கற்கக்கூடாது என்று சொல்லக் கூடிய சுபாவம் அவர்களிடத்தில் மருந்துக்குக்கூடக் கிடையாது. ஆகையினால் அது விஷயத்தில் கொஞ்சமும் சந்தேகம் வேண்டாம்.

பெண்கள் கல்வி கற்று என்ன காரியம் சாதிக்கப் போகிறார்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

"ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே"

என்றபடி ஒரு குடும்பமோ ஒரு இராஜ்யமோ எதுவும் உன்னத ஸ்திதிக்கு வருவதும், தாழ்மை நிலைமைக்குப் போவதும் எப்பொழுதுமே பெண்களினுடைய கைகளிலேயே இருக்கின்றது. அப்படி இருக்கும்பொழுது அவர்கள் கல்வி கற்கக்கூடாது என்று தடுப்பதின் பலன் நம் தலை மேலேயே மண்ணை அள்ளி போட்டுக் கொள்வதற்கொப்பாகும். ஆகையினால் அவர்களுக்குக் கல்விகற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள்செய்து அவர்களை முன்னேற்றமடையச் செய்தால் நம்மெல்லோருக்கும் நன்மை உண்டாவதோடு கூட அவர்களுடைய மனதும் குளிரும். அவ்வாறு குளிரும் பட்சத்தில் நமக்கெல்லாம் க்ஷேமம் உண்டாகும் என்பது திண்ணம். இதற்காதாரமாய் மனுஸ்மிருதியில் பின் வருமாறு சொல்லியிருக்கிறது.

" शोचन्ति जामयो यत्र विनश्यत्याशु तत्कुलम् ।
न शोचन्ति तु यत्रैता वर्धते तद्धि सर्वदा ॥ "

வீட்டு வேலைகளைச் செம்மையாய்ச்செய்து, வீட்டை சுத்தமாகச்செய்து வைப்பதில் வீட்டு வேலைக்காரி போலவும், கணவனுக்குத் தக்க சமயங்களில் புத்தி சொல்வதில் மந்திரியைப் போலவும், சகல கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்வதில் பூமாதேவியைப் போலவும், அறுசுவை அன்னம் பாக சாஸ்திரத்தை அனுசரித்துப் பக்குவம் செய்து போடுவதில் தாயாரைப் போலவும், இரவில் கணவன் விருப்பப்படி நட

ந்துகொள்வதில் வேசியைப் போலவும் நடந்து, மேற் கூறிய நீதி சாஸ்திரத்தில் சொன்ன தர்மங்களை அனுசரிப்பதற்குக் கல்வி மிகவும் அவசியம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றது.

மேற் சொல்லிய தர்மங்கள் நம் பாரத தேசம், ஸ்வாதீனமாய் இருந்த காலத்தில் சொல்லப்பட்டவைகள். ஆனால் இக்காலத்திலோ, நம் சகோதர சகோதரிகள் கால் வயிற்றுக் கஞ்சியுமின்றி, கட்டத் துணியுமின்றித் தவித்துக்கொண்டு அடிமை நிலைமையில் இருக்கிறதை எழுதவும் கை நடுங்குகின்றது; சொல்லவும் நா குளறுகின்றது; கருதவும் நெஞ்சு துடிக்கிறது. கேட்கவும் மூச்சு அடைக்கின்றது. ஆகையினால் சகோதர சகோதரிகளே, மகாத்மா காந்தி மகான் வாக்கியத்தின்படி சர்க்காவில் நூல் நூறுங்கள்; கதராடை கட்டுங்கள்.

இக்காரியங்களை நிறைவேற்றுவதில் நம் சகோதரிகளே. கை தேர்ந்தவர்கள். அவர்களின்றி நாம் சுதந்திரம் பெற முடியாது. ஆகையினால் சகோதரிகள் ஓழிந்த நேரங்களில் நூல் நூற்கவும், பதிவிரதா சிரோன்மணிகள், வீர மாதர்கள் உள்ள புத்தகங்களைப் படித்து அதன்படி ஒழுகுதலிலும், சதா ஈசுவரியைத் தியானம் செய்துகொண்டு, நம் தேசம் சுதந்திரம் அடையவேண்டும் என்கிற எண்ணத்தோடிருந்தால் கட்டாயம் சுதந்திரம் அடைவோம். பதிவிரதைகளால் ஆகாத காரியம் இந்த ஈரேழு பதினான்கு புவனங்களிலும் கிடையாது. திருமூர்த்திகளால் ஆகாத காரியங்களையும் அவர்கள் சாதித்து விடுவார்கள்.

பெண்கள் கல்வி கற்பதால் அளவிட முடியாத நன்மைகள் அன்னவர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும், முக்கியமாக நம் தேசத்திற்கும், உண்டாகும். இதே அபிப்பிராயத்தை டாக்டர் பெசண்டம்மை பின்வருமாறு ஆங்கிலத்தில் சொல்லுகிறார் :—

"* * * With regard to the Womanhood of India: that you should study and realise Old Ideals.........that you should educate women everywhere, and choose wisely the kind of education that you give.........so that, in the future, as in the past there may be great, heroic, strong, pure and devoted women in India."

கல்வியினால் நன்மை உண்டாவதைக்காட்டிலும், பெண்களுக்கு அதனால் தீங்குகளே அதிகம் உண்டாகின்றன என்பது சிலர் அபிப்பிராயம். அது முற்றிலும் பிசகு. ஏனெனில், கல்வி தீமைகளை விளைவிக்குமென்றால் எல்லோரும் நகைப்பார்கள். ஆகாரத்தை உட்கொண்டால் தீமை உண்டாகும் என்று சொல்வதுபோல் இருக்கின்றது. ஆகாரம் கெடுதல் செய்யாது. கெட்ட ஆகாரம் தீமையை விளைவிக்கும். நல்ல ஆகாரம் நன்மை செய்யும். அதுபோல கெட்ட கல்வி கெடுதலையும் நல்ல கல்வி நன்மையையும் செய்யும்.

ஆகையினால், தற்காலக் கல்வியினால் நன்மையைக்காட்டிலும் தீமையே ஜாஸ்தி உண்டாகும் என்று சொல்லவேண்டுமேயல்லாது, கல்வி கெடுதல் செய்யும் என்று பொதுவாகச் சொல்லக்கூடாது. தற்காலக் கல்வி பெண்களுக்கு மட்டும் அல்ல, புருஷர்களுக்கும் தீமையை உண்டாக்கும்.

அதனால் இருபாலர்களுக்கும் தீமை உண்டாக்காத பூர்வ காலத்துக் கல்வியையே கற்கும்படி செய்யப் பிரயத்தனங்கள் செய்யவேண்டும். அதனால் தான் "Boycott of schools and colleges" என்று மகாத்மாவின் திருவாக்குப் பிரகாரம் இருபாலரும் தற்கால கல்வி கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் பகிஷ்காரம் செய்யவேண்டும்.

அதற்காகவே மகாத்மாவின் சீடரான வ. வ. சு. அய்யர் பூர்வ காலத்துக் கல்வியையே கற்றுக்கொடுக்க சேர்மாதேவியில் பாரத்வாஜ ஆசிரமம் என்று பெயருடைய குரு குலத்தை ஸ்தாபிதம் செய்தார். அது இன்றைக்கும் நடந்து வருகின்றது. நம் துரதிர்ஷ்ட வசத்தினால் நம்மிடையே இருந்த அம்மகான் காலம் இல்லாத காலத்தில் திடீரென்று மறைந்துவிட்டனர். இதுவும் சர்வேசுவரனுடைய திருவிளையாடல்களில் ஒன்று. இன்றைக்கும் அங்கே குழந்தைகள் ஆண் பெண் இருபாலரும் இயற்கை மடியில் வளர்ந்து வருகின்றன.

இம்மாதிரியுள்ள கல்விச்சாலைகளில் பெண்களைச் சேர்த்து, கல்வி பயிலச்செய்யவேண்டும். இவ்வித பற்பல கல்விச்சாலைகள் அங்கங்கே ஏற்படுத்திப் பெண்கள் கல்வி பயிலச் சௌகரியங்கள் செய்யவேண்டும். இவைகளெல்லாம் பூர்த்தியாகி, பெண்பாலர்கள் பலரும் உயர்தரக் கல்வி கற்று, வித்வத்சிகாமணிகளாகவும், பதிவிரதா ரத்தினங்களாவும், வீரம் பொருந்திய பெண் சிம்மங்களாகவும் விளங்கி, நம் தேசம் அடிமையிலிருந்து விலகி சாசுவதமான சுதந்திரம் இப்பெண் பாலர்கள் மூலியமாக அடையும்படி பரமகருணாநிதியாகிய, சகல ஜகத்களுக்கும் ஜகன்மாதாவாக விளங்கும் சாக்ஷாத் பராசக்தி அருள் புரியவேண்டும்.

சுபம்.

நூர்ஜஹான் அல்லது பாரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(466-வது பக்கத் தொடர்ச்சி)

(இருபத்திரண்டாவது அத்தியாயம்)

ஆகாயம் களங்க மற்றிருந்தது. திடீரென ஓர் பெரும் புயற்காற்று வரவே, மண்ணாலும்; குப்பை கூளங்களாலும் சர்வ திக்குகளும் நிரம்பவே, நிர்மலமான ஆகாயத்தில் இருள் மூடியது. மேகராஜன் ஆகாயமாகிய ரணகளத்தில் தன் சேனைகளை ஒன்று சேர்த்து, வழியிலிருக்கும் மண்ணையும், குப்பை கூளங்களையும் வாரிச் செல்லும் வாயுமகாராஜனை எதிர்க்கத் தயாராயிருப்பதாகத் தோன்றினன். கொஞ்ச நேரத்தில் ரணதுந்துபியைப் போன்று மேக கர்ஜனையுண்டாக, அஸ்திரங்களைப் போன்று மின்னல்கள் பளீர் பளீரெனப் பிரகாசிக்க, மேகராஜன் யுத்தஞ்செய்ய ஆரம்பமானான். இப்படிப்பட்ட சிருஷ்டியினழகு அன்று சலும்பர் என்னும் பிரதேசத்தில் தென்பட்டது. அப்பிரதேசத்தின் கண்ணுள்ள கோட்டைமேற் கொடிகள் பறந்து கொண்டிருந்தமையால் எங்கும் சோபித்த வண்ணமிருந்தது. கோட்டையைச் சுற்றிலும் கூடாரங்கள் நிரம்பியிருந்தன. எங்கும் ரஜபுத்திர வீரர்களது ஆவேசம்மிக்க சம்பாஷணைத்தொனியே மேலிட்டிருந்தது.

சலும்பர் கோட்டையில் அன்று ஓர் சபை கூடியதால், நாலாதிக்குகளிலுமிருந்து ஜனங்

கள் கும்பல் கும்பலாய் வந்துகொண்டிருந்தனர். சந்தாவத குலத்தைச் சேர்ந்த கிருஷ்ண சிம்மனும் தன் பரிவாரங்களுடன் அங்கு வந்து சேர்ந்தனன். அவன் சபைக்குள் நுழைந்த மாத்திரத்தில், சர்வ ஜனங்களும் மிக்க வணக்கத்துடன் அவனை நமஸ்கரித்தனர். அவன் தனக்கென்று போடப்பட்டிருந்த ஆசனத்திலமரவே, எல்லோரும் தத்தம் இடத்திலுட்கார்ந்தார்கள்.

பிறகு எங்கும் சாந்தமாயிருக்கவே, அவன் கம்பீர முகத்துடன் எழுந்து நின்று, உற்சாகத்தோடும், ஆவேசத்தோடும் பின் வருமாறு உரக்கப் பகர்ந்தனன்: "சூர வீரர்காள்! சமீபத்தில் நமக்கு நேரிட்டுள்ள பயங்கர கஷ்ட காலத்தால் ரஜபுத்திரர்களது சுதந்தர தேவதை இராஜ்ய லக்ஷ்மியின் அழகு மிக்க அலங்காரங்களைத் தியாகஞ்செய்து ஓர் சந்நியாசினியைப் போன்று அந்தகார மயமாயிருக்கும் ஆரணியத்திலும் பர்வதங்களிலும் வீற்றிருக்கின்றனள் என்பது யாவருமறிந்த விஷயமே. ஆங்கிருந்தும் அவளைத் தேடிப் பிடித்து அவளது கால்களில் விலங்குகளை மாட்டப் பாதுஷா அக்பர் முயன்று வருகின்றனன். தற்சமயம் மேவாடாவின் சில பாகங்கள் மொகலாயரது வசமிருக்கின்றன. மகாராணா பிரதாப சிம்மரிடம் உள்ள இராஜ நிஷ்டையால், கண்ணிறந்த குடிகள் மொகலாயரது வசங்களை விடுத்து, மகாராணாவின் இராஜ்யத்திற்கு வந்துள்ளதால், லக்ஷக்கணக்கான குடிகளால் நிரம்பியிருந்த நகரங்களெல்லாம் இன்று சூனியமாகத் தோன்றுகின்றன. சுருக்கிச் சொல்லுங்கால், மேவாடாவைச் சேர்ந்தவர்களெல்லோரும் கஷ்ட நிலைக்குள்ளாகித் தங்கள் ஆயுள் நாட்களைக் கழித்து வருகின்றார்கள்.

"இத்தகைய சமயத்தில், வீர சகோதரர்காள்! நீங்கள் ஆத்மசம்ரக்ஷணை செய்து கொள்ளத் தயாராயிருப்பது முக்கியமென ஞாபக மூட்டுவது என்னைச் சேர்ந்த கடமை. ஈசுவரன் இக்காரியத்தில் நமக்குதவிபுரிவானென்பது திண்ணம்."

கிருஷ்ணசிம்மனது தேசாபிமான வார்த்தைகளைக் கேட்டு வந்த சகல ஜனங்களது அங்கத்திலும் இரத்த நதி மிக்க விரைவாக ஓடவே, ஒவ்வொருவரும் ஆவேசமுற்று உக்கிரரூபத்தைக் கொண்டனர். அவர்களது நேத்திரங்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன. கரங்களோ அவர்களை யறியாது இடுப்பில் தொங்க விட்டிருந்த வாட்களை நாடிச்சென்றன.

இஃதிவ்வண்ணமிருக்க, ஒரு கிழவன் குல தேவதையைத் துதித்துக் கண்களில் நீர் ததும்ப, "சகோதரர்காள்! அரண்மனையில் இதுகாறும் வசித்து வந்த ராஜா பிரதாபசிம்மன் இன்று ஒரு நிர்ஜன ஆரணியத்தில் ஒரு சிறு குடிசையில் வசித்து வருகின்றான். ஆயினும், சூரர்களே! வேண்டாம், நிராசை கொள்ள வேண்டாம்! முன்னால் ஒரு இளங்குமாரன் தன் தமையனுடன் ஒரு வனத்தில் திரிந்துகொண்டிருந்த பின்னர், இளைப்பாறும் பொருட்டு ஒரு தேவாலயத்திற்குள் நுழைந்தான். முதலில் ஆங்கிருந்த தேவியை மிக்க பக்தி பூரணமாய் நமஸ்கரித்து, மான் தோலை விரித்துக் கீழ இருவரும் உட்கார்ந்தார்கள். அவ்விளங்குமாரனைக் கண்ட தேவி கலகலவெனச் சிரித்து, "ரஜபுத்திர இளங்குமாரா! உன் நடையுடை பாவனைகளால் நீ ஓர் சூர வீரனெனத் தோற்றுகிறாய். கூடிய சீக்கிரத்தில் மேவாடா சிம்மாதனத்தை அலங்கரிப்பாய் என்பது திண்ணம்!" என்றனள்.

தேவியினது வார்த்தைகளைக் கேட்டுவந்த தமையனோ பொறாமையால் மனங் கொதிக்க—இவனைத் தமையனெனப் பகரவும் லஜ்ஜையாயிருக்கின்றது—ஓர் நொடிப்பொழுதில் உறையினின்றும் வாளையுருவி, அவ்விளங்குமாரனைச் சிரச்சேதஞ் செய்யத் தயாராயினன். ஆனால் புத்திக் கூர்மையுள்ள அச்சிறுவன் தன் தமையனது கபடத்தை யறிந்துகொண்டு அவனது வாள் தன்மேல் விழுவதற்கு முன்னால் ஆலயத்தை விடுத்து வனத்திற்குள் ஓடி மறைந்தனன். பிறகு பராக்கிரமசாலியான இவ்விளங்குமாரனே பாக்கிய தேவியினது கிருபையால் மேவாடா தேயத்தின் சிம்மாதனத்தில் வீற்றிருந்து சங்கிரமசிம்மன் என்ற நாமதேயத்தோடு, எங்கும் கீர்த்திகொண்டு விளங்கினான். சங்கிரமசிம்மனது ஐசுவரிய மதிகரிக்கவே, லக்ஷக்கணக்கான சேனைகளுக்கதிபதியானான். இன்று அந்த வீர புருஷன் எங்கிருக்கின்றனனோ!

"ஆகையால் ரஜபுத்திர சகோதரர்களே! நிராசை கொள்ளக் காரணமில்லை. சுத்தமான இரத்தம் இன்று நமது அங்கங்களில் ஓடிக்கொண்டிருக்கிறது. மறுபடியும் ஒரு முறை நமது கூரிய வாட்களை ரணகளத்தில் ஜ்வலிக்கச் செய்து, சத்துருக்களை மண்ணுக்கிரையாக்கி, மறுபடியும் சித்தூரை நமது ஆதீனத்திற்குக் கொணர சித்தமாயிருங்கள்! இன்று சங்கிரமசிம்மன் சமீபமில்லாவிடினும், அவனது ரூபத்தைத் தரித்துப் பிரதாபராணா அவதரித்துள்ளான். தன் முன்னோர்கள் இழந்துள்ள கீர்த்தியைப் பெறவே சித்தமாயிருக்கின்றனன். ஜ்வலிக்கும் மேவாடா சிம்மாதனத்தில் மறுபடியுமுட்கார்ந்து, ரஜபுத்திரர்கள் இழந்துள்ள கீர்த்தியைத் திரும்பவும் அடையாது அவன் ஒருபோதுமிரான் என்பதைத் திண்ணமாயெண்ணுங்கள்" என்றனன்.

இவ்வண்ணம் அக்கிழவனது வார்த்தைகளைக் கேட்ட வீரர்கள், உற்சாகம் பொங்க, மும்முறை ஈசுவரனது நாமத்தை உரக்கக் கூவினார்கள். எல்லோரும் ஆங்கிருந்த தேவாலயத்திற்குள் நுழைந்து, தங்கள் வாள், பாலா முதலிய அஸ்திரங்களை ஈசுவரனுக்கு முன் வைத்துத் துதித்தார்கள்.

பிறகு கிருஷ்ணசிம்மன் குதிரை மேலேறிக்கொண்டு, கும்பளமேர் கோட்டைக்குப் புறப்பட ஆயத்தமாக, எல்லோரும் ஈசுவர நாமங்களால் கர்ஜனை செய்தவண்ணம் அவனைப் பின்பற்றினர். ஒரு புறம் சலும்பர் சேனாதிபதி தன் சேனையுடன் சென்று கொண்டிருந்தான். மற்றொரு புறம் பங்கலது குலத்தோனது பெருத்த சேனை தென்பட்டது. பிந்லூர் வம்சத்தோன் தன் ஆயிரம் வீரர்களுடன் சென்றனன். சித்தூர் முற்றுகையிடப்பட்ட காலத்தில் உவமையில்லாப் பராக்கிரமத்தைக் காட்டிய ஜயமல்லனது புத்திரன் தந்தையின் பழிக்குப் பழி வாங்கத் தன் சேனைகளுடன் காணப்பட்டான். ஜகாவத் குலத்தோன் தன் ஆயிரம் காலாட் படைகளுடன் பின்பற்றி வந்தனன். சித்தூர் முற்றுகையிடப்பட்ட காலத்தில் தன் பிராணன் போகும்வரை சித்தூர் கோட்டையின் வாயிலில் நின்று எதிர்த்துப் பரதகண்டத்து வீர புருஷன் என்ற கீர்த்தியைச் சம்பாதித்த புத்தன் எனும் பதினமூன்று வயதுப் பால வீரனும் இந்த ஜகாவத் என்னும் குலத்தைச் சேர்ந்தவனே. இவர்களைத் தவிர ஜாலவம்சம், பாமார் வம்சம் முதலிய பற்பல ரஜபுத்திர வம்சங்களைச் சேர்ந்தோரும் பிரதாபசிம்மனது உதவிக்காகச் சென்றனர்கள். இவ்வண்ணம் இந்தப் பிரம்மாண்ட சேனைகள் கும்பளமேர் கோட்டைக் கெதிரிலுள்ள மைதானத்தைச் சீக்கிரம் வந்தடைந்தன.

(தொடரும்)

நெட்டாலில் மாதர் சபைகளின் அவசியம்.

மெரிட்ஸ்பர்க் ஸ்ரீ இந்துவாலிபர் சங்கத்தின் அக்கிராசனர்

ஸ்ரீ எஸ். ஆர். நாயுடு எழுதியது.

தென்னாபிரிக்கா நான்கு மாகாணங்களாகக் கொண்டது. அவை நெட்டால், டிரான்ஸ்வால், கேப், ஆரஞ்சு நதி மாகாணங்களாகும். பின்கண்ட இரு மாகாணங்களில் இந்து மாதர்கள் குடித்தன முறையில் வசிப்பதில்லை. முற்கண்ட இருமாகாணங்களில் நெட்டாலில் பெருந்தொகை கொண்ட இந்து மாதர்கள் வாசஸ்தலமாயிருக்கின்றார்கள். டிரான்ஸ்வாலிலும் இந்து மாதர்கள் இருக்கின்றார்களாயினும் அவர்கள் தொகை சிறியதாகும்.

நெட்டால் முதன்முதல் இந்தியர்கள் குடியேறிய நாடாகையால் இந்த இடத்தில் நாலாந் தலைமுறை கொண்டு இந்துக்களும் அவர்கள் மாதர்களும் இருக்கின்றார்கள். மகமதிய, குஜராத்தி, இந்தி ஸ்திரீகளைப் பார்க்கிலும், தமிழ் ஸ்திரீகளின் தொகை நெட்டாலில் அதிகம் என்று சொல்லலாம். அப்படியிருந்தும் கல்வி, சமய, சமுதாய விஷயங்களில் ஆடவர்களைப் போல் அவர்களுடைய நிலைமை பரிதபிக்கக் கூடிய நிலையில்தானிருக்கிறது. ஒரு விஷயத்தில் மாத்திரம் இந்நாட்டு மாதர்களை மெச்ச வேண்டியிருக்கிறது. ஆங்கிலேயநடை, உடையிவைகள் இவர்களை ஆடவர்களைப்போல பற்றுது தூரவே விலக்கப்பட்டிருக்கின்றன.

நமது மாதர்கள் ஒழுங்காகப் பொதுவிஷயங்களில் பங்கெடுத்து முன் வந்து வேலை செய்ய அவர்களுக்குப் போதுமான சௌகரியம் கொடுக்கப்படவில்லை. சிற்சில சமயங்களில் சமயம் வாய்ந்தபோது நமது மாதர்கள் திறமையுடன் வேலை செய்திருக்கின்றார்கள். உதாரணமாக ஸ்ரீமதி சரோஜனி நாயுடு தென்னாபிரிக்காவுக்கு விஜயஞ் செய்தபோது ஸ்திரீகள் ஒவ்வொருவிடத்திலும் கூட்டங்கள் கூடி ஸ்ரீமதி நாயுடுவை வரவேற்றார்கள். இந்து வாலிபர் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு சந்தையும் கைத்தொழிற் காட்சியும் நடத்தியபோது ஸ்திரீகள் வேலை செய்து சிறப்பித்ததுமன்றியில் தக்க பொருளையும் தர்மத்திற்காக சேகரித்தார்கள்.

நமது ஸ்திரீகளுக்குப் போதுமான பொது உணர்ச்சி இல்லாமலில்லை. ஆனால் அவர்களுக்கு உடந்தையாகவிருந்து உற்சாகம் தந்து பொது வேலைகளில் ஊக்கிவிடும் பட்சத்தில் நமது மகளிர் ஆடவர்களுக்கு எல்லாப்பொதுத் துறைகளிலும் நன்மை தரக்கூடிய வேலைசெய்வார்கள்.

பொதுவேலைகள் தீவிரமாகவும் கட்டுப்பாடாகவும் நடத்தக்கூட்டுறவு சங்கங்கள் இன்றியமையாதவை. ஆகவே எல்லாப் பொது மனிதர்களும் சபைகள், சங்கங்கள், ஐக்கியங்கள் மூலமாகத்தான் வேலை செய்வது நல்லது என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். பொது ஸ்தாபனங்கள் புத்தி வலிமைக்கும் மனவலிமைக்கும் பயிற்சி இடமாக இருப்பது மன்றியில் ஜனங்களைக்குறிப்பிட்ட நோக்கத்தில் ஐக்கியப்படுத்தவும் இடந்தருகிறது.

நமது மாதர்கள் சில காலத்திற்கு முன்னே டர்பனில் ஒரு மாதர் சங்கமொன்றை ஸ்தாபித்தார்கள். அச்சங்கம் சில சமயங்களில் பொது வேலை செய்ததென்றாலும் நாளடைவில் எக்காரணத்தினாலோ ஒடுக்கமடைந்து விட்டது.

நமது மாதர்கள் பெரும்பான்மையோர் படிப்பில்லாதவர்களாக யிருக்கின்றனர். ஆனால்

அவர்களுடைய மக்கள் ஆண் பெண்களுள்பட தமிழ்ப் பாடசாலைகள் ஏற்பட்டதிலிருந்து தமிழ் கற்கின்றார்கள். ஆங்கிலேய பாடசாலைகளில் ஆங்கிலமும் படிக்கின்றார்கள். நமது சிறுமிகள் சிரத்தையோடு படிப்பது மன்னியில் சபை, பள்ளிக்கூட விழாக்களில் பாடல், உபந்நியாசம், சம்பாஷணை செய்கிறார்கள். நமது பாஷையை சொற்சுவையோடும் இனிய நடையில் அவர்கள் பேசுவது

செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப்படும்

என்பதை மெய்ப்பிக்க அவ்வளவு இனிமையாகவும் ருசிகரமாகவும் இருக்கிறது. போகப் போக நமது சிறுவர் சிறுமிகள் தமிழ்ப் பாஷையில் அறிவுடையவர்களாயிருப்பார்கள். பாடசாலையில் படித்தல் போதுமென்ற தாய்தந்தையர் விட்டுவிடக்கூடாது. பாடசாலை விட்டதும் அவர்கள் கல்வியும் அறிவும் வளரச் செய்யப்பார்ப்பது அவர்கள் வேலையாகும். இளம்பெண்கள் படித்தும் பள்ளிக்கூடத்திலிருந்து விலகும்போது, அவர்கள் படித்தது வீணாகாமலும், துருப்பிடித்துப்போகாமலும், தக்க சபைகளை ஏற்படுத்தி அவர்களை அதில் சேர்க்கப்பார்ப்பது நமது கடமையாகும். இவர்களுக்கெனக் கல்வி, சமுதாய, சமய சபைகள் ஏற்படுத்தலாம். இப்பேர்ப்பட்ட சபைகளில் இவர்கள் சேர்ந்து வேலைசெய்வது நமது சமூகத்திற்குப் பெருமை தருவதுந்தவிர அவர்கள் வேலையின் மூலியமாய் சமூகம் பயனடையாமலிராது. சில ஸ்திரீகள் சன்மார்க்க வழியைவிட்டு துன்மார்க்க வழியை யடைகின்றார்கள். உதாரணமாக குடிப்பழக்கம் சிலஸ்திரீகளைவாட்டுகிறது. இக்கெட்ட பழக்கத்திலிருந்து அவதிப்படும் நமது மாதர்களைக் கல்வி வாய்ந்த அறிவுள்ள மாதர்கள் மீட்கலாம், அவர்களுக்கு நற்போதனை செய்யலாம்.

இப்படிப்பட்ட பொது வேலைகளில் ஸ்திரீகள் அவர்களுடைய இனங்களுக்கு உதவி புரியவர்களாகிறதுந்தவிர, சமூகத்தில் தோன்றும் தீய நடக்கைப் பழக்கங்களை எல்லாம் அவ்வப்போது கெல்லி எடுக்கும் சக்தியுடையவர்களாயுமாவார்கள்.

நமது மாதர்கள் அவர்கள் முன்னேற்றத்தைக் கோரியும், அவர்கள் ஜன சமூகத்தைக் கோரியும், அவர்களின் சந்ததியின் நலத்தைக் கோரியும் பொதுத் துறைகளில் வேலை செய்ய முன்வரமாட்டார்களா?

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்)

(486-வது பக்கத் தொடர்ச்சி)

இருபத்து நான்காம் அத்தியாயம்

சிலோன் என்னும் மஹாத்வீபம்—மலபார் ராஜ்யம்—மற்றும் ஆசிரியர் கண்ணுற்ற வேறு நாடுகளின் நிலைமை.

இங்கிருந்து ஆயிரம் மைலுக்கப்பால், மேற்கு வடமேற்கு திக்கில், இரண்டாயிரத்து நானூறு மைல் சுற்றளவுள்ள ஜிலான் என்னும் தீவு இருக்கின்றது. அது முற்காலத்தில் மூவாயிரத்தறுநூறு மைல் சுற்றளவுள்ளதாக விருந்ததென்றும், நாளடைவில் வடதிசையினின்றும் அடிக்குங்காற்று அதன் பெரும் பாகத்தைக் கடலில் ஆழ்த்திவிட்டதென்றும், அங்குள்ள மாலுமிகளின் படங்களால் தெரிய

வருகிறது. அது உலகத்திலுள்ள தீவுகளிலெல்லாம் மிகவும் சேர்த்தியானது. அதை யாளும் அரசனுக்கு செந்தர்நாஜ் என்றுபெயர். அங்குள்ள ஸ்திரீ புருஷர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்கள் தங்களது ரகசிய ஸ்தானங்களை மாத்திரம் துணியால் மறைத்துக்கொண்டு, வேறு வஸ்திரங்களின்றி நடமாடுவார்கள். அங்கு அரிசியைத் தவிர வேறு தானியம் உண்டாவதில்லை. நல்லெண்ணெய், பால், மாமிசங்கள், பாங்களிலிருந்து இறக்கப்படும் கள், அபரிமிதமான ப்ரவீல, (Sapphires topazes, amethysts முதலிய) லோகோத்கிருஷ்டமான வைரங்கள் ஆகிய இவைகள் அங்கு உண்டாகின்றன. உலகத்திலுள்ள வைரங்களிலெல்லாம் மிகச் சிறந்த வைரம் ஒன்று இந்நாட்டரசனிடம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது ஒரு மனிதனுடைய கையளவு நீளமும் பெருமனும், தோஷம் சிறிதுமில்லாததும், நெருப்பைப் போல் ஜ்வலிப்பதும் விலை மதிக்க முடியாததுமாம். இவ்வைரத்தின்மேலாசைகொண்டு, குப்ளேகான், அதற்கீடாகத் தனது பட்டணங்களிலொன்றைத் தருவதாகச் சொல்லியும், இவ்வரசன் அந்த வைரம் தன் முன்னோர்களுடையதாதலின் தான் அதை இவ்வுலகத்திலுள்ள ஐசுவரியமனைத்தையும் பெற்றாலும் கொடேனென்று சொல்லிவிட்டான்.

இந்நாட்டுமனிதர் ஆண்மையில்லாதவராதலின், யுத்தங்கள் நேருமிடத்துப் புறநாட்டு வீரின் உதவியைத் தேடுகின்றனர்.

சிலோனிலிருந்து அறுபது மைலுக்கப்பால் மேற்றிசையில் மலபார் என்னும் பெருந்தநாடு இருக்கின்றது. அது பெரிய இந்தியாவென்று சொல்லப்படும் பெருங்கண்டமேயன்றித் தேவலமான தீவன்று. உலகத்திலுள்ள நாடுகளெல்லாவற்றிலும் அதுவே மிகச் செழிப்பானது.

அந்நாட்டை நான்கு அரசர்கள் ஆண்டு வருகின்றார்கள். அவர்களிலொருவரான ஸிந்தர் கண்டியென்பவரின் ராஜ்யத்தில், மலபாருக்கும் ஸீலானுக்கும் நடுவிலுள்ள பத்துப்பன்னிரண்டு பாதங்களுக்குமேல் ஆழமில்லாத (1 பாதம் = 6 அடி). ஒரு குடாக்கடலில் முத்துக்குளிப்பார்கள். முத்துக்குளிப்போர் தண்ணீருக்குள் இறங்கித் தாங்கள் இடுப்பில் கட்டிக்கொண்டிருக்கும் கூடைகளிலும் வலைகளிலும் முத்து விளைந்துள்ள மீன்களையெடுத்துக்கொண்டு மேலேறுவார்கள். இந்தச் சிப்பிகளில்தான் முத்துகள் இருக்கின்றன. இக்கடலில் முத்துக்குளிப்போரைக் கொல்லக்கூடிய மீன்களும் இருப்பதால், அவைகளால் தங்களுக்கு ஒரு விதமான தீங்கு முண்டாகாமலிருக்கு நிமித்தம், முத்துக்குளிப்போர் சில பிராமணர்களைக் கொண்டு மந்திர படனம் செய்விப்பார்கள். தங்களுக்குக் கிடைக்கும் முத்தில் அவர்கள் இப்பிராம்மணர்களுக்கு இருபதில் ஒரு பாகமும், தங்களது அரசனுக்குப் பத்திலொருபாகமும் கொடுப்பார்கள். இச்சிப்பிகள் ஏப்ரல் மாதமுழுவதும் மேமாதம் முற்பாதி வரையிலுமாத்திரமேயன்றி மற்ற சமயங்களில் கிடைப்பதில்லை. செப்டம்பரிலும் அக்டோபர் முற்பாதியிலும் இச்சிப்பிகள் முன்னூறு மைல் தூரத்திலுள்ள வேறொரு இடத்தில் கிடைக்கின்றன.

இந்நாட்டரசனும் தம் குடிகளைப்போலவே நிர்வாணமாய் நடமாடுகின்றார். ஆனால் அவர் ரத்தினங்களிழைத்த ஒரு அட்டிகையைத் தன் கழுத்திலும், பட்டுக்கயிற்றில்கோர்க்கப்பட்ட அழகான நூற்றுநான்கு முத்துகளுள்ள ஒரு மாலையைத் தம் மார்பிலுமணிந்திருப்பார். இம்மாலையைக் கொண்டுதான், அவர் தனது விக்கிரகங்களின் பிரீதியைக் கோறித் தாம் தினந்தோறும் விதிப்படி செய்

யும் ஜபங்களைக் கணக்கிடுவார். இவ்வாபரணங்கள்தான் அவரது அந்தஸ்துக்கு அடையாளங்கள். தவிர, அவர் தமது கைகளில் மூன்று இடங்களிலும், கால்களிலும், விரல்களிலும், கட்டைவிரல்களிலும் ஒருவிதமான காப்பு அணிந்திருப்பார். அவர் பாககா, பாககா, பாககா என்று 101 தரம் ஜபிப்பார்.

இவ்வரசனுக்கு ஆயிரம் வைப்பாட்டிகளுண்டு. தானிஷ்டப்பட்ட ஸ்திரீயை இவர் தன் ஸ்வாதீனமாக்கிக்கொள்ளுகின்றார். அவ்வாறு தனது தம்பியின் ஸ்திரீயை இவர் ஸ்வாதீனம் செய்துகொண்டதினால் இவருக்கும் இவரது தம்பிக்கும் யுத்தம் உண்டாயிற்று. அப்பொழுது இவர்களது அன்னை இவ்விருவருக்கும் பாலூட்டின தனது முலைகளை யறுத்தெரிந்து விடுவதாகச் சொல்லியதினால், இவர்கள் சமாதானம் செய்துகொண்டார்கள்.

இவ்வரசன் அநேகம் குதிரை வீரரை வைத்திருக்கிறார். அவர்கள் அரசன் செல்லுமிடமெல்லாம் அவருடன் செல்வார்கள். அவர் இறக்கையில், மறுவுலகில் அவருக்கு ஊழியஞ் செய்யுமாறு அவ்வீரரும் அவருடன் அக்கினிப்பிரவேசம் செய்வார்கள். அப்பொழுது அவர்களது மனைவிமார்களும் அவர்களுடன் அக்கினிப்பிரவேசம் செய்துவிடுவார்கள். அப்படிச் செய்யாதவர்கள் நன்கு மதிக்கப்படுவதில்லை.

இவ்வரசனும் இவரது தாயாதியான மலபார் நாட்டரசர்களும் ஆர்மஸிலிருந்தும் அதை விட்டு வேறிடங்களிலிருந்தும் தங்களுக்கு வேண்டிய குதிரைகளைத் தருவித்துக்கொள்ளுகிறார்கள். இவர்களது நாட்டில் குதிரைகள் வளர்வதில்லை. தப்பித்தவறி ஏதேனும் ஒன்றிரண்டு வளர்ந்தாலும் அவைகள் ஊனமுள்ளவைகளாகவும் ராஜ காரியங்களுக்கு உபயோகமுள்ளவைகளாகவுமிருப்பதில்லை.

அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அநேகர் பசுவைப் பூசை செய்பவர்கள்; அவர்கள் லோகாதிபத்தியம் கிடைத்தாலும் கோமாமிசம் சாப்பிடமாட்டார்கள்.

இங்கு காயி யென்று சொல்லப்படும் ஜனங்கள் சிலருண்டு. அவர்கள் இறந்துபோன எருதுகளின் மாமிசத்தைத் தின்பார்கள். மாமிசத்திற்காக எருதுகளைக் கொல்லமாட்டார்கள். அவர்கள் எருது சாணத்தினால் தங்களது வீடுகளை மெழுகுவார்கள். இந்த காயி யென்பவர்கள் செண்டுதாமஸ் என்பவரைக் கொன்றவர்களின் சந்ததியாராதலால், அவரது சமாதிக்குச் செல்வதற்கு இவர்களுக்கு உரிமையில்லை.

இந்நாட்டார் தரையின் மீது விரிக்கப்பட்ட சமுக்காளங்களின்மேல் உட்காருவார்கள்.

இங்கு அரிசியை விட்டால் வேறு தானியம் கிடையாது.

இந்நாட்டாருக்கு வீரத் தன்மையென்பது சிறிதுமில்லை. அவர்கள் ஜீவ ஹிம்ஸையுஞ் செய்யார்கள். மாமிச போஜனஞ்செய்ய மனமுள்ளவர்கள் ஸாரஸர்கள் மூலமாகவோ அல்லது வேறு ஜனங்கள் மூலமாகவோ தங்களுக்கு வேண்டிய மிருகங்களைக் கொல்விப்பார்கள்.

பிரதி தினமும் காலையிலும் மாலையிலுமாக இருமுறை ஸ்திரீகளும் புருஷர்களும் ஸ்நானம் செய்வார்கள். அவர்கள் ஸ்நானஞ் செய்யாமல் போஜனஞ் செய்யமாட்டார்கள். இந்த ஆசாரங்களில்லாதவர்களெல்லாம் மத விரோதிகளென்று மதிக்கப்படுகின்றனர். இவர்கள் போஜன பதார்த்தங்களைத் தங்களது இடது கையினால் தொடமாட்டார்கள். சவுச்சம் முதலிய அசுத்த காரியங்களைத்தான் அக்கையினால் செய்வார்கள். இவர்கள் ஒவ்வொருவனும் தன்னுடைய ஜலபாத்திரத்திலிருந்துதான்

தண்ணீர் குடிப்பானேயொழிய பிற மனிதனது பாத்திரத்தைத் தீண்டவும் மாட்டான். தண்ணீர் குடிக்கையில் இவர்கள் தங்களுடைய பாத்திரத்தைக் கடிக்கவும் மாட்டார்கள்; உயரப் பிடித்துக்கொண்டு தண்ணீரை வாயில் ஊற்றிக்கொள்வார்கள். ஜல பாத்திரமில்லாத அன்னியருக்குத் தாகசாந்தி செய்ய வேண்டி வந்தால் இவர்கள் அவர்களது கையில் தண்ணீரை யூற்றிக் குடிக்கச் சொல்வார்கள். குற்றவாளிகள் இந்நாட்டில் அதிகக் குரூரமாக தண்டிக்கப்படுகின்றனர்.

ஒரு கடன்காரன் பணம் அவசியமான பொழுது தனக்குப் பணம் கொடுக்க வேண்டியவன் அந்தப் பணத்தையோ அல்லது அதற்கான எதிரடியோ கொடாமல் போகக்கூடாதென்று அவனைச் சுற்றிக் கோடு கிழித்து விடுவான். பணத்தைக் கொடாமல் மீறிச் செல்வோர்க்கு இந்நாட்டில் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. தாம் பட்டிருந்த கடனைத் தீர்க்காமல் தவணை சொல்லி வந்த இந்நாட்டு அரசனை ஒருகால் தாம் குதிரை சவாரி செய்து வருகையில் ஒரு வியாபாரியினால் தடைப்படுத்தப்பட்டதை மார்க்கோவாகவர் தாமே நேராகப் பார்த்தார். தமது கடன் தீரும்வரை அரசன் வியாபாரியின் கோட்டைத் தாண்டவில்லை. இதைக் கண்ணுற்ற அவரது பிரஜைகள் அரசரது தர்ம நெறியைக் கொண்டாடுகிறார்கள்.

திராக்ஷைப் பழத்தினின்று இறக்கப்படும் சாராயத்தை இந்நாட்டார் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார்கள்; அச்சாராயத்தைக் குடிப்பவர்களும் கனவான்களென்றாவது, யோக்யர்களென்றாவது, உண்மை யுரைக்கும் சாட்சிகளென்றாவது மதிக்கப்படுவதில்லை. சமுத்திர யாத்திரை செய்பவர்களுக்கும் இந்த மரியாதைகள் கிடையாது. ஏனெனில் இக்காரியங்களைச் செய்பவரெல்லாம் கெட்ட காரியம் எது வேண்டுமென்றாலும் செய்யத் துணிவார் என்பது இந்நாட்டாரது அபிப்பிராயம்.

வியபசாரம் செய்வது பாபமில்லையென்பது இவர்களது கொள்கை.

இத்தேசம் வெகு உஷ்ணமானது. ஜூன், ஜூலை, ஆகஸ்டு தவிர்த்த வேறு மாதங்களில் இங்கு மழை கிடையாது. அந்த மழையினால் வானங் குளிர்ந்தாலல்லது இவர்கள் உயிர்தரிக்கமாட்டார்கள்.

சாமுத்திரிகா லக்ஷணமும் ஜோஸியமும் அறிந்தவர்கள் இங்குண்டு. அவர்களுக்கு மிருகங்களுடையவும் பக்ஷிகளுடையவும் சகுனங்களைக் கவனிப்பதே தொழில். திங்கட்கிழமை இரண்டு மணியிலிருந்து மூன்று மணி வரையிலும், செவ்வாயன்று மூன்று மணி சமயமும், புதன்கிழமை ஒன்பதாவது மணியும் இவ்வாறே வருஷ முழுவதும் ஒவ்வொரு தினத்திலும் ஒரு அசுபகாலம் அல்லது கியாச் (தியாஜ்யம்?) உண்டென்று இவர்களது புஸ்தகங்களில் எழுதப்பட்டிருக்கின்றது.

இவர்கள் பிறந்த நாட்கொண்டாடுவது வெகு விசித்திரம். பதின்மூன்று வயது வந்தவுடன் இவர்கள் தங்களது புத்திரர்களுக்குச் சிறிது மூலதனங்கொடுத்து அதைக்கொண்டு ஜீவனோபாயம் தேடிக்கொள்ளும்படி விட்டுவிடுவார்கள். அவர்களும் சரக்குகளை வாங்குவதும் விற்பதுமாக அங்குமிங்கு மோடித்திரிவார்கள். முத்துக் குளிக்கும் காலத்தில் கொஞ்சம் முத்துக்களை வாங்கி, நாளடைவில் கெட்டுப்போகக் கூடியவற்றை உடனே சொற்ப லாபத்திற்கு வியாபாரிகளுக்கு விற்று விடுவார்கள். இவர்களது சாப்பாட்டுச் செலவு இவர்களது தகப்பனமாரைச் சேராததலால், இவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் லாபங்களைத் தங்களது தாய்மாரிடம் கொண்டுவந்து

கொடுத்துத் தங்களுக்கு உண்டியளிக்கச் சொல்லுவார்கள்.

இவர்கள் புருஷ விக்கிரகங்களையும் ஸ்திரீ விக்கிரகங்களையும் வணங்குகின்றனர். அவைகளுக்குத் தங்களது புத்திரிகளைத் தாஸிகளாகவுமாக்கி விடுகின்றனர். இந்த தாஸிகள் அவ்விக்கிரகங்களை ஆராதிக்கும் பூசாரிகள் அல்லது முனிவர்களது நியமனப்படி பூஜா காலங்களில் அவற்றினெதிரில் பாடி நடனஞ் செய்வார்கள்; தவிர இந்த தாஸிகள் குறித்த காலங்களில் மேற் சொல்லிய விக்கிரகங்களினெதிரில் நைவேத்தியங்கள் வைத்து ஒரு ஆள் சாப்பிடுங் காலம்வரை ஆடிப்பாடி, பின் “விக்கிரகங்கள் உண்டியருந்தி விட்டன” வென்று சொல்லித் தாமே அப்பதார்த்தங்களை வயிறாறத் தின்று தத்தம் வீடுகள் செல்வார்கள்.

மரண தண்டனை விதிக்கப் பெற்றவர்கள் “நாங்கள் இவ்விக்கிரகங்களுக்கு பலியாகிறோம்” என்று முன் வருவார்கள்; அவர்கள் “இந்த தெய்வத்தின் ப்ரீதியைக்கோரி என் பிராணனை விடுகின்றேன்” என்று சொல்லிக்கொண்டு பன்னிரண்டு கத்திகளால் தங்களது உடலில் பன்னிரண்டு காயங்களைச் செய்து கொள்ளுவார்கள். பன்னிரண்டாவது காயம் மார்பிற் பட்டவுடன் இவர்களது உயிர்கள் பறந்து விடும். பின்னர் இவர்களது உறவினர்கள் இவர்களது உடல்களைத் தகனம் செய்து விடுவார்கள். தாங்கள் ஆராதிக்கும் ஆண் பெண் விக்கிரகங்களுக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பதற்காகவே இவர்கள் இவ்விதமாகப் பலிகள் கொடுக்கின்றார்களாம். இவ்வாறு பலிகள் கொடாவிடில் அவ்விக்கிரகங்களின் ஆசீர்வாதங்கள் இவர்களுக்குக் கிடையாதாம்.

தாங்கள் தூங்குகையில், தாரன்துலா வென்னும் பூச்சியும், ஈ, கொசுகுகளும், வேறு புழுக்களும் தங்களைக் கடியாமலிருக்கவும், நல்ல காற்றுக்காகவும், இந்நாட்டுப் பெரிய மனிதர்கள் பிரம்புகளால் பெரிய தொட்டில்கள் செய்வித்து, உயர்ந்த விடங்களில் கட்டி அவற்றில் தூங்குவார்கள்.

ஸெண்டுதாமஸின் சமாதி வைக்கப்பட்டிருக்கும் ஸ்தலம் ஒரு சிறு நகரம். அந்நகரத்திற்கு வியாபாரிகள் விசேஷமாகச் செல்வதில்லை; கிறிஸ்தவர்களும் ஸரேஸர்களும் மாத்திரம் விசேஷமாகச் சென்று தொழுது வருவார்கள். ஸரேஸர்கள் அவரை ஒரு பெரிய ரிஷி யென்று கருதி, அவருக்கு அனுவரியஸ் அல்லது புண்ணிய புருஷன் என்று நாமமிட்டிருக்கின்றனர். அவர் கொல்லப்பட்ட விடத்திலிருக்கும் செம்மண்ணைக் கிறிஸ்தவர்கள் ஜலத்திற் கரைத்து வியாதியஸ்தர்களுக்குக் கொடுப்பார்கள். இதனால் வியாதி குணமாகுமென்பது அவர்களது நம்பிக்கை. 1288-ம் வருஷத்தில் அபரிமிதமான தானியம் விளையப்பெற்ற ஒரு அரசன் அதை வைக்கவிடம் கிடையாமல் ஸெண்டுதாமஸ் கோவிலில் லேவார்த்திகளுக்கு நியமிக்கப்பட்ட விடத்தில் நிறப்புமாறு அக்கோவிலைக் கைப்பற்றினான். அன்றைய தினம் இராத்திரி ஸெண்டுதாமஸ் அவனது கனவில் தோன்றினார்; அவரைப் பார்த்த அரசன் திடுக்கிட்டுப் பயந்து உடனே அவ்விடம் விட்டு ஓடி விட்டான்.

அங்குள்ள ஜனங்கள் கருநிறத்தவர். அது அவர்களது பிறவி நிறமன்று; அடிக்கடி மல்லிகைத் தைலம் தேய்த்துக் கொள்வதினால் அவர்களுக்கு அந்த “அழகான” நிறம் வருகின்றது.

அவர்கள் பிசாசுகளுக்கு வெண் சாந்தும் விக்கிரகங்களுக்குக் கருஞ்சாந்தும் பூசுவார்கள்.

பசுக்களைத் தொழுவோர் சண்டைக்குச் செல்லுகையில், காட்டெருதின் மயிரை ரக்ஷையாகக்கொண்டு செல்லுவார்கள். அக்காரணத்தினால் அம்மயிருக்கு விலையதிகம்.

(தொடரும்)

க ண வ ன்.

(ஆசிரியர் ஸ்ரீமான் ராமசுப்பிரமணிய நாவலர்)

உலகம் பெண்களால் உயர்ச்சி யடையத் தகுந்ததாய்க் காணப்படுகின்றது. பெண்கள் சீர்திருத்தமடைந்தாலன்றி உலகில் தருமமானது நிலை பெறாது. இல்லறமானது பெண்களால் வளப்பம் பெறவேண்டுமன்றோ? ஆயின் அப்பெண்கள் சீரிய ஒழுக்கமும் சீரிய அறிவுமுடையரா யிலங்குதல்வேண்டும். அவ்விரண்டுமமையப் பெற்ற பெண்களாயின் அவர்களே உலகிற் சிறந்த மணிகளாவர். இதனாலன்றோ "பெண்ணிற் பெருந்தக்கயாவுள?" என்றனர் தெய்வப்புலவனார். இல்லறத்தினின்று ஒழுகும் மடவார் தமது ஒழுக்கத்தைப் பேணாவிடின் இல்லறஞ் சிதைக்கபோதல் திண்ணமேயாகலின், அவர்கள் நல்லொழுக்கமுடையராய் விளங்கவேண்டுவது இன்றியமையாததாம். பெண்கள் பிறருடைய ஆட்சிக்குட்பட்டவர்கள் என்பதே மேலோர் துணிபு. பெண்களாவார் சிறு வயதில் தாய் தந்தையருடைய பாதுகாப்பிலும் பின்னர் உடன் பிறந்தார் கணவர் முதலியவருடைய பாதுகாப்பிலும் பின்னர்ப் புதல்வருடைய பாதுகாப்பிலுமிருத்தல்வேண்டும். பெண்கள் தமது மனத்தைச் சீரிய நிலைமையில் நிற்கச்செய்து நல்லொழுக்கத்தில் ஒழுகுவரேல் அத்தகையார்க்கு எத்தகைய பாதுகாப்பும் வேண்டுவதின்று.

கணவனுடைய பாதுகாப்பே பெண்களுக்கு முதன்மையான பாதுகாப்பாகும். ஏனெனில் கணவன்பால் விடப்பட்ட பின்னர் பெண்கள் அக்கணவனுக்கே உரிய பொருளுக்கு ஒப்பானவர்களாகலின் கணவன் கூறுவதே பெண்களுக்குப் பிரமாண வார்த்தையாகும். ஆயினும், பொருந்தாத கருத்துக்களைப் பெண்கள் ஏற்றுக் கொள்ளுதல் இயலாத காரியமே. கற்பின் மாட்சியை யுன்னுங்கால் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" யென மேலோர் கூறியிருத்தலின், கணவன் மொழிக் கெதிர் மொழி கூறாமையே அறமென்பதாகின்றது. அன்றியும், இத்தொடர்க்குக் 'கணவனிடத்தில் இயல்பலாதன மொழியாமையே கற்பெனப்படுவது' எனப் பொருள் கூறினுமமையும். இன்றேல் இதனைக் கணவற்கேற்றது 'சொல்லின் கண் வழுவுறாமையே கற்பெனத் தகுவது' எனப் பொதுவிற் கூறலுமாம். பெண் குரல் இனிமையை யுடைத்தாகலின் பெண்பாலார் தமது மொழிகளினாலேயே பிறரை வயப்படுத்தவல்லராவர். அத்தகையார் கற்புக்கு மாறுபாடு தோன்றப் பின் ஆடவரிடத்துக் கூறு மொழிகளே அவர்கட்குக் கேடுதருமென்பது முணர்க. இல்வாழ் பெண்கட்குக் கணவனையன்றி உயிருமின்று. உயிரோடொப்பக் கணவனைப் பேணுபவர்களே இல்லறஞ் சிறப்பிப்பாராயும் பெண்ணினத்துட்பட்டாராயும் மேலோராயு மெண்ணப்படுவர். கணவன் என்ற சொல்லினின்றும் கணவன் பெண்கட்குத் தமது கண்ணுக்கொப்பானவன் என்கின்ற குறிப்புப் பொருளுந் தோன்றுமாறு காண்க. கண் + அவன் எனக் கண்ணழிக்குமிடத்து அவன் (கணவன்) கண் போன்றவன் என்னும் பொருளுண்டாம்.

ஒரு சிறுமி மணஞ்செய்யப்பட்ட பின்னர்த் தாய் தந்தையர் வீட்டை விட்டு நீங்கிக் கணவனில்லிற் புகுகின்றாள். இதனாலேயே அவள் அன்று தொட்டுக் கணவனுடைய நலத்தைப் பேணுவதற்குரியவள் என்பது புலனாம். பெண்கட்குத் தாய் தந்தையர் வீடு பிறந்தகமும்

கணவன் வீடு புக்ககமுமாம். இவற்றுள் புக்ககமே பிறந்தகத்தினும் பேணற்பாற்று. தாய் தந்தையர் நிலவுலகத்தை நீத்தப் பின்னர் பெண்கள் புக்ககத்தையின்றி எவ்வகத்தை நம்பக்கூடும்? உடன் பிறப்பாளரெல்லாந் தாந்தாம் வெவ்வேறு குடும்பத்தினராய் வாழத் தலைப்பட்டு விடுவார்கள். ஆதலின், புக்ககமே பெண்கட்கு உறுதியுறையுள் எனலாகும். எனவே, புக்ககத்திற்குரிய தலைவனாகிய கணவனே பெண்கட்குச் செல்சார்பு என்பது கவனிக்கற்பாற்று. பெண்கள் எத்துணைக் கல்வியுடையாராயிருப்பினும் கணவற் கஞ்சியொழுகுதலே முறைமையாம். கணவனை மதியாத படிப்பு நமது நாகரிகத்திற் கொத்ததன்று. நமது தொன்னூல்களெல்லாம் பெண்கட்குரிய ஒழுக்கத்தை விதந்து கூறுமேல் அவை கடைப்பிடிக்கத் தக்கனவேயன்றோ? முற்காலத்துப் பெருமை யடைந்திலங்கிய பெண்களெல்லாம் கணவன் கட்டளையைச் சிரமேற் கொண்டொழுகியவர்களேயன்றோ? கணவன் நோயாளியாயினும் மூர்க்கனாயினும் மூடனாயினுமவனே கற்புடைப் பெண்கட்கு முறையே நன் மேன்மையுடையவனும் அன்புடையவனும் கல்வியாளனுமாவன். அன்றி, அவன் தெய்வத்திற்கு ஒப்பானவனுமாவன். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் — பெய்யெனப் பெய்யு மழை" என்பது மேலோர் கூற்றன்றோ?

"இல்லதே னில்வண்மாண்பானால்" எனச் சிறப்பிக்கப்பட்ட மனைவியானவள் தனது கணவனுக்கே உடலுரிமையை அளிக்கின்றாள். அவட்குடைமையாய் நிலவும் பொருட்களும அவனுக்கு உரிமையுடையனவே. அன்றியும், அவளுடைய உயிரும் அவனுக்கெனப் பாதுகாக்கப்படுவதே. ஆதலின், ஓர் சிறந்த மனைவியானவள் தனது உடல், பொருள், ஆவி மூன்றும் கணவனுக்கே உரிமைப்படுத்துகின்றாள். கணவன் மீது நிலையான அன்பு ஏற்படாதாயின் இத்தன்மை கூடுவதாமோ? எனவே, கணவனுக்கும் மனைவிக்கும் இடையறாத அன்புண்டாகவேண்டும். உண்மையிற் கூறுமிடத்து இல்லறமானது அன்பினிகழ்வதேயாமென்பதிலோர் ஐயப்பாடுமின்று. "அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண் — வற்றன் மரந்தளிர்த் தற்று" என அன்பின் இன்றியமையாமையைக் கூறிய ஆசிரியர் தாமே "அன்பு மறனுமுடைத்தாயினில்வாழ்க்கை — பண்பும் பயனுமது" என அவ்வன்பைச் சிறப்பித்து இவ்வாழ்க்கைச் சேர்த்துவது காண்க.

கணவன் குடும்பத்திற்குத் தலைவனாக விளங்குபவனாவன். மணஞ்செய்து கொண்ட நாள் முதற்கொண்டே அவன் சம்சாரம் என்கின்ற வலைக்குட்பட்டு மனைவியின் இன்ப துன்பங்களைக் குறித்து மனங்கொண்டு ஒழுகும் முறைமையையுடையவன். இல்லறம் நிகழ்த்தற்கின்றியமையாத பொருள் அவனாற் றேடப்படுகின்றது. பழைய முறைமையைப் பேணி அவனும் ஒழுகவேண்டுவது கடமைப்பாடாகின்றது. தாய் தந்தையர்க்கு நற்கதியைக் கொடுக்கவல்ல புத்திரனும் அவனால் தரப்படுகின்றான். பின்னர், மனைவியை உற்றதுணையாகக் கொண்டு ஒழுகிவரத் தகுந்தவன். இத்தகைமையை உடையனாயிருக்கின்றமையின் கணவன் மனைவிக்கு மிக்க விருப்பமுடையவனாகின்றான். அவ்விருப்பம் குறைவுபடாதிருத்தற்கென்றே சிற்றின்ப மேற்பட்டுள்ளது. உடம்பினைக் கெடுத்துக் கோடற்கும் அரியகாலமுழுவதையும் வீண்போக்குவதற்கும் தீயநெறியில் ஒழுகுவதற்குஞ் சிற்றின்ப மேற்படவில்லை. கணவன் மனைவி என்னுமிருவரது அன்பு முதிர்ந்து அடைதற்கே சிற்றின்ப மேற்பட்டுள்ளதாய்க் காணப்படுகின்றது. அதனால்

உண்டாகின்ற புத்திரப்பேறும் மேன்மேலும் நல்லறு ஒழுக்கம் இவ்வுலகில் நிலைபெறுவதற்கேயாம்.

பெண்கள் தத்தம் கணவரை உண்மையாக நம்புதல் வேண்டும். நம்பின் செழுதகைமை விளங்குதற்கு அதுவே கருவியாம். கணவனைக் காண்டலும் பெண்கள் எழுந்திருக்க வேண்டுமென விதிகூறிப் போந்த பெரியார்களுடைய கருத்தும் கணவன்பால் மனைவி வணக்கமுடையளாயிருக்கவேண்டுமென்பதேயன்றோ? கணவனிடத்து மனைவி வணக்கமுடையளாயிலவிடின் இல்லறம் செவ்விதிற் செல்லாது. இல்லறத்தைத் தானேயிருந்து சிறப்பித்தற்கு மனைவி வல்லமையுடையவளல்லள். ஆனால், கணவனுக்கு வேண்டியபோது புத்திகூறி அவனுடனிருந்து இல்லறத்தைச் சிறப்பித்தற்கு அவட்கியலும்.

“கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருடன்” எனபதோர் பழமொழி. இதனால், ஒரு மனைவியானவள் கணவனை எத்தகைய நிலைமையிற் பேணவேண்டுமென்பது விளங்கும். சுருங்கக் கூறுமிடத்து மனைவிக்குக் கணவனே எல்லாப் பொருளினுஞ் சிறந்தவனாவன். ஆகலின், அக்கணவற்கிதஞ் செய்யாது வாய்வந்த மொழிகளைத் தூற்றுவதும் இயல்பு கடந்து ஒழுகுவதும் நெறியல்ல. கணவனது காற்றூளே மனைவியின் தலைக்கண் அணியத்தகுந்ததாகும். கடவுளைப் பேணாவிடினும், கற்புடை மனைவியானவள் தன் கணவனைப் பேணாதொழிதல் கூடாது. செல்சார்பு கணவனே யென்று கூறப்பட்டமையிலிருந்து அக்கணவன் மனைவித்துணைக் கடமைப்பாட்டையுடையவன் என்பது போதரும். விரிக்கின்றிலம்.

பர்வத குமாரி.

(மகேசகுமார சர்மா)

(500-வது பக்கத் தொடர்ச்சி)

பதினான்காம் அத்தியாயம்.

ஆசை பலித்தல்.

ஸந்தியா காலமானதும் கல்யாண மாளிகை தீபமாலைகளால் பிரகாசிக்கலாயிற்று. பெண் வீட்டார் பக்கல் அழைக்கப்பட்டிருந்தவர்களெல்லாம் ஒவ்வொருவராய் வந்து சேரலாயினர். சுசீல குமாரன் தானே வாயிலண்டை நின்று எல்லோரையும் ஆதரத்துடன் எதிர்கொண்டு உபசரிக்க, மற்றுஞ்சிலர் அவர்களைச் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலியவை வழங்கி உகப்பித்தனர்.

விவாகத்துக்காக அழைக்கப்பட்டு வந்திருக்கும் ஸ்திரீ புருஷர்களின் பொருட்டு அறுசுவை அன்னபானாதிகள் ஆயத்தமாய்க் கொண்டிருந்தன. ஸ்திரீகள் வாணையும் விவாகச் சிறப்பையும் பார்க்க ஆவல்கொண்டு அந்தப்புரத்து மச்சின்மேல் நின்றுகொண்டு பேசிப் பரிஹாஸஞ்செய்து கொண்டிருந்தார்கள். புரோஹிதருடைய பத்தினியும் மனோரமையின் தாயாரும் சகல காரியங்களையும் மேல் விசாரணைசெய்து கொண்டிருந்தார்கள். அந்தப்புரத்தின் இடமகன்ற முற்றத்தில் கலியாணப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது.

ஸந்தியா சமயத்தில் மனோரமை தன் படுக்கையறையில் நிருபமையுடன் உட்கார்ந்திருந்தாள். சுசீலகுமாரனுக்குத் தன்னைக் கட்டிக் கொடுக்கப் போகிறார்களென்று கேள்வியுற்றது முதல் நிருபமை பிரதிபையின் வீட்டுக்குப்

போக மிகவும் கூசினாள். பிரதிபையினிடம் வைத்த அன்பினாலும் மனோரமையின் பரிஹாஸத்துக் கஞ்சியும் அவள் அங்கு இரண்டொரு தடவை துணிந்துபோகவும் செய்தாள்; ஆனால் சுசீலனது குரலைக்கேட்டு, அவள் சில முறை இங்குமங்கும் ஒளிந்து கொள்ள வேண்டியதாயிற்று. சுசீலன் பிரதிபையின் ஆபரணங்களைக் காட்டிக்கொண்டிருந்தபொழுதுகூட அவள் மாதர்களிடையே கொண்டு தன்னை ஒருவரும் பாராத விதமாய்ப் பிரதிபையின் நகைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது சுசீலன் சொன்ன வார்த்தைகளையும் அவள் கேட்டாள்.

ஸந்தியா காலமான பிறகு, பிரதிபை அவளைத் தன் அறைக்குள் அழைத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு மிக்க அன்புடன் அவள் தோள்மீது தன் இடது கையை வைத்துக்கொண்டு நகைத்துக்கொண்டே, “நிரு, இத்தனை நாளாக நான் உனக்கு அக்காவாய் இருந்தேன்; ஆனால் இனிமேல் நான் உனக்கு நாத்தனாராகவும் நீ எனக்கு மதனியாகவும் இருக்கப்போகிறோம்? இஷ்டம்தானே?” என்று கேட்க, நிருபமை நாணத்தினால் தலை குனிந்தாள். பிரதிபை பிரீதியோடு அவள் முகத்தை முத்தமிட்டு, “நிரு, நான் புறப்பட்டுப்போன பிறகு, நீ அண்ணாவை என்னைப்போலவே கனிகாமாய்ப் பார்த்துக் கொள்வாயோ இல்லையோ? ஏன்? பேசமாட்டாயா?” என்றாள். நிருபமை பதில் ஒன்றும் உரையாமல் பெருமூச்செறிந்தாள். அப்பொழுது பிரதிபை அவளைத் தன் மார்போடணைத்துக்கொண்டு, “நிரு, இது என்ன? ஏன் பெருமூச்சு விடுகிறாய்? நான் புறப்பட்டுப்போனபிற்பாடு உனக்குக் கஷ்டமாயிருக்குமேயென்று யோசிக்கிறாயோ?” என்று கேட்க, நிருவால் இப்பொழுது தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. அவள் அழுது விட்டாள். அவளுடைய இரு கண்களிலிருந்தும் நீர் ஆறாய்ப் பெருகிற்று. பிரதிபையின் கண்களிலும் நீர் ததும்பிற்று. அவள் தன் சேலையின் தலைப்பினால் நிருபமையின் கண்களைத் துடைத்து இவ்வாறு கூறலானாள்: “சே, நீ இப்படி அழக்கூடாது. நான் சீக்கிரமாகவே திரும்பி வந்து விடுவேன். எனக்காக நீ ஏன் இவ்வளவு விசாரப்படுகிறாய்? நாளை முதல் நீ அண்ணாவுக்குப் பெண்டாட்டியாகப் போகிறாய். ஆகையால் நான் புறப்பட்டுப்போன பிறகு நீயே அண்ணாவுக்குக் கேசீர் போட்டுத் தரவேண்டும், சாப்பாட்டுக்கு வேண்டியதெல்லாம் தயார்பண்ணவேண்டும், அவர் சொல்வதையெல்லாம் கவனமாய்க் கேட்கவேண்டும், கூப்பிடும்போது வரவேண்டும், அவர் பக்கத்தில் உட்கார்ந்து படிக்கவேண்டும். கொஞ்சமாவது வெட்கப்படக்கூடாது. அண்ணா உனக்கு ஸ்வாமி யாவர். அவரிடம் பக்தி செய்யவேண்டும், செவிலித் தாயாரிடத்தும் பக்தி பாராட்டவேண்டும், வீட்டிலுள்ள சகல பண்டங்களையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும், இந்த வீடு வாசலெல்லாம் இப்போது உனதாய் விட்டது. எனக்கு தினந்தோறும் கடிதம் எழுது. நீ இன்னும் பாலிகையே யாகையால், நீ சமையல் பண்ணவேண்டி வராது. அண்ணா ஒரு சமையற்காரியை வைப்பார். நீ சௌக்கியமாயும் ஆனந்தமாயும் இருக்கலாம். பிரதி தினமும் எப்படி என்னிடம் படித்துக்கொண்டிருந்தாயோ, அப்படியே அண்ணாவிடத்திலுமிருந்து படிக்கவேண்டும். நான் சீக்கிரமாய் வந்து விடுவேன்—வந்து உங்களெல்லாரோடும் குமாரீ பர்வதத்துக்குப் புறப்பட்டுப் போகலாம். அங்கே வனம், வனுக்காம், மலை முதலிய எத்தனையோ விதமான காட்சிகள் காணக் கிடைக்கும். உன்னை அழைத்துக்கொண்டு நான்

வனம், வனாந்தரம், மலைகளில் சுகமாய்த் திரிவேன். நிரு, இவ்விஷயங்களையெல்லாம் கேட்பது உனக்கு ஆநந்தமாக இல்லையா?" இப்பொழுது நிருபமையின் முகமண்டலம் மலர்ச்சியுற்றது. அவள் பிரதிமையின் கேள்விக்கு விடையாக ஒரே தடவை தலையை அசைத்தாள்.

சரியாய் அந்த வேளைக்குச் சற்று தூரத்திலிருந்து பாண்டு வாத்தியகோஷம் கேட்டது. "கலியாணப் பிள்ளை வருகிறார், கலியாணப் பிள்ளை வருகிறார்" என்று கத்திக்கொண்டு மாதர்கள் மச்சின் முன் பாகத்துச் சுவரில் சார்ந்துகொண்டு நின்றார்கள். நிருபமையும் கல்யாணப் பிள்ளையைப் பார்க்கும் பொருட்டு ஓடி வந்தாள். மெல்ல மெல்ல வாத்தியகோஷம் கிட்ட வரலாயிற்று. தெருவின் இருமருங்கிலும் உள்ள வீடுகளின் மச்சுகளின்மேல் பாலகபாலிகைகளும் மாதர்களும் கல்யாணப் பிள்ளையைப் பார்க்கும் பொருட்டு நின்றிருந்தார்கள். வீதி தெருவின் இருமருங்கிலும் திரளான ஜனங்கள் நின்றிருந்தார்கள். அப்பொழுது எலெக்ட்ரிக் (மின்சார) விளக்குகளும் வேறு விதம் விதமான விளக்குகளும், நாட்டு வாத்தியம், இங்கிலீஷ்பாண்ட் வாத்தியம் இவற்றின் பல கூட்டங்களும், ஆயுதபாணிகளான சிப்பாய்களின் வரிசையும், எல்லாவற்றுக்கும் அப்பால் ஒரு மிக அழகிய பல்லக்கும் மெல்ல மெல்ல வருவனவாயின. பல்லக்குக்குப் பின்னால் பூபேந்திரநாதனால் அழைக்கப்பட்ட விருந்தினர்களின் சேர்ந்தியாய் அலங்கரிக்கப்பட்ட காடிகள் மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தன. பல்லக்கு சுசீலகுமாரன் மாளிகைக்கு எதிரே வந்து நின்றது. சுசீலன் சமீபமாய் வந்து கல்யாணப் பிள்ளையைப் பல்லக்கிலிருந்திறக்கி மரியாதையாய் உள்ளே அழைத்துக் கொண்டுபோய் விலையேறிய ஓர் ஆஸனத்தில் அமர்த்தினான். கல்யாணப் பிள்ளையின் வலதுபக்கத்தில் அத்தியாபகர்களும் பண்டிதர்களும் விஜயம் செய்திருந்தார்கள். பிள்ளை வீட்டாரும் வந்து அவனது இடது பக்கத்திலும் முற்றத்திலும் போட்டிருந்த நாற்காலிகளில் சுகமாய் உட்கார்ந்தார்கள்.

வரன் கிருஹப்பிரவேசம் செய்கையில் மாதர் மங்களகீதம் பாடினர். அநேக மாதர் வரனை நன்றாய்ப் பார்க்கக் கூடிய இடமாகிய மச்சுக்குப்போய் அங்கிருந்து இராஜகுமாரனைப் பார்க்கலானார்கள்.

வந்த விருந்தினருக்குத் தாம்பூலம், தம்பாகு, அத்தர், பனிநீர் முதலியது வழங்கி மரியாதை செய்யப்பட்டது. அவர்களைத் திருப்தி செய்விக்கும் காரியம் யாதொரு குறைவுமின்றி ஸர்வ ஜாக்கிரதையாய்க் கவனிக்கப்பட்டது.

சற்று நேரம் கழித்து சுசீலகுமாரன் புரோஹித மஹாசயருடன் ஸபாமண்டபத்துக்கு வந்தான். அங்கே வந்தவுடனே அவ்விருவரும் 'ब्राह्मणेभ्यो नमः' 'பிராம்மணேப்யோ நம:' வென்று கூறி ஸபையில் எழுந்தருளியிருந்த பிராம்மணரை வணங்கினர். பிறகு புரோஹிதர் இவ்வாறு கூறினார்: "இன்று இராஜநகரத்து ஸ்வர்க்கவாஸி ராஜா நிருபேந்திரநாத ராயருடைய புத்திரனாகிய ஸ்ரீமான் குமார பூபேந்திரநாத ராயருக்கும் ஸ்வர்க்கஸ்தராகிய நவகுமார பட்டாசாரியரின் தநயையும் ஸ்ரீமான் சுசீலகுமார பட்டாசாரியரின் ஸஹோதரியும் ஆகிய பிரதிபா சுந்தரிக்கும் சுப விவாஹம். இந்த ஸபையில் அத்தியாபகர்களும், பண்டிதர்களும், பிள்ளை வீட்டார் பக்ஷத்திலும் பெண் வீட்டார் பக்ஷத்திலும் அழைக்கப்பட்டும் தாமாய் வந்துமுள்ள மஹாசயர் முதலிய அனைவரும் வந்திருக்கிறார்கள். சுப விவாஹ

முகூர்த்தம் நெருங்கிவிட்டது. தங்கள் எல்லோருடைய ஆஞ்ஞையையும் பெற்றுக்கொண்டு நாம் வரனை விவாஹ மண்டபத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் கன்யாதானம் செய்வோம். தாங்கள் எல்லோரும் விவாஹ மண்டபத்துக்கு எழுந்தருளி இந்த சுப காரியத்தை நிறைவேற்றிவைப்பதில் எமக்கு ஸஹாயம் செய்வீர்களாக."

புரோஹித மஹாசயரின் பிரஸங்கம் முடிந்தவுடனே எல்லோரும் ஏக ஸ்வரத்தில், "ஸ்வஸ்தி; நாங்கள் அநுமதி அளிக்கிறோம். தாங்கள் வரனை அழைத்துக்கொண்டுபோய் கன்யாதானம் செய்யுங்கள். முதலில் ஸ்திரீகளின் சடங்குகள் முதலியவை நடக்கட்டும், அநந்தரம் நாங்கள் அனைவரும் விவாஹ மண்டபத்துக்கு வருகிறோம்" என்றார்கள்.

சுசீலகுமாரன் வரனுடைய கையைப் பிடித்துக்கொண்டு எழுந்தவுடனே, சங்கத்துவனியோடும் நாகசுர வாத்திய கோஷத்தோடும் மங்களகீதம் ஆரம்பமாயிற்று. வரன் விவாஹ மண்டபம் வந்து சேர்ந்தான். மாதர்கள் தாம் செய்யவேண்டிய சடங்குகளைச்செய்து முடித்து, வதூவரர்களின் வஸ்திர ஆணிகளை முடிந்துவிட்டார்கள்.

அதன் பிறகு அத்தியாபகர்களும், பண்டிதர்களும், ஸ்மிருதிரத்ந மஹாசயரும், ராய மஹாசயரும் பிள்ளை வீட்டார் சிலரும் பெண் வீட்டார் சிலரும் விவாஹ மண்டபத்தை அடைந்து அவரவர்களுக்குரிய ஆஸனங்களில் அமர்ந்தனர். மாதர்கள் தாழ்வாரத்திலும் வேறு பல விடங்களிலும் உட்கார்ந்துகொண்டும் நின்றுகொண்டும் விவாஹத்தைப் பார்க்கலானார்கள். சுசீலகுமாரன் முதலில் குருவையும், புரோஹிதரையும், அத்தியாபகர்களையும் முறைப்படி விவாஹ கருமத்தைச் செய்விக்கும்படி வரித்து, பிறகு ஸ்வஸ்தி வாசனம் சொல்லி பகவந்நாம ஸ்மரண பூர்வகமாய்க் கன்யாதானத்துக்கு ஸங்கல்பம்செய்து கொண்டான். கந்யா பூஜையும் வர பூஜையும் ஆனபிறகு கன்னிகை வரனைப் பிரதக்ஷிணம் பண்ணினாள். பிறகு இருவரும் ஒருவருக்கொருவர் மாலை யிட்டார்கள். அதன்மேல் சுசீலகுமாரன் இரண்டு வம்சங்களினுடைய கோத்திரங்களையும் பூர்வ புருஷரின் பெயர்களையும் வதூவரர்களின் பெயர்களையும் கூறி ஸ்ரீமதி பிரதிபா சுந்தரிதேவியை ஸ்ரீமான் பூபேந்திரநாதன் கையில் தானம் செய்து கொடுத்தான். பூபேந்திரநாதனும் அந்த தானத்தை ஏற்றுக்கொண்டான். அப்பொழுது எல்லோர் சரீரங்களிலும் ரோமாஞ்சம் உண்டாயிற்று; மனோரமைக்கும் செவிலித்தாயாருக்கும் வந்த கண்ணீரை அடக்க அவர்களால் முடியவில்லை. சுசீலகுமாரனுக்கும் தொண்டை அடைத்துக்கொண்டது. கன்யாதானச் சடங்கு முடிந்தவுடனே வரன் வதுவை முதலில் தன் வலது பக்கத்திலும் பிறகு கை விரலைப்பற்றி இடது பக்கத்திலும் உட்கார வைத்தான். இவ்வாறு பூபேந்திரநாதன் பிரதிபையைத் தன் வாழ்க்கைத் துணைவியாகச்செய்து கொண்டான். விவாஹத்தைச் சேர்ந்த மற்றுமுள்ள சடங்குகளும் சம்பிரதாயங்களும் நிறைவேறின. பிறகு கடைசியில் மாதர்கள் வதூவரர்களை உள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள்.

(தொடரும்)

பெண் கல்வியில் நாட்டுப்புரமும் நகரப்புரமும்.

(ஸ்ரீமதி P. S. அரங்கநாயகி)

பெண் கல்வியைப் பற்றி எழுதப்புகின் அதை இரு பிரிவாகப் பிரிக்க என் மனம் அவாவுறுகின்றது. ஏனெனின், நாட்டுப்புர நாரீமணிகளின் நடை யுடை பாவனை முதலிய எல்லாவற்றையும் அநாகரிகமெனவும், நகரப்புர நல்லாரின் நடை யுடை பாவனை முதலிய எல்லாவற்றையும் நாகரிகமானவை என்றும் எல்லாரும் எண்ணுகின்றனர்; எள்ளுகின்றனர். ஆயினும் ஆன்ற அறிவுடை அறிஞரிற் சிலர் சில பத்திரிகைகளின் மூலமாக நகரப்புர நல்லாரும் எல்லோரும் மேனாட்டு நாகரிகத்தையே வழி வழி வந்த வல்லாசாரகப் போற்றும் நாகரிகத்தை அநாகரிகமெனவும், நாட்டுப்புர நாரீமணிகளும் மற்றோரும் மேற்கொண்டொழுகும் அநாகரிகத்தையே நாகரிகமெனவும் எழுதியும் பிரசங்க மேடைகளில் பேசியும் வருகின்றனர். இதைச் சிலர் கொள்ளுகின்றனர்; பலர் எள்ளுகின்றனர்; தள்ளுகின்றனர்; மற்று உள்ளுகின்றாரொருவருமில்லை; செயலிற் கொணர்வாரும் இல்லை; இல்லை.

ஆகவே அந்நாகரிகம் நடை யுடை பாவனைகளிற் கலந்ததுமன்றி, கல்வியையும் நாகரிகக் கல்வி, அநாகரிகக் கல்வி என ஏற்படுத்திவிட்டது. அதற்கேற்ற விதமே கல்வியும் இருக்கின்றது. அதாவது நகரங்களை யடுத்த பல கிராமங்களிலும் எலிமெண்டரி பாடசாலைகள் தான் இருக்கின்றன. அதுவும் முக்கியமாக ஆண் பிள்ளைகட்குப் போதிப்பவைதான். பெண் பாடசாலைகள் மிகச் சொற்பமானவையே. அச்சொற்பமான பெண் பாடசாலைகளில இருக்கும் உபாத்தியாயினிகளோ நான்காவது வகுப்புதான் வாசித்திருப்பர். அது அவர்களின் கணவர் இறந்தோ, அன்றி இருந்தும் சாப்பாட்டிற்கு வழியின்றியோ இருப்பின்; இளமையிற் கற்றவை எல்லாம் மறந்தபின், முப்பது நாற்பது வயதிற்குமேல், கவர்ன்மெண்ட் உபகாரச் சம்பளம் பெற்று, இரண்டு வருஷம் ட்ரெய்னிங் படித்து வந்து உபாத்தியாயர்வேலை வகிப்பர். இன்னோரன்ன உபாத்தியாயினிகள்தான் கிராமாந்தர பாடசாலைகட்கு வேலைக்கு வருவார்கள். இவ்வுபாத்தியாயினிகள் நடத்தும் பள்ளியில் நான்காவது வகுப்புவரை போதிக்கப்படும். இப்பள்ளியிற் கற்கும் மாணவிகள் இந்நான்காவது வகுப்பு படித்து முடிப்பதற்கும் வயது பதின்மூன்றாகிவிடும். காரணம் நன்கு கற்பியாமையே. இதற்குமேல் நாட்டுப்புர நாரீமணிகளைப் படிக்கவோ படிப்பிக்கவோ பெற்றோர்க்குச் சௌகரியக் குறைவும், ஜாதிக் கட்டுப்பாடும் ஆகிய இரண்டு பெரிய மலைகள் குறுக்கே கிடக்கின்றன. இந்நான்காவது வகுப்பு படித்த பின்பும் அம்மாணவிகட்கு அனா, கனா நன்றாக அடையாளம் தெரியும். இத்துடனேயே பெற்றோரும் பிள்ளைகளும் திருப்தி யடைந்து விடுகின்றனர். அதுவும் சௌகரியக் குறைவால் இனி என் செய்வது என்னும் குறையுடன் கூடிய திருப்தி.

நாட்டுப்புர நாரீமணிகளின் கல்வியின் கதை இவ்வாறிருப்பின் நகரப்புர நல்லார் இந்நல்லாரைக் காணின் ஏளனம் செய்யாதும், பட்டிக்காட்டார் என்றதும், அநாகரிகர் என்றதும் வேறு என் செப்புவர்!

அந்நகர வாசிகளின் கல்வியோ எனின், இவ்வேழைகளாகிய அநாகரிகர்களாகிய பட்டிக்காட்டார்களிடமிருந்து வசூலிக்கப்படும் கண

கற்ற வரிப்பணத்தால், கவர்ன்மெண்ட் மூலியமாகக் காலேஜ்களும், சர்வ கலாசாலைகளும், உபகாரச் சம்பளங்களும் ஏற்படுத்தப்பெற்று, அவற்றுள் ஆண் பாலார், பெண் பாலார் ஆகிய இருபிரிவினருக்கும் தனித்தனியாயமைக்கப் பெற்றிருப்பதால் நகரப் புரத்தார் அனைவரும் சௌகரியமாகக் கல்வி கற்றுக்கொள்ளுகின்றார்கள். அநாகரிகர்களிடமிருந்து செல்லும் பணமானது நகரங்களுக்குச் சென்றால் நாகரிகம் அடைந்து அடையச்செய்கின்றது. இந்நாகரிகக் கல்வியையும் நாகரிகத்தையும் அநாகரிகமெனக்கூறும் பெரியோர்கள் கூட பி. ஏ. முதலிய பட்டங்களைப் பெற்ற பெண்மணிகளைக் காணின் பாமரப் பெண்மணிகளைவிட அதாவது நாட்டுப்புர நாகரிகமுடையோரை விட கௌரவமாகப் பாராட்டுகின்றனர்.

ஆகலின் இப்பெண் கல்வி விஷயத்தில் கிராமாந்தரங்களில் மிகவும் தாழ்ந்த முறை கையாளப்பட்டு வருகின்றது. நகரங்களை யடுத்த சிற்சில கிராமங்கள்போக நகரங்கட்கு முப்பது நாற்பது மைலுக்கப்பாலுள்ள கிராம வாசிகள் கல்வி வாசனை என்பதையே அறியார்கள். மேற் குறித்த சில காரணங்களால் கிராமாந்தரப் பெண்மணிகள் கல்வி விஷயத்திலும் மற்ற எல்லா விஷயங்களிலும் மிகத் தாழ்ந்த நிலையிலிருக்கின்றனர். நகரங்களில் பெண் கல்வி ஏறக்குறைய விருத்தியடைந்திருக்கின்றது. நகரங்களைவிட நாட்டுப் புறத்தில் அநேகர் வீண் காலத்தைப் போக்குகின்றனர். நம் மகாத்மா காந்தியடிகள் கோலிய சுயராஜ்ய திட்டத்தை நிறுவுதற்கு அன்னார் எடுத்தோதிய அருள் மொழிகளுள் ஒன்று "முதலில் கிராமங்களிலுள்ள பாமர சகோதர சகோதரிகட்கு தேசிய விஷயத்தை நன்கு போதித்து, தேசத்தொண்டில் அன்னாரை ஈடுபடச்செய்யப் பிரசாரஞ்செய்து கிராமத்தில் நிர்மாண திட்டத்தையுண்டு பண்ணினால் நகர நிர்மாணம் தானே உண்டாகும்" எனும் அருள் மொழியை அனைவரும் எல்லா விஷயங்கட்கும் உபயோகிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

உலகில் பெண் கல்வி விருத்தியாக வேண்டின் பெரியோர் அனைவரும் சேர்ந்து கிராமாந்தரப் பெண்மணிகள்பால் கருணைகூர்ந்து கல்வி விஷயத்தில் சிரத்தையுடன் பாடுபட்டுவரின் பெண்கல்வி தானே விருத்தியடைந்துவரும்.

ஆதலால் நகரப்புர கற்றறிந்த பேரறிவுடையப் பெருந்தாய்மார்கள் அனைவரும் அன்புகூர்ந்து நாட்டுப்புர நாரீமணிகள்பால் நாட்டஞ் செலுத்த நாட்டுப்புரத்தோராகிய நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சென்னைமாநகரில் நம் பெண்மணிகளின் பலர் உள்ளத்தில் ஒளிரும் சிந்தாமணியாஞ் ஜோதியைப்பலர்வாசிப்பார்களாதலினால்கல்வி முன்னேற்றத்தில் நாட்டுப்புர நாரீமணிகளின் நிலைமையை நம் மணி மூலமாய் நன்கு ஒளிவீசப்பெற்று நகரப்புர நல்லார் அனைவர் உள்ளங்களிலும் ஊன்றுவதாக; உணர்த்துவதாக. உணர்ந்து அனைவரும் ஒருங்குசேர்ந்து சகோதரிகளின் ஏழ்மை நிலையை மேன்மையுறச் செய்வார்களென நம்புகிறேன். ஆண்டவன் அருள் காக்க.

இந்தியாவின் காவியங்கள்.

(1) இராமாயணம் (இராம இராவணர்)

(ஸ்ரீமான் B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை)

இவ்வுலகில் தோன்றியிருப்பதான தேசசரித்திரங்கள் கூறுவது முற்றிலும் உண்மை, சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றதே முற்றிலும் உண்மை, அவர்கள் கூறுகின்றதே நியாயம் என நாம் நிதானிப்போமாயின் அது பெருந்தப்பிதமாகும். பாபங்கள் மிகப்புரிந்த நமன்களைப் பெரியோர்கள் என்றும், பாபங்களைக் கண்டஞ்சி நின்ற புண்ணியர்களை மஹா பாபிகள், கொடுந்துரோகிகள் என்றும் கூறியிருக்கின்றார்கள். புண்ணியங்களைப் பாபங்கள் என்றும் பெரும்பாபங்களைப் புண்ணியங்களென்றும் எழுதியிருக்கின்றார்கள். அராசங்கங்களிலும் இவ்வாறே தோல்வியுற்ற அரசர்கள்மீது அனேகம் பழிகளையும் கொடிய நிஷ்டூரங்களையும் சுமத்தி வெற்றியுற்ற அரசர்களுக்கு நற்குண நற்சீலங்களையும் செல்வக் களஞ்சியங்களையும் மகுடஞ்சூட்டியிருக்கின்றனர். ஆசிரியர்கள் யுக்தி, புத்தி, விவேகம், சமயவுணர்ச்சி இவைகளுக்குத் தகுந்தவாறு, அவர்கள் கையாடுகின்ற நூல்கள் அவர்கள் ரூபப்படுத்தும் காவியங்கள் மாறுபாடு அடைந்திருக்கின்றன. நளவெண்பாவிலும் நைடதத்திலும் நளவெண்பா சிறப்புற்று விளங்குவது புகழேந்திப் புலவரின் சாதுரியத்தாலும் இன்னிசையாலும் தேர்ச்சிபெற்ற அறிவினாலும் அன்றோ. வால்மீகராமாயணத்திலும் கம்பர் இராமாயணமானது மிகச்சிறந்தது அழகும், அறிவும், அனுபவமும் நிரம்பப் பொருந்தியது என நாம் கொள்வது கம்பரின் திறமையினாலன்றோ? கம்ப இராமாயணமானது நூல்கள் எல்லாவற்றினும் தலை சிறந்து மகிமைபெற்றிருப்பது அக்கம்பரின் சாமார்த்தியத்தினாலன்றி நூலின் கூறப்படும் தலைவர் தலைவி இவர்களைப்பற்றியன்றென நாம் ஒரு தலையாய் ஒப்புக்கொள்ளவேண்டியதே.

இராமசரிதமாகின்ற இராமாயணத்தில் ஸ்ரீ இராமருக்குச் சகல நற்குணங்களையும் சாமார்த்தியத்தையும்புனைந்து இராவணனுக்கு அனேக துர்க்குணங்களையும் பாதகங்களையும் உறைவிடமாகக் கூறியிருக்கின்றார்கள். நாம் நியாய நிலையில் நின்று தெய்விகத்தன்மையொன்றும் இராமருக்கு அளிக்காமல் சற்றே ஆராய்ந்து பார்க்கும்பொழுது இராம இராவணரில் அதிகம் பாபம் புரிந்தவர் யாவர் என நன்கறியலாம். இராவணனின் தங்கை சூர்பநகை மிகக் கொடியவள்; அவள் மஹா உத்தமர்களான ஸ்ரீ இராமரையும் இலக்குமணரையும் கண்டு காதல் கொண்டதும் பெருந்தப்பிதம், ஆயினும் அவளை மூக்கை அரிந்ததும் அவளை பங்கப்படுத்தியதும் என்ன நியாயம்பற்றியோ? அச்செய்கையை அக்காலத்து நீதிவிதிகள் நியாயமெனக் கூறத்துணியுமோ? தன்னுடைய தங்கை எவ்வளவு கொடியவளாயினும், அவளை அவமதித்து அங்கபங்கஞ் செய்திருப்பதைக்கண்ட இராவணருக்கு மனம் எவ்வாறு கொதித்துக் கோபாக்கினியை உண்டுபண்ணியிருக்கும். தர்ம நியாயங்கூறுகின்றவர்கட்கு இவ்வொரு செய்கையைப் பொறுக்கமுடியுமோ? ஆனதால் அவளைக் கண்டதும் தன் இரத்தம் ஆவியாய்க்கொதித்து எழும்ப, தன்னை மறந்து கோபம்பொங்கி என்ன செய்யலாம் எனத்திகைத்தனர் இராவணர். உடன்தானே

தனது முழு சைன்னியத்துடன் சென்று ஆரணிய வாசிகள்—இராமர்–இலக்குமணர்–சீதை—மூவர்களையும் பஸ்மீகாமாக்கியிருக்கலாம். அன்றி சீதாப்பிராட்டியாரைத் தனியே கண்டு அவளைப் பங்கப்படுத்தியிருக்கலாம். அவர் மூவரையுங்கொன்று தான் வெற்றிமாலை சூடிக் கீர்த்திக்கும் நற்குணங்களுக்கும் அவதார புருஷனும் அவதரித்தவர் இராவணர் எனச் சரித்திரமே மாறியிருந்தாலும்கூடும். அசுரனாயினும் அதற்கொன்றுந் துணியாமல் 'பழிக்குப் பழி' யென்றபடி சீதாபிராட்டியைமட்டுமே கொண்டு சிறைசெய்தாற்போதுமென்றெண்ணி அவள் சரீரத்தையும் தொடாமல் பூமியோடு அவளை எடுத்துச்சென்று அசோகவனத்திற்குக் கொண்டுபோய் அனேக சேடிப்பெண்கள், ஏவலாட்கள், அரச சீமாட்டிகளுக்கொப்ப சௌகரியங்கள் இவைகளுடன் சிறையில் வைத்தார் இராவணர். சீதைப்பிராட்டியார் முன்வசித்திருந்த ஆரணிய ஆசிரமத்திலும் இலங்கையின் பூந்தோட்டம் என்றழைக்கப்படும் அசோகவனமானது சகல சௌகரியங்களும் இயற்கையழகும் பொருந்தியிருந்தது. அம்மையார் ஏவிய பணிவிடை இயற்ற எதிர்பார்த்திருந்த சேடிப்பெண்கள் எத்தனை பேர்?

அசுரர்கள் இயற்றும் மஹா பாபங்களொன்றும் இராவணரிடம் பொருந்தாமல் இருக்கவில்லை. அவர் செய்த மஹா பாபம் ஒன்றுண்டு. சீதாபிராட்டியாரைக்கண்டு காதல் கொண்டு தன் விருப்பத்திற்கிணங்கும்படி அவளைத் தொந்தரவுசெய்து வற்புறுத்தியதுண்டு. வேறெவ்வாறாயினும் பிறர் அவளைத் தொந்தரவு செய்யவோ அவளை அணுகியேனும் பார்க்கவோ இடங்கொடுக்கவில்லை ஆனால் மனிதனின் இருதயம்வைரக்கல்லன்று; கருங்கற்பாறையுமன்று; மிகுந்த சௌந்தரியம் வாய்ந்த ஓர் பெண்மணியைக்கொண்டு அம்மனிதனும் மோகமுற்றது தப்பிதமாயினும், இராமாயணத்தில் சவிஸ்தாரமாய்க் கூறியிருக்கின்றவிதமான பாழ்நரகிற்குக்காரணரும் பழிபாபங்கள் ஒன்றும் இராவணர் புரிந்ததாகப் புலப்படவில்லை. அன்னிய ஸ்திரீமீது காதல் கொண்டதினால் தனது நாடும் நகரும், தனது கோட்டை கொத்தளங்களும், குடும்பம் முற்றிலும் பாழாக்கப்பட்டுத் தானும் உயிரிழந்து பரிதபிக்கவேண்டுமோ? இராவணர் ஓர் அசுரனாயினும் ஒரு உண்மை சிவபக்தன் அன்றோ? தன் பின்னோர் அனைவரும் இந்தியாவின் மக்கள்யாபேர்களும் தனது மகிமை அறியாமல் ஒரு பரம சண்டாளன் எனக்கருதுவார்கள், தனது சமயக் கொள்கையைத் தழுவாதவர்களே இராமசரிதம் எழுதுவார்கள் என இராவணன் ஒரு வேளை உணர்ந்திருந்தால் இன்று நாம் படிக்கும் இராமாயணமும் நாம் அவதார புருஷனென வணங்கும் இராமரும் பலவிதத்தில் வேற்றுமை பொருந்தியிருக்கலாம். இன்னொரு ஆரியமன்னர் தன் சகோதரிக்கிழைத்த தீங்கின் பொருட்டு சீதாபிராட்டியாரைத் தனது நாட்டிற்குள் கொணர்ந்து கொலைபுரிந்திருந்தாலும் வால்மீக முனிவர் அவ்வரசர்மீது இவ்வளவு பழி சுமத்தியிருக்கமாட்டார்.

சீதா பிராட்டியார் பொன் மானைக் கண்டு ஆசையுற்றாள். அது ஒரு மாயாரூபி என ஸ்ரீ இராமருக்குத் தெரிந்திருந்தும் அவர் அம்மானைத் தொடர்ந்து சென்றது அவருடைய சாமர்த்தியத்தைக் குறிப்பிக்கின்றதோ? ஆசிரமத்தில் இருந்து எக்காரணம் பற்றியும் சீதாபிராட்டியார் வெளியில் போகப்படாதெனக் கட்டளையிட்டிருந்தும் என்ன நேர்ந்தாலும் இலக்குமணர் சீதையைக் காப்பதினின்றும் அகன்று போகக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தும் இவ்விருவர்களும் அவர் ஆணைமீறி

நடந்தது அவர்களுக்கு க்ஷத்திரிய தருமமோ? இராமர் மீது கொண்டிருந்த அன்பின் மிகுதியோ?

இனி சுக்கிரீவனுக்கு முடிசூட்டி அவனுடைய வானர சேனைகளுடன் இலங்கைக்கு ஏகும் பொருட்டோ அவன் தமையன் வாலியை மறைந்து நின்று கொலை செய்தார் ஸ்ரீ இராமர்! இச்செய்கை யுத்தக்கோட்பாடுகள் அனுசரிக்கத் தக்கதோ? க்ஷத்திரியருக்கு வானரத்தைக் கொலைசெய்ய அவர்களது தருமம் இடந்தருமோ? யாதொரு காரணமுமின்றித் தன்னைக் கொலை புரிந்தது நியாயமோ நீதியோ தருமந்தானோ வென்று வாலி மொழிந்ததற்கு பதிலளிக்கத் திகைத்தனரன்றோ இராமர். வாலி சொல் உறுதியைப் பார்மின்!—

"கோவியற்றருமம் உங்கள் குலத்துதித்தோர்
கட்கெல்லாம்
ஓவியத்தெழுத வொண்ணு உருவத்தாய்!
உடைமையன்றோ?
ஆவியைச் சனகன்பெற்ற அன்னத்தை
அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை
போலும் செய்கை!
அரக்கரோர் அழிவுசெய்து கழிவரேல்
அதற்கு வேறோர்
குரக்கினத்தரசைக் கொல்ல மனுநெறி
கூறிற்றுண்டோ?
இரக்கமெங்குகுத்தாய்? என் பால் எப்பிழை
கண்டாயப்பா?
பரக்கழியிது நீ பூண்டால் புகழையார்
பரிக்கற் பாலார்?"

இக்கவிகளின் பொருளையும் அவைகளின் உருக்கத்தையுங் கண்டிரங்காதவர்கள் எவரேனும் உளரோ? ஸ்ரீ ராமனைத் தெய்விக மாட்சியோடு வணங்குகின்ற மஹா கம்பரே இவ்வாறு கூறும்பொழுது மற்றோர் அவரது வரன்முறையை அரசான் நீதியைச் சிறந்ததென்று கூறுவார் உளரோ? அமுதத்தில் தோய்த்தெடுத்த தீஞ்சொற்களால் அமைக்கப்பெற்ற இராமயணத்தில் "பரக்கழி" யென்று இராமரை இழிவாய்க் கூற நேர்ந்தது அவருடைய பெருந் தப்பிதமான செய்கையாலென்பதற்கு ஐயமில்லை.

ஸ்ரீராம தூதராகின்ற ஹனுமான் சீதா பிராட்டியாரை அசோக வனத்திற்போய் கண்டவுடன் அவ்விடத்தில் தனது அக்கிரமம் ஒன்றுங் காட்டாமலே ஸ்ரீராமரிடம் திரும்ப வந்திருக்கலாம். இலங்கை முழுமையும் சுட்டுப்பொசுக்கி இராவண சபையிற் குழுமியிருந்தசபையோர்களின் தாடி மீசைகளைக் கொளுத்தியதும் நியாயமென்கலாமோ?

இராவணனுடைய மதியின்மையால் யுத்தந் தொடங்கிற்று என்றே கூறுவோம். தன் சகோதரன் கொடியோனாயினும் அவனையும் அவன் குடும்பமனைத்தையும் கொலைக் களத்தில் மாய்த்து குடும்பத் துரோகம் புரிந்த விபீஷணர் அன்றோ ஸ்ரீராமரின் உத்தம சிநேகிதர். குடும்பத்தைத் தொலைத்த கோடாலிக் காம்புஎன்பது அவ்விபீஷணருக்கே உரியது. அவ்விபீஷணர் இராமரோடு சேராதிருந்தால் போர்க்களத்தில் யார் யார் வெற்றியடைந்திருப்பார்களோ, யாருக்குக் கடைசியில் முடி சூட்டியிருப்பார்களோ என்று கூற முடியாது. இராமரோ இராவணரோ அதிக பாபம் புரிந்தவரென்று இதை வாசிக்கும் நண்பர்கள் ஆலோசித்தறிந்து கொள்வாராக!

சுபம்!

[இவ்வியாச முடிவில் ஓர் சிற்றுரை பகர்தல் வேண்டும். சரித்திர ஆராய்ச்சிக்கும் சமயப் பயிற்சிக்கும் மிகவும் வித்தியாசமுண்டென்றும், ஆராய்ச்சியில் காண்பிக்கப்படும் வழுக்கள் பற்றி சமயப்பயிற்சி குன்றுமென்பது, ஓர் தப்பிதமான கொள்கையென்றும், சமயமும் சரித்திரமும் புனைந்த ஓர் காவியத்தில் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்ச்சி செய்வதே உண்மையைத் தருமென்றும் நாம் கருத வேண்டும். ஆனதால் மேற் கூறிய சிறு வியாசமானது நாஸ்திக அகநாஸ்டிக (Agnostic)க் கொள்கைகளை மிகத் தைரியப்படுத்தி தீயன விளைவிக்குமெனக் கொள்வாராயின் அவரது அபிப்பிராயம் முற்றிலும் தப்பிதமே. 'சமயப் பயிற்சி' என ஒரு வியாசம் எழுதி அவ்விடத்தில் நமது அபிப்பிராயமும் வெளியிடப்படும். எனது நண்பர் ஒருவர் வேண்டுகோளுக்கிணங்க இக்குறிப்பு எழுதலாயிற்று. K.]

எங்கள் தீர்த்த யாத்திரை.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.).

(300-வது பக்கத் தொடர்ச்சி)

ஆக்ராவிலிருந்து காலை 4 மணிக்குப் புறப்பட்டு $8\frac{1}{2}$ மணிக்கு டில்லிபோய்ச் சேர்ந்தோம். போகும் வழியில் மதுரையில் இறங்கிப் பார்க்கவேண்டும் என்ற அவா அதிகமிருந்தும் முடியாமற் போயிற்று. மதுரையிலிருந்து பிருந்தாவனம், கோகுலம் முதலிய இடங்களைப் பார்க்கவேண்டிய அவசியம். யமுனை தீரத்தின் கரையில் இவ்விடம் கிருஷ்ணன் வசித்த இந்த இடங்கள் வெகு அழகாக இருக்கும். பிருந்தாவனத்தில் தென் தேசத்திய மகான் ஒருவர் சில வருஷங்களுக்குமுன் வசித்திருந்தாராம். அவர் மேம் பார்வையில் ரங்கநாதர் கோவில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கம் கோவில் போலவே இவ்விடமும் பூஜை முதலியன நடக்கிறது.

டில்லியில் நாங்கள் நாலு நாட்கள் இருந்தோம். டில்லி நமது தேசத்தின் தலைநகர். டில்லி எவ்வளவு காலமாக இவ்விதம் முக்கிய பட்டணமாக இருந்து வருகிறது! எவ்வளவு அரசர்கள் இங்கிருந்து அரசாட்சி செய்திருக்கிறார்கள்! கங்கா நதி தீரத்திற்கும், சிந்து நதி தீரத்திற்கும் மத்தியில் டில்லிப் பட்டணம் அமைந்திருப்பதால் இரண்டு பிரதேசங்களையும் கண் காணிக்க வசதியான தலை நகர். முற்காலத்தில் பாண்டவர்கள் அரசு புரிந்த இந்திரப் பிரஸ்தம் என்னும் இடம் இப்போது உள்ள டில்லி நகருக்கு எட்டு மைல்களுக்குத் தெற்கே உளது. அதற்குச் சற்று மேற்கே ரஜபுத்ர சிங்கமாகிய பிருதிவிராஜன் வசித்திருந்த லால்கோட் என்ற இடம் உளது. இங்குதான் முகமதிய ராஜாக்கள் முதல் முதல் டில்லியில் அரசுபுரிய ஆரம்பித்தார்கள். பிறகு ஒவ்வொரு அரசனும் தனக்குச் சௌகரியமான இடத்தில் அரண்மனையும் மண்டபங்களும் கட்டிக்கொண்டு வசித்தான். இவ்வாறு பலர் பல இடங்களில் மாட மாளிகைகளைக் கட்டினார்கள். டில்லி நகரைச் சுற்றிலும் புராதனமான பல இடங்கள் சூழ்ந்துள.

இப்போதுள்ள டில்லி நகரம் முகலாய அரசனாகிய ஷாஜஹான் கட்டியது. அதற்கு ஷாஜஹனபாத் என்று பெயர். இங்குதான் கோட்டை அதிகப் பழுதில்லாமல் உளது. ஷாஜஹானது அரண்மனையும் உத்தியானவனமும் பார்க்கத் தகுந்த இடங்கள். மயில் ஆசனத்தில் அமர்ந்து முகலாய சக்கரவர்த்திகள் தர்பார் நடத்தினது இந்த அரண்மனையில். இப்போது இங்கு ஒரு புறம் சரித்திர மியூசியம் ஒன்று உளது. முகலாய சக்கரவர்த்திகளின் களும், பெரிய சொப்பக்கலசம் நடந்த...

202614

ஆங்கில வீரர்கள் பட்ட கஷ்டங்களை விளக்கும் பல தஸ்தவேஜிகளும் கடிதங்களும் சேமித்து வைக்கிருக்கிறார்கள். பழய அரசர்களுடைய சில உயர்ந்த ஆடைகளும், சரிகை அப்பட்டாக்களும் ஆபரணங்களும் பார்க்கலாம்.

டில்லி நகரைச் சுற்றிலும் உள்ள இடங்களின் சரித்திரத்தைத் தெரிந்துகொண்டால் இந்திய சரித்திரம் தெரிந்து கொண்டதுபோலாகும். இங்குள்ள கட்டிடங்களும் யமுனா நதியும் பேசக் கூடுமானால் எவ்வளவு சரித்திர விஷயங்கள் நாம் தெரிந்து கொள்ளலாம்!

நாங்கள் இறங்கியிருந்த இடம் புதிய டில்லி. இதற்கு ரெய்ஸினு என்றும் பெயர் சொல்கிறார்கள். இதற்கருகேயுள்ள மைதானத்தில்தான் பலமுறை இந்திய தேசத்தைப் பற்றிய பெருஞ் சண்டைகள் நடந்தன. சில மைல்களுக்கப்பால் குருக்ஷேத்திரம் இருக்கிறது. முன் பாண்டவர்களும் கௌரவர்களும் இங்கு பதினெட்டு நாள் யுத்தம் புரிந்தார்கள். பிறகு முகம்மது கோரியும் பிருதிவிராஜனும் சண்டை செய்தார்கள். டில்லியில் ஆப்கானிய ராஜ்யம் ஏற்பட்டது. ஆப்கானிய அரசர்களில் ஒருவராகிய குதப்புத்தீன் கட்டியதுதான் பெரிய குதப் கோரி. பிறகு முகலாய முதல் சக்கிரவர்த்தியாகிய பாபர் பெரிய ஜயம் அடைந்து டில்லியில் ராஜ்யஸ்தாபனம் செய்தார். மறுபடியும் அவர் பேரனுகிய அக்பரும் பின்னொருமுறை டில்லியினருகே பானிப்பட் என்னுமிடத்தில ஆப்கானியர்களை முறியடித்து முகலாய ராஜ்யத்தை நிலையாக்கினர். இதற்கும் சில வருஷங்களுக்குப் பிறகு மகாராஷ்டிரர்களுக்கும் ஆப்கானியர்களுக்கும் பிரமாதமான ஒரு சண்டை பானிப்பட்டில் நடந்தது. இதில் மகாராஷ்டிரர் சேனை முற்றிலும் தோல்வியடைந்தது. இந்த சண்டையினுல்தான் வடஇந்தியாவில் மகாராஷ்டிரருடைய ஆதிக்கம் நிலையாக ஏற்பட முடியாமற்போயிற்று. அவர்கள் மேலும்மேலும் விருத்தியாகிவந்த காலம் இறங்கத்தொடங்கிப் பிறகு ஆங்கிலேயருடன் சண்டையிட்டு ராஜ்யத்தை இழந்தனர். ஆகா! டில்லி நகரைச்சுற்றிலும் எத்தனை காலமாக எவ்வளவு ஜனங்களது ரத்தம் சிந்தியிருக்கிறது. கடைசியாக சிபாய்க்கலகம் ஏற்பட்டபோது முகலாய ராஜாக்களின் சந்ததியாராகிய கிழவரான பஹதூர்ஷா என்பவர்பேரை வைத்துக்கொண்டு பல சிபாய்கள் டில்லியை முற்றுகையிட்டு ஆங்கிலேயருடன் சண்டையிட்டனர். கலகக்காரரை அடக்கி டில்லியில் ஆங்கில அரசாட்சி ஏற்பட்டது. ஆனல் 1911-ம் வருஷம் தான் ஜார்ஜ் அரசர் ஆணையின்படி டில்லி இந்தியாவின் தலைநகராயிற்று. இதுகாறும் கல்கத்தாவிலிருந்த ராஜாங்கக்கச்சேரிகள் எல்லாம் டில்லிக்குமாற்றப்பட்டன. ஷாஜஹனபாத்திற்கு 5 மைலுக்குத் தென்மேற்கே விஸ்தாரமான மைதானத்தில் பல கட்டிடங்களும், காரியாலோசனை சபையும் கட்டிவருகிறார்கள். நாங்கள் சென்ற வருஷம் சட்டசபை மண்டபம் கட்டிமுடியவில்லை. இந்த வருஷம்தான் அக்கட்டிடம் பூர்த்தியாகி வைஸ்ராய் இர்வின் பிரபு திறந்துவைத்தார். இக்கட்டிடங்களுக்காகப் பல கோடி ரூபாய் ராஜாங்கத்தில் செலவிட்டிருக்கின்றனர்.

ராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வகுப்புவாரியாகக் கட்டிடங்கள் அமைத்து அதற்குத் தகுந்தபடி வாடகைப் பணம் வசூலிக்கின்றனர். புதிதாக ஏற்படும் பட்டணமாகையால் சாலைகளில் இன்னும் மரங்களும் செடிகளும் ஏற்படவில்லை. நாங்கள் கோடை காலத்திற் சென்றோம். பகல் கோர உஷ்ணம் பொறுக்க முடியவில்லை. 110 முதல் 120 டிகிரி வரையில் உஷ்ணம் இருந்தது. ஆயி

னும் பல இடங்களைப் பார்க்கவேண்டியிருந்ததால், தினந்தோறும் காலையிலும், பிற்பகலிலும் இரண்டு டோங்கா வண்டிகள் அமர்த்திக்கொண்டு ஊர் சுற்றினேம். டில்லியில் மாத்திரம் எங்களுக்கு டோங்கா வண்டிச்செலவு ரூ. 25 ஆயிற்று. முதல் நாள் ஷாஜஹனபாத் பட்டணத்தையும், கோட்டையையும் பார்த்தோம். சாண்டினிசவுக் என்ற பிரசித்தி பெற்ற கடைத்தெருவைப் பார்த்தோம். முகலாய ராஜாக்கள் காலத்தில் இந்தக் கடைகளில் நவரத்தினங்கள் வெளிப்படையாக வியாபாரம் செய்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்த ஐரோப்பிய யாத்திரிகர்கள் எழுதியிருக்கிறார்கள். இங்குள்ள ஒரு மசூதியின் மீதிருந்து தான் நாதிர்ஷா என்பவர் டில்லி நகரைச் சூறையாடி ஜனங்களைக் கொன்ற விநோதத்தைப் பார்த்திருந்தார். ஐயோ! பாபம்! டில்லி நகர் பண்ணிய பாபமோ என்ன காரணமோ! ஒரு பட்டணத்திலாவது இந்த நகர் மண்ணில் கலந்துள்ள மாதிரியாக மனிதர்களது ரத்தம் கலந்திருக்காது என நிச்சயமாகச் சொல்லலாம். இங்குள்ள கடைகளில ஏராளமான பழ வகைகள் உள. மாம்பழம், ஆரஞ்சி, அஞ்ஜீர், முலாம்பழம், சப்போட்டா முதலிய பலவகைப் பழங்கள் இருந்தன. ஒவ்வொரு வகையிலும் சில வாங்கி தாகசாந்தி உண்டு களித்தோம். தந்த சாமான்கள் விற்கும் கடைகள் பல இருந்தன. ஒரு கடையில சில தந்த பொம்மைகளும் சாமான்களும் வாங்கினேம். எல்லா ஜனங்களுடனும் ஹிந்துஸ்தானி பாஷையில் பேசவேண்டியதால் எங்களுக்குக் கஷ்டமாகவே இருந்தது.

அன்று மாலை லேடி ஹார்டிஞ்சு வைத்திய கலாசாலையைப் பார்த்தோம். இங்கு மாணவர்கள் எல்லோரும் ஸ்திரீகள். போதிக்கும் ஆசிரியர்களும் வைத்தியத்தில் அனுபவம் முதிர்ந்த ஸ்திரீகள். அநேக இந்தியப் பெண்கள் கல்வி பயின்று வருவது கண்டு மகிழ்ந்தோம். தென் இந்தியப் பிராமணப் பெண்கள் சிலரும் இருந்தனர்.

மறுநாள் தென் மேற்கே எட்டு மைல் தூரத்தில் உள்ள குதப்கோரிக்குச் சென்று பார்த்தோம். இதுதான் மகமதியர்கள் முதல் முதல் கட்டியது. இந்த கோரி 200 அடிக்குமேல் உயரமுள்ளது. நடுவில் வளைந்து வளைந்து செல்லும் படிக்கட்டு உண்டு. சில படிகள் ஏறினவுடன் வெளியே கோபுரத்தைச் சுற்றிலும் உள்ள நீண்ட தாழ்வாரத்தில் நுழையலாம். இங்கிருந்து டில்லி நகரையும் அதைச் சுற்றிலும் உள்ளவைகளையும் வானத்திலிருந்து பார்ப்பதுபோல பார்த்தோம். எங்களில் இரண்டொருவர் கால் சலித்து உட்கார்ந்திருந்தனர். மற்றவர் படிகளை விளையாட்டாக எண்ணிக்கொண்டு மேலிருக்கும் உப்பரிகையைச் சேர்ந்தோம். பிறகு கீழே இறங்கி மற்ற கட்டிடங்களைப் பார்வையிட்டோம். மகமதியர்கள் கட்டியவையாயினும் தூண்கள், மண்டபங்கள் எல்லாம் ஹிந்துக் கோவில்களை உடைத்து எடுத்து வைப்பட்டவைகளானதால் ஹிந்து கட்டிடங்கள்போலவே இருந்தன. அந்த ஒரு இடத்தில் இரும்பும் மற்ற உலோகங்களும் கலந்துள்ள ஒரு பெரிய தூண் இருந்தது. இது கொஞ்சமும் துருவின்றி சுத்தமாக இருந்தது. ஒரு குப்த அரசன் கட்டளைப்படி இந்தத் தூண் வார்க்கப்பட்டது. சுமார் 2000 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டது. அக்காலத்திலேயே நமது தேச ஜனங்களுக்கு உலோகங்களை உருக்கி இஷ்டப்படி சாமான்கள்செய்து கொள்ளத் தெரியும். இந்தத் தூணைப் பின்புறமாகக் கைகளை நீட்டி கட்டிக்கொண்டால் அப்படிக் கட்டிக்கொள்பவனது இஷ்டங்கள் பூர்த்தியாகுமாம். இந்தக் கதைகளெல்லாம்

சொல்வதெற்கென்றே அவ்விடங்களில் சில ஜனங்கள் காத்திருக்கிறார்கள். வருபவர்களுடன் கூட அலைந்து பலவிதமான கதைகளைச் சொல்லி அவர்கள் பொழுதுபோக்கிப் பிறகு ஏதேனும் இனாம் கேட்பது வழக்கம்.

குத்ப்கோரியினின்றும் கிழக்காகச் சென்று, ஹுமாயூன் கோரியையும் இன்னும்பல பெரிய கட்டிடங்களையும் பார்த்துக்கொண்டு இடிந்துபோன இந்திரப் பிரஸ்தக் கோட்டைச் சுவர்களைப் பார்த்தோம். சொற்ப பாகம் சுவர் மாத்திரம் இருக்கிறது. மற்ற இடமெல்லாம் ஒரே பொட்டல் பூமி, சப்பாத்தும் முட் செடிகளும் நிரம்பிய மேடாயிருந்தது. திரும்பி வரும் வழியில் ஜெய்சிங் என்பவர் கட்டியுள்ள வான சாஸ்திரக் கட்டிடங்களைப் பார்த்தோம். நிழலிலிருந்து சூரியனது உயரத்தையும், ராசி சக்கரமும், உத்திராயண தட்சிணாயன சலனத்தைக் காட்டும் இடமும் மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. மேநாட்டினர் நுட்பமான கருவிகள் இக்காலத்தில் உபயோகிக்கின்றனர் எனினும் மூந்நூறு நானூறு வருஷங்களுக்கு முன்னே இவ்விதம் அறிந்து உபயோகித்த அந்த ஜனங்களின் அறிவைப் பற்றி நாம் என்ன சொல்வது. அந்த அறிவு மழுங்கி, மறுபடியும் மேநாட்டுக் கலவின்மேல் உராய்ந்த பிறகுதான் இக்காலத்தில் நம் நாட்டினரிற் சிலரேனும் ஐரோப்பிய நருக்குச் சமதையாக சாஸ்திர ஆராய்ச்சி செய்கின்றனர்.

(தொடரும்)

பிதுர் வாக்கிய பரிபாலனம்.

(CASABIANCA)

(ஸ்ரீமான் அ. பா. சுப்பிரமணியன்)

எல்லாருமோடினார்கள் எரியுமத்தட்டினின்று
அல்லவா? ஒருபயிரை அழைத்துச்சென்றிடாதோ?
நல்லதோ? நிற்கிறானே! நமனையன்றுதைத்துத் தள்ளும்
வல்ல சிவபிரான்போல வன்மையுடனிற்கின்றானே. (1)

நிற்கின்றானெரியுந்தட்டில்; நிலவியவெளிச்சம் சுற்றிப்
பற்றியே எரிகின்றதே, பழுமப்பெருந் தீயன்று
சற்றுஞ்சஞ்சலமில்லாது சவத்தைச் சுட்டெரிக்கின்றதே!
சுற்றவவானுர் தந்தை நலஞ்சொற்போனடக்கின்றானே. (2)

மேடைமேனின்ற வக்கான் மிகுதியான வச்சவங்கள்
ஆடைகளணிகளின்றி பருப்புயற்றுரும்புபோல
காடவில்லை என்றாலும் கன்றுருண்டலைகின்றனவே!
கேடடைவானே! அந்தோ!! கவனிப்பார் யாருமில்லை. (3)

இரவியோ? ஈதல்லாது இப்பெருந்தீயின் வல்ல
பரவியவெளிச்சமுடைப்பார்க்க வெளியுடைத்தோ?
காவாமற்றந்தை சொல்லைக்காக்கு மெய்புண்ணியனோ?
ஊர்களுந்திகைக்க நின்றான்! ஓடினான்தந்தை சொல்லை. (4)

பெருந்தீயை ஆளவந்த பெருமானோ இவன்தான்? அன்றி
நரர்கட்கு நற்புத்தியை நாட்டவந்த தெய்வமோ?
பார்த்தே வீரத்தம் பரவிய அலையுடனில்;
சிறுகுழவியே ஆனாலும் சிற்பாலை போனின்றானே! (5)

பற்றிப்பெரு வேகத்துடன் பாய்ந்து வருகின்றனவே;
நற்றனயன் செல்வானோ? நம்ம வாய்திறக்காவிடின்?
சொற்றவாரத தந்தை சூழ்ந்ததீதனிலே வீழ்ந்து
சொற்றா சத்தியற்றுச் சோர்ந்து மெய்யாகினானே! (6)

"எந்தையே! அலறுகின்றேன்!! அரைகுவாய்! ஆருயிரே!
தந்தை நீ சொற்படிக்குத் தட்டின மேனிற்கின்றேனே!
உந்தன்வாயேனிப்போது இன்னமுந் திறக்கவில்லை?
மைந்தனென் வேலையாவும் முடிந்ததோ?" என்றான் மகன். (7)

பிடித்தவாணையினின்று மீண்டுமென்றும் விடாது
பிடித்தவரைப்பிடியிலே பிடிவாதம் செய்யுமந்த
பிடித்ததீயும் பிடியிற் பிடிவாதம் செய்ததந்தோ?
இடிந்துறை கூறினாலுமே தெரிவாகுமின்று! (8)

"கூவியே கூவுகின்றேன்! கூறுவாய் கடிதே சற்று;
பாவியேனைமுதறிப புறக்கணித்தல கூடாதே!
மேவியேயுமிந்த விடத்தினின்றோடு வெளிற்
றாவியே ஓடுவேனே! தகப்பனே" என்றான் மகன். (9)

பதில் மறுமொழியுமின்று; பாழடைந்து நசித்தப்
பதியைப்போலிருக்குமந்தப் பாழடை கப்பலிற்றான்
சதிசெய்யுமுழித தீயிற்றுப் பாகங்கள் அலற—
விதிப்படி பலறுந்தனனை விடாமற்கேட்டிருந்தான். (10)

சிறிக்கதறுகின்றை! சினமடை வழிதந்தியே!!
தெறித்தகப்பன சொல்லைத் தாங்குந்தனயனை நோக்கி;—
காரியம் முடிக்கவந்தாய்! கண்டதெவ்வாறாயினும்;—
கூறுகின்றேனே! கேளாய்!! கொல்லாதே யென்றன்னை. (11)

இரவியாங்கிருந்த வக்காலீண்டது சுடுகின்றதே!
இரவியே ஆண்டிருந்து இத்தட்டினில் விழுந்தால்
இரவியின் சூட்டையாரே இசைக்கவல்லார்! சொல்வாயே!
இரவியின் சூட்டையனனுனிமை மயிர்தனில் வகித்தான்! (12)

அக்கினி தேவனன்று காரத்திற்காகக் கேட்டான்,
தக்கதுவிதுகவென்றே தலைவனுர் சொல்லிவிட்டார்,
அக்கினி யவனைமே ஆருயிர் கவர்ந்திட்டானே,
தககோனக தாழ்வுமின்றித் தலைவனறனனிடம சென்றானே. (13)

பிறவாழி கடப்பதற்குப் பிரவேசிபடகாலன்றுப்
பிறவாழி கடப்பதற்குள் பேரொளிஞானை கண்டுப்
பிறவாழி கடப்பதன்முன் பிதுர்வாக்குப பரிபாலித்துப்
பெறுவதற்கரியதானபேறு பெற்றாய்தான மன்னோ!

சுபம்!

இராணி பவானி.

மொகல் மன்னர்கள் இந்தியாவை ஆண்ட நாட்களில் வங்காளத்தின் முகமதிய ஆட்சியிற் பல சிற்றரசுகள் அடங்கியிருந்தன. இச்சிற்றரசர்கள் மிக்க பலமுற்றவர்களாகவும், சுயேச்சை மன்னர்களாகவும் மூர்ஷிதாபாத [illegible] மத்திய முகமதிய அரசியலுக்குக் கப்பம் கட்டுவோர்களாகவுமிருந்தனர். வங்காள முகமதிய ஆட்சியின் தலை நகரம் அவ்வமயம் மூர்ஷிதாபாத்திலிருந்தது. பல சமயங்களில் இச்சிற்றரசர்கள் தம் கப்பங்களை மத்திய முகமதிய அரசியலுக்குக் கட்டாமலிருந்து, இவர்களை வருத்தப்படுத்தற்கென அடிக்கடி படைகளை அனுப்பி வசூலிக்கவேண்டியதாகவுமிருந்தது. இங்கு மொகல மன்னர்களின் ஆட்சியின் அனுபவங்களில்லாமலே இருந்தமையால் இச்சிற்றரசர்களிடமிருந்து வசூலிக்கும் மூர்ஷிதாபாத் மத்திய முகமதிய அரசியல் தானே உண்டு உடுத்துக் களித்துக்கொண்டிருந்தது. [illegible] ஆட்சித் தலை [illegible] இல்லை. இவ்வாறு தலைமையைக் கண்டறிந்த சிற்றரசர்கள் இம்மத்திய மூர்ஷிதாபாத [illegible] கப்பங்களைக் கட்டாமல் தாமும் உண்டு உடுத்து உல்லாசங்களில் ஆழ்ந்து கிடந்த சமயம் மத்திய அரசியலினால் அனுப்பப்படும் சேனைகளுடன் எதிர்த்துப் போராடி சில சமயங்களில் வெற்றிகண்டு சுயேச்சையை பெருகச்செய்துகொண்டும், சில சமயங்களில் தோல்வியுற்றுக் கப்பங்களைக் கட்டிவிட்டு மத்திய அரசியலைக் கொழுக்கச் செய்தும் வந்தனர். இவ்விதமான பாங்கற்ற அரசியல் முறையில் மத்திய மூர்ஷிதாபாத அரசியல் தன் அதிகாரத்தையும் அமர்க்களங்களையும் இழக்கலாகி நாட்டின் குழப்பங்களையும் கொள்ளைகளையும் கிளர்ச்சிகளையும் அடக்கக் கூடாததாகி சிற்றரசர்களை ஆனவிதத்திலும் அக்கிரமத்திலும் பெருகச்செய்யக் காரணபூதமாகி, இவர்களினாலேயே தாக்கப்பட்டு தன்மைகளை இழக்க, வங்காளம் பெரும் பிரிவு நாடாகி, ஒரு சிறிய பகுதியால் முகமதிய அரசியல் அலிவர்திகானினால் நடத்தப்பட்டு வந்தது. இவ்வலிவர்திகானுக்குப் பின்னர் சுராஜ்தௌலா ஏற்பட்டனன். அலிவர்திகானின் சமயம் முகமதிய ஆட்சி சின்னபின்னப்படுத்தப் பட்டப்படியால் இவ்வ சிற்றரசர்கள் தன் வைத்தது சட்டமாகி, இவர்களின் கருணையிலும் ஆதரவிலும் தம் நாட்களைக் கழிக்கலானார். இச்சிற்றரசியல் மன்னர்களில் நால்வர் மிகத் திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர். இவர்களை கிருஷ்ணநகர் இராஜா கிருஷ்ண சந்திரனெனவும் டாக்காவின் ராஜா பல்லவனெனவும் பாட்னாவின் இராஜா இராமநாராயணனெனவும், நாட்டூர் இராணி பவானி அல்லது பவானி எனவும் கூறுவர். இவர்களுடன் இன்னும் இருவர் மிகப் பெருஞ் செல்வர்களாக இருந்தனர். இவர்களை ஜகத்சேட்டெனவும், மீர்ஜாபர் எனவும் கூறுவர். இவ்வறுவரும் அலிவர்திகான் சமயத்தில் வைத்தது சட்டமாக வங்காளத்தை நடத்தி வந்தனர். பின்னர் இவர்களினாலேயே வங்காளம் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டது.

இவ்விருவர்களில் நாட்டூர் அரசியல் கிட்டத்தட்ட ஸ்காட்லாண்டிற்கு ஏற்றதாக இருந்தது. வருடம் கவர்மெண்டிற்கு 52 லட்சம் ரூபாய் கட்டி வந்தது. இந்நாட்டின் வருமானம் ஒரு கோடியே ஐம்பது லட்சம் என்பர். சுமார் ஐம்பது ஆயிரம் காலாட் படைகளும்;

குதிரை வீரர்களுமிருந்தனர். இவ்விராணியின் கணவனை இராஜ இராமகாந்தன் என்பர். இவன் நாட்டூர் அரசியலில் தன் தகப்பனின் பின்னர் அரசியல் புரிய ஆரம்பித்தனன். இவன் பெருங் குடியனாகவும் இருந்தனன். இச்சீர்கேட்டை இவன் மந்திரி தயாராம் பன்முறை கண்டித்தும் நல்ல உபதேசம் செய்தும் திருப்பக் கூடாதவனாயினன். ஒரு நாள் இராஜ இராமா காந்தன் கோபாவேசனாகி தயாராமை அலுவலிலிருந்து நீக்கி விட்டனன். குடியினால், கூத்திகளின் கூற்றுகளிலும் பெரும் பொருள் வியயமாகியமையால் இவனுடைய பெரும்படைவீரர்களுக்குச் சம்பளங்கள் கொடுபடாமற் போயின. ஒரு நாள் சிப்பாய்கள் கலகஞ்செய்து இராஜ இராமா காந்தனை அரசியலிலிருந்து நீக்கிவிட்டனர். இவனுக்குப் பதிலாக வேறொருவனை அரசனாக நியமித்தனர். இவன் தன் இராணியுடன் நாட்டூர் விட்டு மூர்ஷிதாபாத் நகர் சேட்டிடம் அடைக்கலம் புகுந்தனன். இந்நகர் சேட்டின் உதவியால் இப்பவானி இராணி தயாராமை வரவழைத்துத் தன் நகைகளையெல்லாம் விற்று வங்காள நவாப்பின் அரசியல் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்தனள். இவர்களின் முயற்சியினால் இராமா காந்தன் நாட்டூரின் அரசியலில் அமர்த்தப்பட்டனன். உடனே இராஜ இராமா காந்தனும் இராணி பவானியும் மூர்ஷிதாபாத் ஜகத் சேட்டின் வீட்டை விட்டு நாட்டூருக்கு வரலாகினார்கள். சின்னாளிலேயே இராஜ இராமா காந்தன் மாண்டான். இவனுக்கு இரு குமாரர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர்.

இதில் இரு குமாரர்களும் மாண்டனர். இப்புதல்வியைத் தாராவென அழைத்தனர். இவளும் மணமுண்டு சில மாதங்களிலேயே தன் கணவனை இழந்து கைம்பெண்ணாயினள்.

இராஜா இராமா காந்தன் காலசென்ற சமயம் இராணி பவானிக்கு முப்பத்திரண்டு வயதென்பர். இந்நாட்டூர் அரசியல் முழுவதும் இவள் கையின்கீழ் வரலாகியது. இவ்வமயம் வங்காளத்தில் பெருங் குழப்பமும், கிளர்ச்சியும் பெருகி நாடு அல்லோலகோலப்பட்டுக் கிடந்தது. இருப்பினும், இராணி பவானி தன்நாட்டை மிகத் திறமையுடனும் தன் படையை மிக்க செல்வாக்குடனும் நடத்த முன்படலாகினாள். இவள் தன் படையை நடத்தி பிளாஸிக்குச் சற்று தூரத்தில் பிரிட்டிஷார் முகமதியப் படையுடன் போரில் போராடிக்கொண்டிருக்கும் சமயம் பிரிட்டிஷ் தளத்திற்கு உதவிபுரிய முற்பட்டிருந்தனள்.

நாட்டூர் அரசியலின் தத்துவாதிகாரியாக இராணி பவானி ஏற்பட்டவுடன் முகமதியப் படை வெடிப்புகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளப் பெரிய படை வேண்டியதாயிருந்தது. இவ்வமயம் சுராஜ்தௌலா, அலிவர்திகானையும் அவனுக்கு முற்பட்டிருந்த முகமதிய நவாப்புகளைக்காட்டிலும் மிகக்கொடியனாகவும் கொள்ளையினனாகவும் இருந்தனன். இவன் வங்காளத்தில் பெரும் கூதத்திக்கள்ளனாக இருந்தனன். இவனுக்கு முகமதிய அரசியல் பொக்கிஷம் போதாதிருந்தது. கப்பங்களை அதிகமாகச் சுமத்தி வசூலித்தும் போதாதிருந்தது. நியாயம் என்பது இவன் அகராதியில் வார்த்தையாக இல்லாதிருந்தது. கொள்ளை வழிப்பறியே இவனின் குணதிசயமாக இருந்தது. இவனைச்சுற்றி பல பாதகர்களும் பிழைத்துக்கொண்டிருந்தனர். இவனுக்கு வயது 20-30 எனவே சொல்லப்படுகின்றது. இவ்வமயம் போக்குகளை இராணி நன்கறிந்தவளாக இருந்தனள். இவள் மத்திய முகமதியப் படையைக் காட்டிலும் தன்னிடம் பெரும் சேனையிருப்பதையும்

நன்குணர்ந்திருந்தனள். இவ்வமயம் ஏனைய ஐவரில், நால்வர் இந்துக்களாகப் பெரும் புஜ பலத்திலிருந்தனர். இவர் ஒற்றுமைப்பட்டு முற்பட்டிருந்தால் வங்காளத்தில் முகமதிய ஆட்சி வேராகச் செய்யப்படாமலிருக்கலாமென சரித்திரக்காரர்கள் கூறுவர். இவ்வேற்றுமை ஏற்பட்டதினாலேயே வங்காளம் இந்துக்களின் நாடாகாமலிருந்தது. எனினும் நாட்டோர் இராணியாருக்கு இணையில் ஊக்கமில்லாமலிருந்தது. ஆனால் எதிர்த்தவர்களைப் போராடி வெற்றிபெறப் பெரும் சாமர்த்தியத்தையும் மிக பலங்களையும் கொண்டிருந்தனள். எனவே வங்காளத்தில் இராணியின் சேனை மிக சக்தியையும் தேர்ச்சிகளையும் கொண்டிருந்தது. இவளது குமாரி தாரா மிக அழகியவளென வங்காளத்தில் வதந்திகள் ஏற்பட்டிருந்தது. இவளும் இராணி பவானியுடன் அரசியல் அலுவல்களைப் பார்த்துக்கொண்டு, படையைப் பயிற்சி செய்விப்பதிலும் ஈடுபட்டிருந்தனள். இவளை இவ்வலுவலில் கண்ட ஆசாமிகள் இவளின் அழகை முகமதிய மன்னனுக்குச் சொல்லவே சுராஜ்தெளலாவும் இத்தாராவை கைவசப்படுத்த வேண்டுமென எண்ணங்கொண்டவனாகினன்.

நவாப் சுராஜ்தெளலா சில பாதுகாப்பினருடனும் நாட்டோருக்கு ஏகி இராணி பவானியின் படைகளின் திறமை ஒரு பேட்டியில் காண இச்சிப்பதாகத் தெரிவித்தனன். இராணியாரும் தம் முகமதிய அரசியல் மன்னனின் இச்சைக்கிணங்கித்தனனாலும், தன் குமாரியினாலும் தேர்ச்சிகள்பெறச் செய்யப்பட்டுள்ள படையை ஒரு மைதானத்தில் அணிவகுத்து வீரர்களின் திறமைகளைக் காட்டினார்கள். இவ்வமயம் சுராஜ்தெளலா தாராவின் பேரில் கண்ணும் கருத்துமாக இருந்தனன். இவளது குதிரைப்படையை நவாப்பின் முன்னர் நடத்திக் காண்பிக்க முயலுகையில் தன் பாதுகாப்பினர்களைவிட்டு இவளை எடுத்து வரும்படி கட்டளையிட்டனன். பாதுகாப்பினரும் சுமார் 500, 600 குதிரை வீரர்களாக இருந்தமையால் இப்படையை ஊடுருவிச்சென்று பிரிந்து தாராவைக் கைதுசெய்வதுபோல் தனிப்பட்டவளாக்கிச்சூழ்ந்துகொண்டு நவாப்பின் மாளிகைக்கு எடுத்தேக முயன்றனர். இதைத் தெரிந்த இராணி பவானி தான் அச்சமயம் காலாட்படை தளகர்த்தனாக அசுவாரூடராகிப் படை நடத்தி முகமதிய மன்னனுக்குத் திறமைகளைக் காண்பித்துவிட்டு அயர்ந்தமர்ந்து தன் குமாரியின் திறமையையும் குதிரை வீரர்களின் வல்லமையையும் கண்டுகளிக்க முற்பட்டிருந்தவள் இக்கோலத்தையும், குழப்பத்தையும் காணவே தன் குதிரையை முன்னிடச் செய்து, பிரிவுற்ற குதிரைப்படையை நடத்தித் தன் குமாரியை முகமதிய அரசனின் இருப்பிடம் எடுத்தேகாத வரையில் வென்று, தாயும் குமாரியும் பெரும்படை சூழ நவாப்பைத் தாக்க ஆரம்பிக்க முற்படவே சுராஜ்தெளலா தன் மாளிகைக்கோடி ஒளிந்துகொண்டனன். இவர்களைப் பின்தொடர்வதிற் பிரயோஜனமில்லையெனத் தன் இலமாகிய நாட்டோருக்குத் திரும்பித் தம் போர்வீரர்களை பெருகச் செய்துகொண்டு முகமதிய நவாப்பின் தாக்குகளை எதிர்பார்த்தே இருந்தனள்.

இச்செய்தி வங்காள இந்துக்களினுள் பரவியது. கிருஷ்ணாகூர், டாக்கா, பாட்னா சிற்றரசர்கள் ஒருங்குகூடி ஜெகத் சேட்டின மாளிகையில் இவனைத் தாக்க தயாரானமையும் நாட்டோர் இராணி பவானியையும வரவழைத்தனர். எல்லோரும் கூடிக்கலந்து மீர்ஜாபரை வங்காள நவாப்பாகவும், சுராஜ்தெளலாவைத்தாக்கவும் யோசித்துத் தீர்மானித்தனர். இதைச் செவிசாய்த்த பவானி இராணி மீர்ஜாபருக்குப்

பதிலாக ஏன் இந்து ஒருவனை வங்காள மன்னனாக்கக் கூடாதென்றனள். இன்னும் நாட்டு இராணியும் 'சகோதரர்களே, இதுதான் சமயம்! இச்சமயம் தப்பினால் வேறு சமயம் வாய்க்குமோ, வாய்க்காதோ' என்றனள். கிருஷ்ணாகூர் அரசனாகிய இராஜா கிருஷ்ண சந்திரன் செவியுற்று 'இவ்வீரயோசனைகளை எவர் காக்கக் கூடியவராகுவர்? நாம் பல பல்லாண்டுகளாகப் பிரிக்கப்பட்டு ஒற்றுமையில்லாமல் நம் நாட்டையும், பொருளையும், மக்களையும் முகமதியர்களுக்கு அடிமைகளாக்கி விட்டோம். இவ்வமயம் ஒரு இந்துவை வங்காள மன்னனாக்கி விடுவதென்றால் நமக்குள்ளேயே போரை மூட்டிக்கொள்வதாகும். நம் மன்னனை வங்காளியினமென்று மராட்டியர் படையெடுக்கலாம். இவர்களுடன் நாம் போராட வேண்டியதாகும். முகமதியர்களைப் பல ஆண்டுகளாக நாம் நன்கறிய முற்பட்டுள்ளோம். எனவே ஒருவன் அக்கிரமனானால் அவனைக் கீழாக்கி, வேறொருவனை மன்னனாக்கிக் கொள்வதே உசிதமான காரிய'மென்றார். இதைக் கேட்ட பவானி இராணியார் 'சகோதரர்களே, நான் கிருஷ்ணாகூர் அதிபதியின் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும் இம்மீர்ஜாபர் சுராஜ்தெளலாவைப் போலவே முன்படலாகினானில் என்செய்வது?' இதைச் செவியுற்ற டாக்கா இராஜனாகிய இராஜ இராஜ வல்லபன் 'மீர்ஜாபரை, சுராஜ்தெளலாவைப் போல ஆகாதிருக்கச் செய்யவே நாம் ஆங்கிலரின் உதவியை நாடியுள்ளோம். பிரிட்டிஷார் மிக பலமான படைகளைக்கொண்டுள்ளார். எனினும் இவர்கள் இவ்வமயம் வியாபாரிகளைப் போலவே வங்காளத்தில் வந்துள்ளார். இவர்களின் வியாபாரிகளுக்கு நாம் உதவி புரிவோமானால், நம் பக்கமே எப்போதுமிருப்பார். மீர்ஜாபரை நாம் வேண்டும்போது அடக்கி விடலாம்' என்றனர். இவை செவிசாய்த்த ஜகத் சேட்டும் 'சுராஜ்தெளலா ஆங்கிலர்களின் கல்கத்தா கோட்டையை நாசமாக்கி விட்டனன், எனவே இவனை தண்டிக்க நம் ஆங்கிலர் முற்படுவர். இப்புது நவாப் ஆங்கிலருடன் புழங்கிப் பழகாவிட்டால், இவனும் சுராஜ்தெளலாவினுடன் சேரவேண்டியவனேயாகும்' என்றனர். இதைக் கேட்ட பாட்னாவின் ராஜா ராயதுர்லபன், 'நான் தெட்சணத்தின் முகமதிய நவாப்புகளை ஆங்கிலர்கள் தோற்கடித்து விட்டனர்களென்று கேட்டுள்ளேன்' என்றனர். இவைகளையெல்லாம் கேட்ட இராணி பவானி, 'மகா ராஜாக்களே! நானோ ஒரு பெண் மகள். உங்களுடைய அரசியல் நோக்கங்களை மறுத்துப் பேச வல்லமையற்றவளே! நான் மீர்ஜாபரின் ஆளுகைக்கும் இணங்கினவல்ல, நான் மராட்டியரின் ஆளுகைக்கும் இணங்கினவளல்ல! நான் ஆங்கில ஆட்சிக்கும் இணங்கினவளல்ல, நீங்கள் கூறும் வண்ணம் வங்காளம் முகமதிய அரசியலில் பல்லாண்டுகளாகக் கட்டுப்பட்டுள்ளோம். எனவே சுராஜ்தெளலாவை அரசியல்விட்டு நீக்கி அவ்வம்சத்தில் ஒருவனையே நியமியுங்கள். இதில் என் குமாரியும் சம்மதித்துள்ளாள்' என்றனள்.

இவ்விதமான சம்வாதம் பல மணி நேரமாகியும் முடிவாக மீர்ஜாபரையே வங்காள முகமதிய மன்னனாகத் தேர்ந்தெடுக்கச் சம்மதப்பட்டு இதற்கு ஆங்கில ஆட்சியின் உதவியையும் நாடத்தீர்மானித்தனர். இதைச் செவியுற்ற பவானி இராணியார் 'மகா ராஜாக்களே! நான் இத்தீர்மானங்களை அங்கீகரிக்கினும் நானும் என் குமாரியும் இதில் கட்டுப்பட்டவர்களாகோம். இதைவிட அரசியல் கிளர்ச்சியேற்படின் மிக நலம். ஏனெனில் ஆங்கிலர்கள் முடிவில் தலைமை வகிக்கலாகுவர். ஒரு

செனுதிபதியை வங்காள ஆட்சி மன்னுத் தலைவனுக நிலை நாட்டுவதைக் காட்டிலும் ஒரு இந்துவை ஏன் நியமிக்கலாகாது. இல்லையேல் நாம் மேல் நாட்டினருக்கு நம் நாட்டை ஒப்படைத்து விடலாம். இது நமக்கும், வங்காள மக்களுக்கும், மிகப் பயனளிக்கும்' என்றனன். 'இருப்பினும் மீர்ஜாபரை வீண் பரீட்சிக்கக் கூடாது' என கிருஷ்ணநகர் அரசனாகிய ராஜ கிருஷ்ண சந்திரன் சொன்னான். 'இவன் அக்கிரமங்களைச் செய்யலாகின், ஆங்கிலேயர்களின் உதவியை நாடலாம்' எனவும் கூறினர். எனவே எல்லாம் ஏற்பாடாகி பிளாஸி சண்டையும் ஆரம்பமாகியது. ராணி பவானியும் ஆங்கிலேயர்களுக்கு உதவி புரியவேதன்றோ போர்க்களத்தின் அருகில் பெரும் படை வைத்துக்கொண்டிருந்தனள். சுராஜ் ஓடிவிட்டனன் மீர்ஜாபர் ஆங்கிலரைச்சேர்ந்தனன். ஆங்கிலர்களின் வெற்றியைக் கண்டவுடன் நாட்டூர் இராணியாரும் தம் நகரம் திரும்பினுள். கிளைவ் மூர்ஷிதாபாத்திற்குத் திரும்பினர். இருப்பினும் சில வருடங்கள் வங்காளத்தில் குழப்பங்கள் ஏற்படலா ஆகின.

மீர்ஜாபரும் கீழ் வீழ்த்தப்பட்டனன். மீர்காஸீம் வங்காள நவாப்பாகினுன். பின்னர் மீர்காஸீமும் துரத்தப்பட்டனன். மறுபடியும் மீர்ஜாபரே வங்காள முகமதிய ஆட்சித் தலைவனுகினுன். இவை மூர்ஷிதாபாத்தின் அருகில் நடந்துகொண்டிருந்தன. இவைகளினுல் கிருஷ்ணநகர், டக்கா, பாட்னு, நாட்டூர் முதலியவை பாதிக்கப்படவில்லை. வட வங்காளம் ராணி பவானியின் கீழ் இருந்தது. தென் வங்காளம் இராஜ கிருஷ்ண சந்திரனின் கீழ் இருந்தது. கீழ் வங்காளம் இராஜ வல்லவனிடமிருந்தது. மேல் வங்காளம் இராஜ துர்லபனிடமிருந்தது. இவர்கள் நவாப்பின் நண்பர்களாகவும் ஆங்கிலர்களின் சிநேகிதர்களாகவும் இருந்தனர். இவர்கள் தம் தம் கப்பங்களை வருடா வருடம் சரியாய்க் கட்டிக்கொண்டிருந்தனர். வங்காளம் மிகச்செழிப்பாயும், அமைதியாயும் இந்தியாவின் நன்னுடாக இருந்தது.

சில நாட்களின் பின்னர் இராணி பவானி ஒரு மந்திரியை ஏற்படுத்தி தன் நாட்டை ஆள முயன்றனள், [illegible] சாதித்துக்கொண்டனள். இவள் பெரிய [illegible] தன் குமாரியும் கங்கை நதிக்கரையில் வாழ முயல [illegible]. மூர்ஷிதாபாத்தின் மேல் புறத்தில் கங்கைக் கரையில் ஒரு மாளிகையை அமைத்து, தான் வைதீகப் [illegible] தன் நாட்களைக் கழிக்க முயன்றனள். எனவே பெரும் வைதீகப் பிராமணர்கள் இவளைச் சூழ்ந்தனர். சமஸ்கிருதக் கல்வி பெருகப் பல உதவி புரிந்தனள். சத்திரங்கள், படிக்கட்டுகள் முதலியவைகளை ஏற்படுத்தினுள். இந்நாட்டில் பல கிணறுகள் வெட்டப்பட்டன. காசியில் பல கோயில்களைக் கட்டினுள். பல தரும சாலைகளையும் ஏற்படுத்தினுள். ஒவ்வொரு வருடமும் சுமார் 25 லக்ஷம் ரூபாய்களைத் தருமத்தில் செலவிட்டனள். இவளின் வாரிசாக இராஜ இராம கிருஷ்ணன் ஏற்பட்டனன். இவனும் சில வருடங்களில் சாது வேடதாரியாகினுன் இவன் பெரும் தர்மங்களைச் செய்தான்.

இவன் பின் இவன் அரசியல் பிரிட்டிஷ் அதிகாரத்துள்ளாகி, இவனின் வாரிசுகள் கவர்மெண்டாரினுல் மகா ராஜ பகதூர் என்ற பதவியை வம்ச பரம்பரையாக அனுபவித்து வட வங்காளத்தில் நாட்டூர் என்ற பண்டைய நகரத்திலேயே வாழ்கின்றனர். இவ்வீரப் பெண்மணியாகிய பவானி இராணியாரும், துர்க்காவதி இராணி, யஷோஷ்வரி ராணியார்களைப் போலவே இந்தியாவுக்குச் சூடாமணிகளாக விளங்கினர்.

நிராசை அல்லது நீங்காத் துயரம்.

(சகோதரி வி. பாலம்மாள்)

(காப்பி ரைட்)

(490-வது பக்கத் தொடர்ச்சி)

11-வது அதிகாரம்.

அன்பு என்ற பதத்தை மிகச் சுலபமாக உச்சரிக்கலாமேயன்றி அதன் பெருமையை நன்கறிந்து கொண்டவர் மிகச் சிலரே. உலக இயக்கம் நடைபெறுவதற்கு மூல காரணமாகவும் சம்சார சக்கிரம் தங்கு தடையின்றிச் சுழல்வதற்கு மின்சார விசைபோலும் கடவுள் அடியைச் சேருவதற்கான பாதையில் ஆசானைப்போலும் விளங்குவது அன்பேயாகும். இவ்வன்பு குடும்ப வாழ்க்கையில் பல உருவத்துடன் தான் அமைந்து முடிவில் அன்பே சிவம் என்ற தத்துவத்தில் மனிதனைச் சேர்ப்பிக்கும் அற்புத சக்தியைப் பெற்றுள்ளது. தாயிடத்தன்பு தந்தையிடத்தன்பு சகோதரியிடத்தன்பு சகோதரனிடத்தன்பு மனைவியிடத்தன்பு மக்களிடத்தன்பு பந்துக்களிடத்தன்பு சுற்றத்தார்களிடத்தன்பு மித்திரர்களிடத்தன்பு தேசத்தினிடத்தன்பு கடவுளிடத்தன்பு என்று பலவகைப்பட்டிருப்பினும் எல்லா அன்பையும் முறையே அநுபவிக்கக் கூடிய நிலைமையை மனிதன் தன் தாயிடத்திருந்தே முதன் முதல் தெரிந்து கொள்கிறுன். எந்தத் தாய் தனது புனிதமாகிய சிறு வயதில் ஐயிரண்டு திங்கள் வளர்த்துப் பிறகு தன் மடிமீதும் மார் மீதும் தோள்மீதும் அணைத்து மெத்த கவனத்துடன் அன்பே மயமாக ஆதரவு உருவாக வளர்த்தெடுத்துத் தன்னை ஒரு மனிதனுகச் செய்கின்றுளோ அத்தாயின் அன்பைக் காட்டிலும் மற்றவை உயர்வுறமாட்டா. தாயிடத்தன்பின் மூலமாகவே மற்ற அன்புகளை மனிதன் பெறக் கூடுமென்பதுடன் மற்ற அன்புகளைத் தாயிடத்தன்புக்கு நிகராகச் சொல்லவும் முடியாது. மற்ற அன்புகளெல்லாம் கடமையைப் பொருத்து ஏற்படுகின்றன. கைம்மாறு எதிர் பாராததும், இயற்கையாய் அமையப் பெற்றதுமான தாயிடத்தன்பை மிக்க உயர்வெனக் கருதியே பெரியோர்கள் கடவுளன்பை அதற்கொப்பிட்டுக் கூறியிருக்கின்றனர்.

"தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல இவ்விடத்து—நீ யிருந்து நான்றளர்ந்து நின்றேன் பராபரமே"

"அன்னையில்லாத் தநயன்போலலக்கண்ணுற்றேன—கண்ணூர வெந்நகத்திற்ருய் போலிருக்கும் பராபரமே"

"எத்தன்மை குற்றமியற்றிடினும் தாய் பொறுக்கு—மத்தன்மை மின்னருளும் பராபரமே"

என்று பெரியாரொருவர் பாடியுமிருக்கின்ருர். தாயின் அன்பு விவரித்தெடுத்துரைக்கவியலாத உயர் நிலை பெற்றிருப்பது பற்றி இப்பொழுதோ இன்னும் அரைக் கணத்திலோ வென்று யமனுடன் வாதாடிக்கொண்டிருந்த தங்கத்திற்குத் தன்னருமை மகனின் குரலினோசையால் மெய் விழிப்புண்டாயிற்று. மெதுவாகக் கண் திறந்தாள். அழுது கொண்டிருக்கும் மகனை உற்று நோக்கினுள். மலமலவென்று கண்ணீர் உதிர்த்தாள். துக்கம் தாங்காது நெஞ்சு படபடக்க, நா தழுதழுக்க, மெய் சோர, முகம் வாட, கண்ணீர் ஆருய்ப் பெருக

அச்சமயம் தாயும் மகனும் இருந்த நிலைமையை எடுத்துரைத்தல் முடியாத காரியம். "என் செல்வமே! நான் சென்று வருகிறேன்; கண்ணீரும் கம்பலையுமாகக் கழிக்கப்பெற்ற என் வாழ்நாள் முடிவுறும் காலம் நெருங்கி விட்டது. உன் தந்தை என்னை விவாகித்து எனக்குகந்த கணவனாக ஏற்பட்டிருந்தும் நான் முன்னாள் செய்துள்ள தீவினையினால் கணவனைப் பிரிந்து வாழ்நாளை வீணாகக் கழிக்கவேண்டியவளானேன். கட்டுக் கட்டாக நான் இளமையிற் படித்துவந்த புத்தகங்களில் இல்லறத்தினுயர்வு பற்றியும், இல்லாளென்று பெயர்படும் பெண்பாலின் பெருமை பற்றியும் ஒரு வரியேனும் எழுதப்பட்டிருக்குமாயின் நான் இக்கதிக்காளாயிருந்திருக்கவே மாட்டேன்.

"பெண்களுக்குப் பிறந்த வீட்டுச் செல்வமொன்றே பெருமையை விளைவித்திடாதென்ற உண்மையை என் தாய் எனக்கு ஒரு முறையேனும் உபதேசித்திருந்திருப்பாளாயின் நான் இத்துர்ப்பாக்கிய நிலைமையையடைந்திருக்கவே மாட்டேன். நான் பேசிய கொடுஞ்சொற்களை—அன்பற்ற வார்த்தைகளை—இணக்கமற்ற மொழிகளை—ஏளனம் வாய்ந்த பதில்களைக்கேட்டு—மனம் சகியாதவராக—உன் தந்தை—என்னை விடுத்து—என் ஆசையை ஒழித்து—என் முகத்தை இனி பார்ப்பதில்லையென வெறுத்து—குடும்ப ஆசையைத் துறந்து—உலக வாழ்க்கையை மறந்து சென்றார்.

"அச்சமயமேற்பட்ட ரயில் விபத்தில் உன் தந்தை யிறந்து விட்டதாகப் பலர் நினைப்பினும் எனக்கு மட்டும் அவர் இன்னம் உயிர் வாழ்வதாகவே தோன்றுகின்றது. எனக்கு இத்தினமே கடைசி தினமாகையால் சாந்தமே யுருவாகக்கொண்ட உன் தந்தையின் திருமுகத்தைக் காணப்பெறாத பெரும் பாவியாக மாளுகின்றேன். என் மகனே! நீயாவது தக்க பெண்ணை மணந்து சுகமாக வாழ்வதைக் கண்டு சிறிதளவு என் துயரத்தை மறந்திருக்க வெண்ணினேன். கணவனை அவமதித்துப் பெரும் பேதையாகிய எனக்கு இவ்வதிர்ஷ்டத்தை யளிக்கவும் எல்லாம் வல்ல இறைவன் என்பேரில் எள்ளளவும் கருணையற்ற கல் மனத்தினனானார். என் வாழ்வினை வலுத்திருக்கும் பொழுது கடவுளை நோவதும் அறிவினமே. சுந்தரிக்கேற்றக் கணவன் நீயேயென்றும், உனக்குகந்த மனைவி அவளேயென்றும் நான் மதித்திருந்தேன். என் துரதிர்ஷ்டம் காரணமாக திடீரென நீ விவாகம் செய்து கொள்ளமாட்டேனென்று சொல்லி விட்டாய். நமது சமூகக் கட்டுப்பாட்டின் கொடுமையை எதிர்க்கமாட்டாது சுந்தரிக்கு உடனே விவாகம் முடித்தல் அவசியமாயிற்று. தாய் மாமனின் அருமை மகனுக்கு அவள் வாழ்க்கைப் பட்டும் யாது பயன்? விதி யாரை விட்டது. துரதிர்ஷ்டம் வாய்ந்த அத்தையின் அடிச்சுவட்டை அவளும் பின் பற்றினாள். குடிகாரனாகிய கணவனால் இவ்வாறு மாத காலமாக சுந்தரி பட்டபாடு சொல்லத் திறமோ. குடிவெறியில் கணவனிழைக்கும் இம்சையைத் தாங்கமாட்டாது அவள் மனம் நொந்து ஆகார நித்திரை யற்று மரணத்தையே சரணமென்றடைந்திருக்கிறாள் பார். மன வேதனையால் இருதய நோய் ஏற்பட்டு விட்டதாகவும், இனி அவள் பிழைப்பது அரிது என்றும் வைத்தியர் வெளிப்படையாய்க் கூறிவிட்டார். தனது ஒரே குழந்தையும் ஒரே கதியுமான சுந்தரியை இக்கோலத்திற் பார்க்கும் என் தமயனுடையவும் மதனியுடையவும் துக்கத்தைப் பாராது என் ஆயுள் முடிவடைவதில் சிலாக்கியமே" என்று தங்கம் தன் மகனுக்குக் கூறிக் கொண்டிருக்கும் சமயம், 'ஐயோ! என் மகளே!

என் வாயில் மண்ணை யள்ளிப்போட்டு என் வயிற்றில் என்றுமழியாத் தீயை வைத்து எங்கு சென்றாய்' என்று மைத்துனி வாய்விட்டலறியது கேட்டு "சுந்தரி இறந்து விட்டாளா" என்ற வண்ணம் தங்கம் கண் மூடினாள். உடனே உயிரும் அவள் உடலைவிட்டு நீங்கியது. தான் மணக்கவேண்டுமெனக் கருதியிருந்த சுந்தரியும் தனதருமைத் தாயும் ஒரே சமயத்தில் ஒரே விடத்தில் உயிர் நீங்கப்பெற்று சவமாய்க் கிடக்கும் கொடும் காட்சி கண்டு பாலகோபாலன் கோவெனக் கதறினான், மெய் பதறினான், உள்ளம் சிதறினான், அழுதான், புலம்பினான், அம்மா என்றான், அலறினான், 'ஐயோ சுந்தரி' என்றான், முடிவில் மூர்ச்சையடைந்து விட்டான்.

12-வது அதிகாரம்

"ஆ, என் மகளே!' என்றும் 'ஐயோ! என் தங்காய்' என்றும் அவ்வீட்டிலுண்டாகும் அழுகுரலோசை அத்தெருவை அதிரச் செய்தது. அடடா இது என்ன ஆச்சரியம்! இது என்ன விஷயம், ஹரித்துவாரத்திற்கும் லாகூருக்கும் என்ன சம்பந்தம்! சுவாமி விமலானந்தருக்கும் இவ்வீட்டிற்கும் என்ன சம்பந்தம். தங்கம் தன் மகனுடன் பேச ஆரம்பித்ததிலிருந்து கேசவன் வீட்டில்—நடு வீட்டில்—தங்கத்தின் தலைமாட்டில்—நின்றுகொண்டிருக்கும் இச்சந்நியாசி யார்! முற்றும் துறந்த துறவியின் கண்ணீருக்கும் உயிரை யிழந்த தங்கத்திற்கும் என்ன சம்பந்தம்! ஐயோ பாபம்! கடவுள் சிருஷ்டியில் ஓர் உயிர் முடிவதென்றால் யார்தான் பொறுப்பார்! சந்நியாசி யென்றால் தன்னளவில் தன் வாழ்க்கை இன்பங்களைத் துறந்தவரே யல்லாது, தன் சுயநலத்தை விடுத்தவரே யல்லாது, பிறர் துக்கத்தைக் காணும் காலத்திலும் அவர் மனம் கசிந்துருகாது கற்பாறை போலிருந்து தீரவேண்டியது என்ன நியாயம். பய பக்தி விசுவாசத்துடன் தன்னிடம் படித்து வந்த பாலகோபாலனைக் குருகுலத்திற்குக் கூட்டிச் செல்லவேண்டுமென்ற நோக்கத்துடன் புறப்பட்டார். கேசவன் வீடு வந்தார். அச்சமயம் பாலகோபாலன் தன் தாயருகில் உட்கார்ந்திருக்கக் கண்டார்; அருகிற் சென்றார்; தங்கத்தின் தலை மாட்டில் நின்றார்; தங்கம் மொழிந்தவைகளனைத்தையும் கேட்டார்; சுந்தரியும் தங்கமும் ஒரே சமயத்தில் மரண மெய்தியதை யறிந்தார். சுவாமி விமலானந்தர் அவ்வீட்டினுள்ளே பிரவேசித்ததை ஒருவரும் கவனிக்கவில்லையே யொழிய அவர் அரை நொடியில் அக்குடும்ப சரித்திரத்தைப் பூரணமாயறிந்து அப்பரிதாபக் காட்சியைக் கண்டு சகியாதவராய் மனம் உருகிக் கண்ணீர் விடுகின்றார் போலும். ஒரு பெண்பால் சிறு வயதில் தானிழைத்த சிறு பிழையால் தனக்குப் பெரும் பாக்கியமாயுள்ள கணவன் அன்பையிழந்து கதறிக் கதறி அழுது மனம் நொந்து மரணத் தருவாயில் அதை நினைந்து மனமுருகுவாளாயின், ஓர் இளம் பெண் தனக்கேற்ற நாயகனை விவாகித்து சுக சந்தோஷத்துடன் காலம் கழிக்கப் பெறாதவளாக சமூகக் கட்டுப்பாடென்ற பெரும் புலிக்கிரையாகிக் குறித்த காலத்தில் அச்சடங்கை முடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பெற்றோரால் விவாகம் முடிக்கப்பெற்று எவன் தன் மானத்தையும் உயிரையும் உடலையும் மாறி மாறி ஒன்றினுமொன்றை உயர்வாக மதித்துக் காப்பாற்றக் கூடிய கடமையைப் பெற்றிருக்கின்றானோ, எவன் வசிக்கும் இல்லம் தனக்கு மோட்ச வீடென மதிக்கப்படுமோ, எவனுடன் அக்கினி சாட்சியாகச்செய்து கொண்ட ஒப்பந்தமானது தனக்கு, தன் வாழ்நாளிற்கு, தன் பிறந்த வீட்டிற்கு, தான் புகுந்த வீட்டிற்கு, தன் சமூகத்திற்கு, தன் சமூகக்கட்டுப்பாட்டிற்கு, தன் தேசத்திற்கு ஒப்புயர்வற்றதாக

இன்றளவும் கருதப்படுகிறதோ, எவனுடைய மெய்யன்பானது தன் பெற்றோரின் பிரிவைப் பொருட்படுத்தச் செய்யாதோ, எவன் ஓர் கதியாகவும் உற்ற தோழனாகவும் நற்கதி யளிப்பவனாகவும் நல்லாசிரியனாகவும் ஒப்பற்ற பந்துவாகவும் ஈருடலைப் படைத்த ஓர் உயிராகவும் தன்னால் மதிக்கப் பெறுகிறானோ அக்கணவனால், அவனுடைய துர் வழக்கத்தால், அவனாலேற்பட்ட கொடுமையால் உடல் மெலிந்து, உள்ளம் நொந்து, முடிவில் அக்குறைக்குத் தன் உயிரையே பலியிட்டு விடுவாளாயின், தாயை யிழந்ததன்றித் தந்தையை யறியப் பெறாத பருவ வயதில் தக்க கல்வியறிவைப் பெற்றுதான் மணக்கக் கருதிய பெண்பால் மற்றொரு கொடியனை மணக்கப்பெற்று அக்கொடுமையைச் சகியாது தன் முன்னிலேயே உயிர் விடவும் இதைக் கண்ட அதிர்ச்சியால் தன் தாய் மரண மெய்தவும் கண்டு பாலகோபாலன் கதறியழுது மூர்ச்சையடைவானாயின் இப்பரிதாபம் கண்டு சுவாமி விமலானந்தர் கண்ணீர் விடாதிருக்க முடியுமா! ஜனங்களின் துயர் கண்டும் மனங் கலங்கக் கூடாதென்றால் அச் சந்நியாசிக்குப் பிட்சையளித்துப் பணிவிடை செய்ய முன்வருவார் யார்.

சீடப்பிள்ளைக்கு விவாகம் முடிக்கவேண்டுமென்றும், எதிர் வீட்டுப் பிரபுவின் மகளிற்கு நல்ல வரனைத்தேடி யளிக்கவேண்டுமென்றும், மடத்திலுள்ள மண் தரையை வெட்டி யெறிந்து மழமழப்பான பளிங்குக் கற்களைப் பரப்ப வேண்டுமென்றும், மேற்போடும் போர்வையில் குறைந்த பட்சம் இரண்டு மணங்கு இடை தங்க ஜரிகையாவது இருக்கவேண்டுமென்றும், தனது பொக்கை அறையில் மோதிரங்களும் தங்க நாணயங்களும் குவிந்திருக்க வேண்டுமென்றும் சுவாமி விமலானந்தர் நினைத்திருப்பின் கண் மறைந்தேனும் அவரை தூஷித்துத் திரியச் சிலர் முற்படலாம். ஆடம்பர வாழ்க்கை சிறிதுமின்றித் தமது வாழ்நாளைத் தேசியக் கல்வி ஸ்தாபனத்தில் ஈடுபடுத்தித் தன் பொழுதை நற்பொழுதாகக் கழித்து வரும் இச்சந்நியாசியை—தினம் ஒரு பொழுது, அதுவும் உப்பின்றி உண்டு காலம் கழிக்கும் இத்துறவியை—சந்தேகித்து முன்பின் அறியாத மாதர்களின் மரணத்திற்கும் முற்றும் துறந்து முழுக் காஷாயம் அணிந்து துறவியெனப் பெயர் படைத்த சந்நியாசியின் கண்ணீருக்கும் என்ன சம்பந்தமென்று நினைப்பது பெரும் பிழையேயாகும்.

வாசகர்களே!

"சுவாமி விமலானந்தரைப் பற்றி நீங்கள் ஏன் இந்த மாதிரி எண்ணமிடுகின்றீர்கள். பெண் என்றால் பேயும் இரங்குமென்பது முதுமொழியன்றோ. பேதைப் பெண்ணின் கண்ணீர் கண்டு கலங்காத கல்நெஞ்சமும் உளதோ. பெண் விஷயத்தில்—பெண் மக்களின் முன்னேற்றத்தில்—பெண் கல்வியில்—பெண் மக்கட்குரியப் படிப்பில்—பெண் மக்களை உபசரிப்பதில்-பெண்களுக்குரிய சீர்திருத்தங்களளிப்பதில்—பெண்களைக் கண்ணியப்படுத்துவதில்—பெண்களுக்குச் சமத்துவம் அளிப்பதில்—பெண்களுக்குதவி புரிவதில்—பெண்கள் முன்னேற்றத்திற்கான வழியைத் தேடுவதில்—பெண்களைக் கற்றறிந்தவர்களாகச் செய்வதில்— பெண்களுக்கு உயர் பதவி யளிப்பதில்—பெண்களை கௌரவிப்பதில்—பெண்களை இகழ்ந்துரையாதிருப்பதில்—பெண்களைப் புகழ்ந்துரைப்பதில்-பெண்களின் மூட வாழ்க்கையை நீக்குவதில்-பெண்கள் கஷ்டம் கண்டு மனமிரங்குவதில்—பெண் கல்விக்குப் பேராதரவளிப்பதில்—பெண் சமூகத்தை மதித்து நடப்பதில் நீங்கள் சுவாமிஜியை யொப்புக்காது பின்னடைந்து நிற்கின்றீர்கள் என்ற உலகச் சொல் உண்மை தானே. சுவாமி விமலானந்தரைப் பற்றி நீங்கள் வித்தியாசமாக நினைப்பது

பெரும் தவறு. பெண்ணின் பரிதாப நிலைமையையும் பெண் மகனின் துயரையும் கண்டு மனம் கசியாத மானிடனை ஆறறிவு படைத்தவனென்று எவ்வாறு ஒப்புக்கொள்ளலாம்? கதாப்பிரியர்களே! எடுத்த கதையை முடிப்பதற்குள் பெண் மக்களிடையே அபிப்பிராயம் கொள்ள நினைப்பீர்களாயின் இப்பாபச் செய்கைக்கு விமோசனமே கிடையாதென்று நினையுங்கள். தெரிந்தோ தெரியாமலோ பெண்களை தூஷித்துரைக்க உங்கள் நா முற்படுமாயின் அச்சமயம் உங்கள் தாயையும் சகோதரிகளையும் மனைவியையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பெண்களை தூஷித்தல் சந்தேகித்தல் என்கிற கொடிய நோய் உங்களையணுகி உங்கள் புகழையும் மாய்த்து விடாமல் பெருந் தன்மை உயர் நோக்கம் விசாலபுத்தியென்ற ஒப்புயர்வற்ற மூலிகைகளைக் கைவசம் வைத்திருக்கத் தவறாதீர்கள். எவள் விவாகபந்தமென்பதை உற்ற பந்துவாக நினைத்து அதன் வழி நடத்தல் அவசியமென்று கருதப்படும் புண்ணிய பூமியாகிய பாரத நாட்டிற் பிறந்தவளோ, எவள் கணவனை மதிக்கக் கூடிய உயர் இனத்தில் ஜனித்தவளோ, எவள் பெண் மகட்குரிய படிப்பைக் கல்லாது தன் வாழ்நாளைக் கண்ணும் கண்ணீருமாய்க் கழித்து வந்தாளோ, எவள் மனம் இல்லற வாழ்க்கையில் தவழ்ந்து வழுக்கி இடர் உற்றதோ, எவள் பெண் ஜன்மத்திற்குரிய உயர் பதவியையடையமாட்டாது மனம் வாட்டமடைந்தாளோ, எவள் மனம் மூடர் சொற்களுக்குப் பதைபதைத்திருந்ததோ, எவளுடைய பரிசுத்த வாழ்க்கையைக் கல்வியறிவற்ற மூடர்கள் பேசித் திரிந்தார்களோ, அத்தகைய துரதிர்ஷ்டக்காரியாகிய தங்கத்தை மரணப் படுக்கையிற் கண்டு மாலை மாலையாய்க் கண்ணீர் விட்டழுது நிற்கும் சுவாமி விமலானந்தரைப் பெண்களிடத்துப் பிழை யிழைக்கும் பெரும் பாதகனாக நினைத்து விடாதீர்கள். தங்கத்தின் நிராசையையும் சந்நியாசி விமலானந்தரின் நீங்காத் துயரையும் கவனிப்பீர்களேயானால் உங்களை அறியாமலேயே உங்கள் கண்களும் கண்ணீரைப் பெருக்குமென்பதை நன்குணருங்கள். ஏனெனில் சுவாமி விமலாநந்தரே தங்கத்தின் கணவனாகிய சங்கரன்! சுந்தரியின் நிலை நிராசையுள்ளதா அல்லது பாலகோபாலனின் வாழ்க்கை நீங்காத் துயர்கொண்டதா என்பதையும் ஆராய்ந்தறிந்து மற்றவர்களுக்குமறிவிக்கத் தவறாதீர்கள்.

முற்றிற்று.

குற்றம் புரியும் ஸ்திரீகள்.

(ஒரு நிபுணரின் ஆராய்ச்சி)

"ஸ்திரீகள் சாதாரணமாகப் பொல்லாதவர்களாயிருப்பதில்லை; ஆனால் பொல்லாத்தனத்தில் இறங்கி விட்டால் ஆண்களை விட மோசம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஆண்கள் சுலபமாக ஒரு குற்றத்தைச் செய்து விடுவார்கள்; ஆனால் அதே சந்தர்ப்பத்தில் ஸ்திரீகள் புத்தி தடுமாறமாட்டார்கள். குற்றம் செய்பவர்கள் இயற்கையிலேயே அத்தகைய சுபாவமுடையவர்கள் என்ற கூற்று உண்மையா பொய்யாவென்று முடிவு கட்டிவிட முடியாது; ஆனால், அந்தக் கூற்றில் உண்மையிருப்பின், அது ஆண் குற்றவாளிகளை விடப் பெண் குற்றவாளிகளின் விஷயத்தில்தான் அதிகம் உண்மையாயிருக்க முடியும்.

ஒரு ஸ்திரீக் குற்றவாளி யென்றால், சாதாரணமாய் அவள் அழகு வாய்ந்தவளாயும், ஆண்களை அடக்கிப்போடும் அபூர்வ வல்லமையுள்ளவளாயும் இருப்பாள் என்று பலருக்கு ஹேஷ்யமாக ஏதோ படுகிறது. அப்படிப்பட்ட பலர் உண்மையில் இருக்கிறார்கள். ஆனால் நமது (பிரிட்டிஷ்) நியாய ஸ்தலங்களுக்கு வருகிற ஸ்திரீ குற்றவாளிகளில் பெரும்பாலர் அழகானவர்களென்று ஒரு காலும் சொல்ல முடியாது.

ஸ்திரீகள் குற்றம் செய்வதற்கு இசைந்தவர்கள் தான். ஆனால் அவர்களுடைய சரீர பலஹீனம் காரணமாகப் பலாத்காரமான குற்றங்களிற் பிரவேசிப்பதில்லை. ஆயினும் கபடநாடகத்திலும், தந்திர சூழ்ச்சிகளிலும், அவர்கள் வல்லவர்களாகையால் அவற்றின் மூலமாகக் குற்றத்திற்குக் காரணமாயிருக்கிறார்கள்!

ஸ்திரீகள் பேராசை பிடித்துக் குற்றம் செய்வது அபூர்வம். யாராவது ஓர் ஆண் பிள்ளை அல்லது ஆசை நாயகனால் தூண்டப்பட்டே குற்றம் செய்கிறார்கள். சில ஸ்திரீகள் நன்றாக உடை தரிக்கவும், காதலன் கண்ணுக்கு ரதி போல் தோன்றவும் திருடுவதுண்டு. ஒரு தோழி அல்லது இதர ஸ்திரீ மேன்மையான உடை தரித்திருந்தால் அதைப்போல் தானும் தரிக்க ஆசைப்பட்டு, ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த சிறுமியாயிருந்தவள் ஒரு சாமானைத் திருடியதாகச் சமீபத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது ஞாபகமிருக்கும்.

கொலை செய்ய வேண்டுமென்று எந்த ஸ்திரீக்காவது தோன்றினால், உடனே விஷம் கொடுத்து விடலாமென்ற புத்திதான் அவளுக்கு உண்டாகிறது. சாஸ்திரோக்தமாக ஸ்திரீ கொலை செய்வாள். லாபத்தை உத்தேசித்து ஸ்திரீ எப்போதும் கொலை செய்யமாட்டாள். யாராவது ஆண் பிள்ளையிடத்தில் கொண்ட கோபம் அல்லது ஆக்திரந்தான் காரணமாயிருக்கும். யாராவது ஓர் ஆண் மகன் வெறுக்க ஸ்திரீகள் சகிக்கமாட்டார்கள். தன்னைவிட அதிகமாகத் தன் புருஷன் இன்னொரு ஸ்திரீயைக் காதலிக்கிறான் என்று தெரிந்து மற்றொருவனை நாடித் தன் புருஷனை ஒழிக்க விரும்பினாலும் சரி, தன் காதலை நிராகரித்தவனை ஒழித்துப்போட விரும்பினாலும் சரி, ஸ்திரீகள் கொலை செய்யக்கூடும். கொலைக்கு அவை தான் முக்கிய காரணம்.

கடைத் திருட்டு, ரயில் வண்டிகளில் ஆண் மக்களைப் பயமுறுத்திப் பணம் வாங்குதல், வேண்டுமென்றே வேற்று புருஷர்களுடன் வண்டியேறுதல், பூமியைக் குடைந்துபோகும் ரயில் வண்டிகளில் உடைகளை ஒரு மாதிரி கசக்கிக் கொண்டு பிறகு யாராவது ஆண் பிள்ளை தன்னை உபத்திரவப் படுத்தியதாகச் சொல்லிப் பயமுறுத்தி நஷ்ட ஈடு கேட்டல் முதலிய பல தொழில்களில் ஸ்திரீகள் கைதேர்ந்தவர்கள். சூதாட்ட ஸ்தலங்களுக்கு நபர்களைக் கள்ளத்தனமாக அழைத்துச் செல்லுவோர் பெரும்பாலும் ஸ்திரீகளே. விபசாரத்திற்காக ஸ்திரீகள் கொடுக்கல் வாங்கல் செய்யும் காரியஸ்தர்களிலும் பலர் ஸ்திரீகள் எல்லாவற்றையும் விட நகைத் திருட்டில்தான் அவர்களுக்கு அதிக சாமர்த்தியம். பிறர் சந்தேகிக்காதபடி அந்த வேலை வெகு ஜோராக நடக்கும்.

ஒரு ஸ்திரீ கொடுமை செய்வதென்று வந்துவிட்டால் அது மகா கோரமாயிருக்கும். குழந்தைகளாகட்டும், மற்றவர்களாகட்டும் சரீர வேதனையோ மனோவேதனையோ பட்டால் அதைப் பொருட்படுத்தாமல் சும்மா பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய ஸ்திரீகள் உண்டு. பிரான்ஸில் ஒரு குடியானவ ஸ்திரீ தனது மூத்தாளுக்குப் பிறந்த பெண்களை அநேக வாரகாலம் பன்றித்தொட்டிகளில் தள்ளும்படி செய்து பன்றிகளுக்குப் போட்ட தீனியையே அப்பெண்களும் தின்று ஜீவிக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தினாள். உலகத்தில் மற்றெந்த நகரையும் விட பாரிஸ் பட்டணத்தில் ஸ்திரீ குற்றவாளிகள் அதிகம். அவர்கள் செய்யும் வேலையோ அபாரம். மகா மோசமான குற்றங்கள் புரியவும் புரியும்படித் தூண்டவும் அவர்கள் பின் வாங்குவதில்லை.—‘சுதேசமித்திரன்’.

ஹொரேஷஸ்.

(ஜனாப் A. M. அல்லாபிச்சை.)

(479-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்டியாவை முற்றுகைசெய்து வந்த தார்குவினும், அவன் மைந்தரும் உரோமாபுரியில் நடைபெற்ற விஷயங்களை யறிந்து, அவ்விடத்துத் தங்கள் அரசாட்சியை மறுபடியு முன்போல நிலை நாட்டச் சென்றனர். அப்பொழுது சாத்தப்பட்டிருந்த நகரத்தின் மதில் வாயில்கள் அவர்களை உரோமாபுரியினுட் செல்லாமல் தடுத்தன. அந்நகரவாசிகட், வெளிப்புறத்தில் தடை செய்யப்பட்ட அக்கொடுங்கோன் மன்னனையும், அவனுறவினரையும், மைந்தர்களையும் நோக்கி, “ எமது கடிநகர்க்குள் காற்சுவடும் படாதபடி விலக்கப்பட்டீர் ” என ஏகோபித்துக் கூறினர். அதுகேட்டுச் செருக்குற்ற தார்குவினும், அவனிரு குமாரர்களும் எட்ரூரியாவிலுள்ள ஒரு நகரத்திற்கேகினர். அதிபாதகனாகிய ஸெக்ஸ்டஸ் “கபீ” என்னும் நகரத்திற்கேகியபின், ஆங்குள்ள நகரவாசிகளுக்குத் தான் முன்செய்த தீவினைப்பயனால் அவர்களால் கொல்லப்பட்டனன்.

உரோமாபுரியில் அச்செருக்குற்ற தார்குவின் இருபத்தைந்து வருஷம் ஏகாதிபத்தியஞ் செலுத்தி வந்தனன். உரோமாபுரி நகரமாக ஏற்படுத்தியது முதல் தார்குவின் இறுதியாக அந்நகரத்தில் இருநூற்று நாற்பத்தி நான்கு வருடம் வரையில் நிலைபெற்றிருந்த ஏகாதிபத்தியம், அத்தார்குவினது கொடுங்கோன்மையாலும், அவன் மைந்தன் ஸெக்ஸ்டஸ் என்பவனது நேர்மையற்ற செய்கையாலுஞ் சீர்குலைந்து அழிவுற்றது. அத்தார்குவின் முதலியவர்களைத் துரத்திய பின்னர் உரோமர்கள் ஜூனியஸ் புரூடஸ் என்பவனையும், வெலீரியஸ் என்பவனையும் தங்களுக்கு நீதிபதிகளாக ஏற்படுத்தினர்.

அவ்விருவரும் உரோமாபுரியில் நீதி புரிந்து வந்தனர். குடிகளுக்கு நன்மை புரியும் வண்ணம் பல சட்டங்களை ஏற்படுத்தினர். இப்படியவர்கள் தங்கள் தேயத்தை யாண்டு வருகையில், கோபமும் பொறாமையுங் கொண்ட செருக்குற்ற தார்குவின், தான் முன் ஆண்ட நகரத்தை எவ்வகையிலும் வஞ்சகத்தாற் கைப்பற்றும்படி எண்ணங் கொண்டனன்.

அவ்வெண்ணத்தை நிறைவேற்றும் வண்ணம், தன் தூதர்களை விடெல்லி என்னும் பெயருடைய சகோதரர்களிடத்தும், எகுல்லி என்னும் பெயருடைய சகோதரர்களிடத்தும் அனுப்பி, “ அவர்களோடு கலந்து சதியாலோசனைசெய்து உரோமாபுரியில் புதுவதாக ஏற்படுத்தப்பட்ட குடியரசை யழித்து, முன்போல் எமது அரசாட்சியை நிலைநாட்டுவீராக!” எனத் தெரிவித்தனன். அச்செய்தியை அந்த

ரங்கமாக அறிந்த நீதியதிபனாகிய ஜூனியஸ் புரூடஸ் என்பவனது மைந்தர்களாகும் டைடஸ் என்பவனும், பிரியஸ் என்பவனும் தார்குவினால் கருதப்பட்ட வஞ்சக வினையை நிறைவேற்றும் வண்ணம் விடெல்லி முதலிய வருடன் கூட்டுறவாயினர்.

அத்தேசத் துரோகருடைய சதியாலோசனையை ஒரு பணியாளன் மூலமாக நீதியதிபர்களாகிய ஜூனியஸ் புரூடஸும் வெலீரியஸும் அறிந்தனர். அவ்விருவருமுடனே அத்தேசத் துரோகிகளைப் பிடித்துக் கை கால்களுக்குத் தளையிடுவித்து நியாய சபைக்குக் கொண்டுவரக் கட்டளையிட்டனர். அவ்வாறே காவலாளிகள் அக்கொடியரை நீதிசாலையில் நிறுத்தியபோது, அச்சமயத்தில் நியாயாதிபதியாகிய ஜூனியஸ் புரூடஸ் தன் குமாரர்களுக்கும் மற்றுமுள்ள தேசத் துரோகிகளுக்கும் மரண தண்டனை விதித்தனன்.

வஞ்சகமாகத் தன் அரசாட்சியைக் கைப்பற்றவேண்டுமென்ற எண்ணங்கொண்ட கொடுங்கோன் மன்னனாகிய தார்குவின் மிக்க துக்கமும் கோபமுமடைந்து, உதவி பெறும் வண்ணம் எட்ரூரியாவிற்குச் சென்றனன். அங்குள்ள நகர வாசிகளைத் தனக்குதவி புரியும்படி வருந்திக்கேட்டனன். அவர்கள் அதற்குச் சம்மதித்துப் பெருஞ் சேனையைக்கொணர்ந்து உரோமருடன் யுத்தஞ்செய்து தோல்வியடைந்தனர்.

நாம் உரோமாபுரியில் ஏகாதிபத்தியமழிவுற்றதற்குப் பல காரணங்களையும், அந்நகரத்திலிருந்த ஏகாதிபத்தியமழிந்த பின்னர் செருக்குற்ற தார்குவின் தனதரசைப் பெறும் பொருட்டுச் செய்த பல தந்திரங்களைப் பற்றியும், யுத்தங்களைப் பற்றியுஞ் சில விஷயங்கள் கூறியிருக்கின்றனம். அவைகள் சிறிதும் பயன்படாமையால், தார்குவின், தச் குலத்தையரசாட்சிசெய்து வந்த லார்ஸ்பார்ஸென்னாவிடம் தஞ்சமாகச் சென்றதும், ஹொரேஷஸ் என்னும் தேசபக்தனால் உரோமாபுரியும், அங்கு புதியதாக ஏற்படுத்தப்பட்ட குடியரசுஞ் செழித்தோங்கும்படி நிலைபெறப்பட்டதையுங் கூறத் தொடங்கினம்.

செருக்குற்ற தார்குவின் உரோமர்களால் தோல்வியடைந்த பின்னர் தச் குலத்தையரசாட்சிசெய்து வந்த லார்ஸ்பார்ஸென்னா என்னுமரசனிடம் தஞ்சமாகப் புகுந்தனன். லார்ஸ்பார்ஸென்னா செருக்குற்ற தார்குவினை மிகப் பிரியத்துடன் பாராட்டி வந்தனன். இவ்வாறிருக்கும்பொழுது, தார்குவின் லார்ஸ்பார்ஸென்னாவை நோக்கி, "யானுமென் குடும்பத்தினரும் எட்ரூரியர்களுடைய சந்ததியாவோம். யாங்களிவ்வாறு வறுமையாலும் இகழ்ச்சியாலும் துன்பமடைதலை நீங்கள் கண்ணுற்றும் சாந்தமாயிருத்தல் முறையோ? அரசனாகிய என்னை என்னரசாட்சியிலிருந்து துரத்திய குடிகளைத் தண்டனை செய்யாதிருப்பின், மற்ற அரசர்களுடைய குடிகளுந் தங்களை யாளுமரசர்களுக்குச் சிறிதும் அஞ்சாமல் தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டும் வண்ணம் குடிகள் முயற்சி செய்வது போல், அரசர்கள் தங்கள் அரசாட்சியையும், புகழையும் நிலைநாட்ட முயற்சி செய்யாவர்களாயின் பெருந் துன்பத்திற்காளாவார்கள். அக்காரணம் பற்றியே எனக்குதவி புரிதல் உமது கடமையாகும்" என வருந்திக் கூறினன். அவற்றைச் செவியுற்ற அம்மன்னன், "தார்குவினுக்குதவி புரிந்து அவனரசாட்சியை மீளுகை செய்வோமாயின் உலகத்திலழியாப் புகழ் பெற்று விளங்குவோம்" எனத் தன்னுள் மதித்தனன்.

இவ்வாறு தான்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு அம்மன்னன் தார்குவினை நோக்கி, "உமது கவலை ஒழிக! எமது

நவதேவதைகளின் மீதாணையாக உமதரசாட்சியை நீர் பெறும்படியாகச் செய்வோம்" என்றுறுதிமொழி கூறினன். பிறகு, அவ்வாறு செய்யும் பொருட்டுத் தன் வீரர்கள் யாவருங் கூடும் நாளொன்றை ஏற்படுத்தித் தான் உரோமாபுரியின்மேல் போர்மேற் செல்லுதலையும், வீரர்களும், அவர் நேயர்களுமுடனே யுத்தத்திற்குப் புறப்படல் வேண்டுமென்ற சமாசாரத்தையும் தூதர்களின் மூலமாகத் தன் வீரர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவித்தனன்.

இதை யறிந்த அம்மன்னனது குதிரைப் படையும், காலாட் படையும் திரள் திரளாகப் பெருமை வாய்ந்த வால்டெர்ரே, பாபூலோனியா முதலிய இடங்களிலிருந்தும், மற்றுங் கணக்கற்ற சிறு கிராமங்களிலிருந்தும் அரசன் குறித்த தினத்தில் வந்து சேர்ந்தன. அன்றியும், தங்கள் தேசத்திலிருந்து துரத்தப்பட்ட பல உரோமர்களும், மெமீலியஸ் என்னும் பெயருடைய ஓர் இளங்குமாரனும், அவன வீரர்களும் அப்பெருஞ் சேனையைச் சேர்ந்தனர். பின்னர், எண்பதாயிரம் வீரர்களடங்கிய காலாட் படையும், பதினாயிரம் குதிரைப் படையும் அணிவகுக்கப்பட்டுச் சட்ரியச்சினது வாயில் முன்னே ஆரவாரத்துடன் வந்து தங்கின.

உரோமாபுரியை வென்று அதைத் தார்குவினுக்குக் கொடுத்து, அவனை அந்நகருக்கு அரசனாக்கக் கருதிக் கடல்போன்ற பெருஞ் சேனையுடன் லார்ஸ்பார்ஸென்னா தங்கள் நாட்டைத் தாக்க எண்ணங் கொண்டானென்பதை யறிந்த உரோமர் துக்கத்திலாழ்ந்தனர். அது காரணம் பற்றித் தைபர் நதியினிடத்துள் செழிப்பான சம பூமியில் வாசஞ்செய்து வந்த ஜனங்கள் யாவரும் தங்கள் குழந்தைகளுடனும், வீட்டுச் சாமான்களுடனும் தங்கள் அகங்களை விட்டொழிந்து, உரோமாபுரிக்கு மிக்க அச்சமும் துக்கமும் கொண்டேகினர்.

இவ்வண்ணமிவர்கள் உரோமாபுரிக்கேகும் பொழுது, லார்ஸ்பார்ஸென்னாவினது பெருஞ் சேனை நாற்புறமுஞ்சென்று காச்டுமியச்சிலுள்ள மாளிகைகள் முதலிய சிறந்த பொருள்களை யழித்தனர். வெர்பென்னா வென்னும் வீரன் ஆச்டியா வரையில் பரவியிருந்த சமவெளி முழுமையுமழித்தனன். ஆச்டர் என்பான் "ஜனிகுலத்தை" நாசஞ்செய்து, அதனைக் காவல்செய்து வந்த சுத்த வீரர்களையுங் கொன்றனன். இவ்வாறு தங்கள் சத்துருக்கள் பல நாடு நகரங்களையும், வீடு வாயில்களையும், மற்றுமுள்ள சிறந்த பொருள்களையுமழிப்பதைக் கண்ணுற்ற உரோமர் துன்ப சாகரத்திலாழ்ந்தனர். பிறகு, ஒருவாறு தேறித் தங்கள் தேசத்தை யிரட்சிக்கும் வகையைப் பற்றி உரோமாபுரியின் நீதியத் தலைவர்களும், அந்நகரத்தின் மந்திராலோசனை சபையாரும், உரோமாபுரிக்கும் லார்ஸ்பார்ஸென்னாவினது சேனைக்குமிடையில் மிக்க பராக்கிரமத்துடன் பாயுந் தைபர் நதியைக் கடக்கும் பொருட்டு ஏற்படுத்தியுள்ள பாலத்தினருகேயிருந்த ஒருவாயிலுக்கு வந்தாலோசனை செய்தபோது, அந்நகர நீதியதிபன் மற்ற நகரவாசிகளை நோக்கி, "ஜனிகுலமழிக்கப்பட்டது. உதவியாக வந்து நம்முடைய நகரத்தைப் பாதுகாத்தற்கு நகரம் வேறில்லை. ஆகையால் நமக்குஞ் சத்துருக்களுக்குமிடையில் கிடக்குமிப் பாலத்தை யிடித்தழித்தலே நலம்" என்று மிக்க துக்கத்துடன் தாழ்ந்த குரலொலியுடன் கூறினன்.

இவ்வாறிவர்கள் துக்கத்துடனிருக்கையில் வேவுகாரனொருவன் வேகமாய் உரோமர்களிருக்குமிடத்தையணுகித் தன் தலைவனை நோக்கி, "என் தலைவ! லார்ஸ்பார்ஸென்னா இதோ இங்குள்ளான். உடனே ஆயுதமணியுங்கள்! உடனே ஆயுதமணியுங்கள்!" என்று மிகுந்த பயத்துடன் கூறினன். சற்று நேரத்திற்குள்

பகைவர் சேனை நடப்பதாலுண்டாகும் பேரொலி அதிகரித்தது; அவர்களின் முரசங்களின் முழக்கம் எங்கும் கேட்கப்பட்டது; குதிரையின் மீதுவரும் வீரர்களின் தலைச் சீராக்களும், அவர்கள் கையிலேந்திய ஈட்டிகளும் ஆகாயத்திலொளி செய்தன; மேலே உயர்த்திப் பிடிக்கப்பட்ட துவசங்கள் காற்றினால் அசைந்து விளையாடின. இவ்வண்ணம் பகைவர்கள் சற்றுமஞ்சாமல் தங்கள் நகரத்தைத் தாக்க வருவதைக் கண்ட உரோமர்களிற் சிலர், "நாமிப் பாலத்தை யுடைத்துத் தள்ளுதற்கு முன் அச்சேனை நம்முடைய நகரத்தில் வந்துவிடும்" என்று துக்கித்தனர்; தமது நகரத்தை ரட்சிக்கும் வகையொன்றுமவர்களுக்குப் புலப்படாமையால் துன்ப சாகரத்தில் தத்தளித்தவர் சிலர்; தங்கள் மனைவி மக்களும், தாய் தந்தையரும், சகோதர சகோதரிகளும், வீடு வாயில்களும் சொத்துச் சுகங்களும் பகைவர்களால் அழிக்கப்படுவது திண்ணமென்று சோர்ந்தார் சிலர்; தாம் புதியதாக ஏற்படுத்திய குடியரசு அழிதற் கையப்பாடில்லையென் றழுதார் சிலர். இத்தகைய குழப்பமும், கூக்குரலும் உரோமாபுரியிலெவ்விடமுமலிந்தன.

பல மனிதர்களாலும் செய்ய இயலாத ஒரு தொழிலை யறிவும், பராக்கிரமும், தெய்வ பக்தியும் வாய்ந்த ஒருவன் நிறைவேற்றுதல் இயற்கையேயன்றோ? உரோமாபுரி வீரர்களுடைய பெருந் துக்கத்தையும், தன் நகரையாளும் நீதிபதிபர்கள் முகம் வாடி வருந்தியிருத்தலையும், யௌவன மகளிரடையும் பெருந் துன்பத்தையும், வயது தளர்ந்த உரோமர்களின் பயத்தையும், குழந்தைகளைக் கையிலேந்திக்கொண்டு கண்ணீர் சொரியும் தாய்மார்களின் மன வருத்தத்தையும், சிறு பிள்ளைகள் தங்கள் பெரியோர் லார்ஸ்பார்ஸென்னாவின் சேனைத் தொகையைப் பற்றியும் அவன் வீரர்களின் பராக்கிரமத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருத்தலைச் செவியுற்றடையுமச்சத்தையும், லார்ஸ்பார்ஸென்னாவின் சேனை உரோமாபுரியில் புகின் அதனாலுண்டாகும் பெரும் விபத்துக்களையும், லார்ஸ்பார்ஸென்னா வெற்றியடையின் ஸெக்ஸ்டஸ் என்னுங்கொடும்பாதகன் அருந்ததிபோன்ற லுக்ரீஷியாவிற்கியற்றிய பெருந்தீங்கை மற்ற மங்கையர்க்குமியற்றுவானென்ற அனுமானத்தையும், ஏகாதிபத்தியம் நிலை நாட்டப்படின் குடியரசு அழிவுறுமென்னு முறுதியையும், உரோமர்கள் யுத்தத்தில் புறங்காட்டித் தோல்வியடையின் தாம் உலகத்தில் அவமானமடைவார்களென்பதையும், தான் தன் தேயத்தின் பொருட்டுத் தன் உயிரைத் தத்தஞ் செய்யின், அதனாலுண்டாகும் பிரதாபத்தையும் நன்குணர்ந்தனன் ஹொரேஷஸ் என்னும் ஒரு சுத்த வீரன்.

இவன் தன் தேயத்தின் நன்மையின் பொருட்டுத் தன் செல்வ முழுமையும், தாயத்தார்களையும், நேயர்களையும், தாய் தந்தையர்களையும், மனைவி மக்களையும், தனது இன்னுயிரினையுமர்ப்பணஞ் செய்யுங் கொள்கையுடைய ஒரு சிறந்த தேய பக்தன்; தன் தேயத்துக்கு வேற்றரசர்களால் அபாயமுண்டாகும் அமயத்தில், "போர்க்களத்திலடைவது வெற்றி, இழப்பது உயிர்" என்னுங் கொள்கையை முழு மனத்துடன் நம்பித் தன் தேயத்தை யழிக்கக் கருதி வரும் வீரர்களடங்கிய பெருஞ் சேனையைக் கண்டு, "இச்சேனையோ நம்முடன் போர்புரிய வல்லது? பல முறை மலைகளை யொத்த சுத்த வீரர்களைப் போர்க்களத்திற் கோறல் செய்த நம்மெதிரில் இச்சேனை யெதிர் நிற்குமோ?" என்னுமெண்ணத்தையும், "தனது கையிலுள்ள வேலைத் தன்னை யெதிர்த்த யானையின் மேலெறிந்துவிட்டு, வருகின்ற யானைக்கு வேல்

தேடித் திரிபவன் தனது மார்பில் தைத்துள்ள வேலைக் கண்டு மகிழ்ந்து" அவ்வேலைத் தன் மார்பினின்றும் பறித்துப் புலியெனப் பாய்ந்து தன்னை யெதிர்க்கும் யானையைக் கோறல் புரிகின்ற நூழிலாட்டினை விரும்பும் ஆண்தகைமையும், நேரலருடன் கடும்போர் புரிந்து அவர்கள் வாளால் வெட்டுண்டு தன் வாகனத்தின் மீதிருந்து கீழே விழுந்துயிர் நீங்குந் தருணத்தில் ஆகாயத்தை நோக்கி, "என்னைப் படைத்த பரம! என் தேயத்திற்காகவும், என் தேயத்தினது சுதந்திரத்திற்காகவும் என்னுயிரையர்ப்பணஞ் செய்யத் தக்க தைரியமெனக்களித்த நின்னை யான் எவ்வண்ணம் பழிச்சுவனென அறியேன்!" என்று தன் பரமனைத் துதித்துக்கொண்டே மரணமடையும் ஒரு சுத்த வீரனைப்போல் புகழினைப் படைத்த பெரும் பராக்கிரமசாலியாவன்.

இத்தகைய வீரனைப் பெற்ற நாடு மகிழ்ச்சியடையுமோ? ஒரு சிங்கத்தைப் பல ஆட்டுக்கிடைகள் ஒன்று கூடி யதனைக்கொல்லும் வண்ணம் சூழினும், அஃது அஞ்சுமோ? ஆடுகள் ஒவ்வொன்றும் யாவு மரணமடைதற்கேதுமையப்பாடுண்டோ? லார்ஸ்பார்ஸென்னா தம் தேயத்திற்கருகே இருப்பதைக் கண்ட உரோமர்கள் மிக அஞ்சினர் என்பதை யாமுன்னமே கூறியிருக்கின்றனம். அத்தகைய அச்சமுறுதலைக் கண்டு மிக்க இரக்கமுங் கோபமுமடைந்த ஹொரேஷஸ் என்னும் தேய பக்தன் தன் நகரையாளும் தலைவனை மிக்க வணக்கத்துடன் நோக்கி, "என் தலைவ! இவ்வையகத்தில் வசிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் மரணமின்றைக்கேனும் அல்லது நாளைக்கேனும் சார்ந்து அவனைத் தன் வயப்படுத்துவது திண்ணம். தான் வழிபடுந் தேவதைகளின் ஆலயங்களை யழிக்கவரும் பெருஞ் சேனையுடன் எதிர்த்துப் போர் புரிந்து இறத்தலினுஞ் சிறந்த மரணம் வேறெதுவேனுமுளதோ? தான் சிறியவனாக இருக்கையில் தன்னை யமுதூட்டி வளர்த்த நற்றாயின் பொருட்டும், தன்னினங்குழவிகளைப் பராமரித்து வரும் தன் மனைவியின் பொருட்டும், ஆலயங்களில் அழியாத தீபத்தை யென்றுமெரியச் செய்யும் கன்னியர்களைத் தூர்த்தனாகிய ஸெக்ஸ்டஸினிடமிருந்து காவல் செய்யும் பொருட்டுந் தன்னுயிரையர்ப்பணஞ் செய்தல் ஒவ்வொரு உரோமனுடைய கடமையன்றோ? என் தலைவ! இப்பாலத்தை நீங்களுடைத்தழிக்கும் வரையில், அப்பெருஞ் சேனை யதைக் கடப்பினுங் கடக்கும். ஆகையால், அச்சேனை பாலத்தைக் கடக்காவண்ணம் தடுக்கின்றேன். எனக்குதவி புரியுமாறு எவரேனுமிருவருளரோ?" என்று புலிபோத்தெனப் பராக்கிரமத்துடன் பகர்ந்தனன்.

அதனைக் கேட்ட லார்ஷியஸ் என்னும் வீரன் மானெனத் துள்ளி யெழுந்து ஹொரேஷஸை மிக்க பிரியத்துடன் நோக்கி, "நண்ப! நின் வலப்புறத்தில் நின்று இப்பாலத்தை அச்சேனை கடவாதபடி தடுக்கின்றேன்" என்றுறுதிமொழி கூறினன். பின்னர், ஹெர்மினியஸ் என்னும் வீரனும் ஹொரேஷஸை நோக்கி, "நின் இடப்புறத்தில் நின்று இப்பாலத்தைக் காக்கின்றேன்" என உறுதிமொழி கூறினன்.

ஹொரேஷஸ் என்னும் தேய பக்தனது வீரமொழியையும், லார்ஷியஸ், ஹெர்மினியஸ் என்னும் வீரர்களினுறுதி மொழியையுங்கேட்டுப் பெருவகையுற்ற உரோமதேயத் தலைவன் ஹொரேஷஸை நோக்கி, "நீ கூறியவண்ணமே செய்க!" என்று பராக்கிரமத்துடன் கூறினன்.

உடனே ஹொரேஷஸும், அவனிருநேயர்களும் போர்க்குரிய கவசமுதலியவற்றையணிந்து, வாள் முதலிய ஆயுதங்களைத் தமது கரத்திலேந்தி, சிறு பறவைகளின் பெருங் கூட்டத்

தைக் கண்டு, அவற்றைப் பின் தொடர்ந்து வதைக்கும் வண்ணம் வல்லூறென்று மிக்க வேகத்துடன் பறந்து செல்வதுபோல், வீரத்துடன் சத்துருக்களை நோக்கிச்சென்றனர். முடிவில் அவர்கள் மூவரும் பாலத்தினது வாயிலையடைந்து, அங்கு நின்று அப்பாலத்தைக் காவல் செய்யலாயினர்.

அச்சேனை உரோமாபுரத்தைக் கடப்பதற்கு முன் அப்பாலத்தைக் கடக்கவேண்டுமென்று யாமுன்னரே கூறியிருக்கின்றனம். அப்பாலம் மிகவும் குறுகியதாக பாட்டையில் ஒன்று கூடிய மூவருக்குமேல் அதனைக்கடக்க இயலா. இப்படி அம்மூவரும் அங்கு அசையாத மும்மலைகளைப்போல் வீராவேசத்துடன் நின்றுகொண்டிருக்கும்பொழுது லார்ஸ்பார்ஸெனனுடைய பெருஞ் சேனையானது போர் புரியுமாறு பாலத்தினருகே நெருங்கியது.

இவ்வாறிருக்கும் சமயத்தில் பருத்துயர்ந்த மலைகளை யழிப்பது சிற்றுளியே என்னுமுண்மையையும் நுண்ணறிவு, பராக்கிரமம், தேசபக்தி முதலியவை பெற்ற ஒருவன் கடலையொத்த பகைவர் சேனையையெதிர்த்தழிவுறினும் புறங்காட்டியோடான் என்னுமுறுதியையும் கடல் அலைகள் ஒரு பெரிய மலையைச் சூழ்ந்து பல முறை மோதினும், அவ்வலைகளே அழியுமென்ற நிச்சயத்தையும் உணராத பார்ஸெனனும், அவர் பெருஞ் சேனையும் இம்மூவரைக் கண்டு நகைத்தனர். லார்ஸ்பார்ஸெனனின்சேனையிலுள்ள பிகஸ், ஆனஸ், சீயஸ் என்னு மூன்று சுத்த வீரர்கள் ஆயுதங்களைக் கையிலேந்தித் தாங்கள் அப்பாலத்தைக் கடவாதபடி காவல் செய்யும் ஹொரேஷஸ் முதலிய மூன்று வீரர்களுடன் போர் புரிய வந்தனர்.

அவ்வீரர்கள் கொடுவரியுடன் கொடுவரி பொருதாற்போலப் பொருதினர். இறுதியில், ஹொரேஷஸ் என்னும் தேயபக்தன் பிகஸ் என்னும் வீரனைத் தன் கூரிய படையொன்றால் சிதைத்தனன். லார்ஷியஸ் என்னும் வீரன் ஆனஸ் என்னும் வீரனைக் கரத்தால் வலிந்தெடுத்துத் தைபர் நதியிலெறிந்தனன். ஹெர்மீனியஸ் என்னும் வீரன் சீயஸ் என்பவனைத் தன் வாளால் வெட்டியெறிந்தனன். தங்கள் மாட்சிமை வாய்ந்த வீரர்கள் வெட்டுண்டு மாண்டதைக் கண்ட லாசுலஸ், ஆக்னஸ், ஆரன்ஸ் என்ற மூன்று சுத்த வீரர்கள் ஹொரேஷஸையும், லார்ஷியஸையும், ஹெர்மீனியஸையும் மிக்க கோபத்துடன் தாக்கினர்.

அதுபொழுது அவ்வீரர்கள் முகிலுடன் முகில் மோதுவதுபோல மோதிப் போர் புரிந்தனர். பின்னர் ஹொரேஷஸ், லாசுலஸையும்; லார்ஷியஸ், ஆக்னஸையும்; ஹெர்மீனியஸ், ஆரன்ஸையும் தங்கள் வாட்படைக்கிரையாக்கினர். அதனைக் கண்ணுற்ற உரோமர்கள் இன்ப வாரியில் மூழ்கினர். பகைவர் ஹொரேஷஸ் முதலிய மூவரை முன்னர் கண்டு யோசியாமல் நகைத்த காரணம் பற்றி நாணமெய்தினர். அன்றியும், அந்த உரோம நாட்டு வீரர்களை எதிர்க்கத் துணிந்திலர். அவ்வாறு அவர்கள் துணியாமையைக் கண்டு நாணமடைந்த ஆஸ்டர் என்னும் வீரனொருவன் மிக்கோபமடைந்து தன் வாளாயுதத்தைக் கையிலேந்தி ஹொரேஷஸை எதிர்த்தனன்.

கோபமூண்ட இருகாளைகள் எவ்வண்ணம் போர் புரியுமோ, அவ்வண்ணமே அவ்விருவரும் போர்புரிந்தனர். முடிவில், ஆஸ்டர் தன் வாளால் ஹொரேஷஸை வெட்டினன். அவ்வாறு வெட்டுதலை ஹொரேஷஸ் தன் கேடயத்தால் தடுத்தபோது, அவ்வாளது வெட்டு ஹொரேஷஸினுடைய தொடையில் காயப்படுத்தியது. அப்பெரிய காயத்தால் ஹொரேஷஸ் மயக்கங்கொண்டதைக் கண்ட அப்பகைவர்

களிப்பினால் பேராரவாரஞ் செய்தனர். ஆயினுஞ் சற்று நேரத்திற்குள் தனக்கு அக்காயம் வருவித்த அப்பெரும் வீரனைப்புலியெனப் பாய்ந்து தன் வாட்படைக்கிரையாக்கி வெற்றியெய்தினன் ஹொரேஷஸ் வீரர் வீரன். ஆஸ்டர் மரணமடைந்ததைக் கண்ட உரோமாபுரியினர் யாவரும் தம் பால் வெற்றியுற்றமையை நோக்கிப் பேராரவாரஞ் செய்தனர்.

ஹொரேஷஸ் பாலத்தைக் காவல் செய்யும் வண்ணம் சென்றபொழுது, அவன் தன் தேயத் தலைவனை நோக்கி அப்பாலத்தை யுடைத்தழிக்கக் கூறினனென்பதை யாமுன்னரே சொல்லியிருக்கின்றனம். ஹொரேஷஸும், அவன் நேயர்களும் சத்துருக்கள் பாலத்தைக் கடக்காதபடி பெருஞ் சமர்செய்து கொண்டிருக்கும்பொழுது மற்ற உரோமர்கள் யாவரும் கோடரி, கடப்பாரை முதலிய கருவிகளைக் கொண்டு அப்பாலத்தின் உதவித் தூண் முதலியவற்றை யுடைக்கலாயினர். இவ்வண்ணம் அப்பாலத்தை யழித்தனர். பின்னர், அப்பாலம் கீழே யுடைந்துவிழச் சற்று நேரமிருப்பதன் முன்னர், அதைக் காவல் செய்யும் சுத்த வீரர்களை உரோமர்கள் விளித்து, "வீரர்காள்! பாலமுற்றுஞ் சிதைந்து கீழ் விழுதற்குக் கணப்பொழுதே இருக்கின்றது. விரைந்து வம்மின்! விரைந்து வம்மின்" என்று உரத்த குரலுடன் கூறி விளித்தனர்.

அதனைக் கேட்ட உடனே லார்ஷியஸ், ஹெர்மீனியஸ் என்னும் வீர சிகாமணிகளிருவரும் ஒரு கண்ணிமைப் பொழுதில் மறுகரையை யடைந்தனர். ஆயினும், ஹொரேஷஸ் என்னும் வீரர் வீரன் பாலமுற்றும் விழுதற்கு முன்னர், அவ்விடத்தை விட்டகலுதல் தன் பராக்கிரமத்திற்குப் பழிவிளைக்குமென்ற எண்ணத்தாலும், தான் அப்பாலத்தை விட்டகலின் நோலர் எஞ்சிய அப்பாலத்தைத் துணையாகக்கொண்டு இவ்வாற்றினைக் கடப்பினும் கடப்பர் என்ற அச்சத்தாலும் தான் நின்று யுத்தஞ்செய்த இடத்தைவிட்டகன்றானில்லை. அவ்வீர சிங்கம் தமியனாக நிற்குஞ் சமயத்தில் அப்பாலம் ஆற்றின்குறுக்கே பேரொலியுடன் அடி சாய்ந்து விழுந்தது.

அதுபொழுது, ஹொரேஷஸ் தன் முன்னே நிற்கும் கடலினும் பெரிய அச்சைனியங்களைச் சிறிதேனுங் கவனியாதவனாகிப் பின் புறத்தில் மிக்க வேகத்துடன் செல்லும் தைபர் நதியை நோக்கி, "உரோமர்களால் மிகவும் துதிக்கப்படுகின்ற தந்தையாகிய தைபர் நதியே! இன்று உமது மைந்தனாகிய ஓர் உரோமனது இன்னுயிரையும், அவன் ஆயுதங்களையும் நீ பெறுவாயாக!" என, அந்நதியை மனமாரத் துதித்து மிக்க வேகமாகச் செல்லும் அந்நதியில் திடீரென்று குதித்து முழுகினன்.

அவ்வீரச் செய்கையைப் பார்த்த சத்துருக்களும் வியப்படைந்து ஹொரேஷஸ் என்னும் சுத்த வீரனை மிகவும் பாராட்டினர். தன்னிடத்தில் விழுந்தழுந்திய தேய பக்தனைப் புகழ்வதுபோல அந்நதி சலசலவென்னும் பேரொலியுடன் செல்லுவதாயிற்று. வியக்கத் தக்க ஹொரேஷஸின் வீரச் செய்கையைக் கண்ட லார்ஸ்பார்ஸெனனுமிகுந்த சந்தோஷத்துடன், "இத்தகை வீரச் செய்கையை யாமிதுகாறும் கண்டதேயில்லை. அவ்வீரன் இன்னலின்றி மறுகரையை யடைந்து இன்னுயிர் வாழ்தற்பொருட்டு, எல்லாம் வல்ல பெரும! நீ உதவி புரிவாயாக!" என்று எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைப் பரவினன்.

சத்துருக்களுடன் பெரும் போர் புரிந்த தளர்ச்சியாலும், தானணிந்திருந்த ஆயுதங்களின் பாரத்தாலும், நீரோட்டத்தின் பெரும் வேகத்தாலும் ஹொரேஷஸ் என்னும் வீரர்

வீரன் ஜலத்தினால் மிகவும் துன்புற்றுக் கரையையடைந்தான்.

அவ்வாறு அவன் அக்கரையை யடைந்த போது உரோமர்கள் யாவரும், ஈன்ற தாயைப் பல நாளாகப் பிரிந்திருந்து ஒரு நாள் அத்தாயை நினைந்து அழுஞ்சேய் திடீரென அவளைக் காணுமச்சேயினைப்போலவும்; போர்க்களத்திற்சென்று புறங்காட்டாது வெற்றி பெற்றுப் பெரும் பிரதாபத்துடன் வரும் தன் மைந்தனைக் காணும் தாய்போலவும்; நெறி முறையினும் ஒழுக்கத்திலும் தவறாது அரசு புரியும் கொற்றவனைக் காணும் குடிமக்கள் போலவு மெல்லையில்லாத ஆனந்த மெய்தினர்.

பின்னர், உரோமர்கள் அத்தேய பக்தனது வீரச் செய்கையை மெச்சியும், அவன் தங்கள் தேயத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்தது பற்றியும், சத்துருக்களுக்குச் சிறிதுமஞ்சாமல் கொடுஞ்சமர் செய்தது பற்றியும், உரோமர்களின் துக்கத்தையு மச்சத்தையுமகற்றி இன்பத்தைப் புகட்டியது பற்றியும், உரோமாபுரியின் சிறப்பையுலகெங்கும் நிலைநாட்டியது பற்றியும் அவனுக்குச் சிறந்த பரிசளித்து அவனைப் பெரிதும் பாராட்டினர். அன்றியும், அச்சுத்த வீரனது பெரும் புகழ் அழிவுறாவண்ணம், அவனுடைய பிரதிமையைக் கமீடியத்திலுள்ள ஒரு கோலறையிடத்தில் நிலை நிறுத்தி, அதன் கீழ்ப் புறத்தில் அவனியற்றிய வீரச் செய்கைகளனைத்தும் வரைவித்தனர்.

பலமணிக் கோவை.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.).

(448—வது பக்கத் தொடர்ச்சி)

(இத்தலைப்பின் கீழ் பற்பல விஷயங்கள் வினா விடையாக விளக்கி எழுதப்படும். பொது அறிவு விஷய அபிவிருத்தியை உத்தேசித்துப் பிரதி மாதமும் இவ்விஷயங்கள் பிரசுரமாகும்.)

21. தற்கால கட்டிடங்கள் எவ்விதம் விருத்தியாயின?

கற்களால் வீடுகளும் அரண்மனைகளும் கட்டத் தெரிந்தவுடன் மனிதர்கள் மேலும் மேலும் அனுபவம் முதிர்ந்து இன்னும் சாமர்த்தியமாகக் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்தனர். ஏழு எட்டு அடுக்கு உப்பரிகைகள் கட்டினார்கள். வெல்லமும் சுண்ணாம்பும் கலந்து உபயோகித்தார்கள். சிமெண்டு கண்டு பிடித்தார்கள். இப்போது சிமெண்டுக் கற்கள் கொண்டு கட்டிடம் கட்டுகிறார்கள். சிமெண்டும் சுண்ணாம்பும் கலந்து மெல்லிய பாளங்கள் செய்து அறைகள் தடுக்கிறார்கள். மச்சுக் கட்டுவதற்கு இக்காலங்களில் இரும்புச் சல்லடை வைத்துச் சுண்ணாம்பு வைத்துக் கட்டுகிறார்கள். இங்கிலாந்து அமெரிக்கா முதலியஇடங்களில் இரும்பினால் பெரிய கட்டிடங்களைப் பிணைக்கிறார்கள். முதலில் இரும்புத் தண்டவாளங்கள் கொண்டு கட்டிட உருவத்தைச் சேர்த்துக்கொண்டு, சுண்ணாம்பும் கற்பொடிகளும் கலந்து இடை வெளிகளிற் அடைத்து மேலே பூசி விடுவது. இப்படிச் செய்வதால் பல அடுக்குள்ள உயரமான கட்டிடங்களும் அதிக அகலமில்லாத சுவர்கள் பெற்று இருக்கும். பம்பாயில் இவ்விதம் பல உப்பரிகைகள் உள. அமெரிக்காவில் நியுயார்க் பட்டணத்தில் இருபது முப்பது அடுக்குகள் உள்ள உயரமான உப்பரிகைகள் கட்டியிருக்கிறார்கள். ஆகாயத்தை அளாவி வானுற ஓங்கி இக்கட்டிடங்கள் செல்லும்.

22. இரவு ஏன் இருட்டாக இருக்கிறது?

ஒரு விளக்கினருகே ஒரு எலுமிச்சம் பழத்தை ஒரு குடைக் கம்பியில் குத்திப் பிடித்துக்கொள். அவ்விளக்கு வெளிச்சம் பழத்தின் ஒரு பாதியில் விழுகிறது. விளக்கிற்கு அப்பாலுள்ள இன்னொரு பாதி இருட்டாக இருக்கிறது. ஒரு குண்டூசியை வெளிச்சமான பாகத்தில் ஒரு இடத்தில் குத்தி, அப்பழத்தைச் சுற்றிப்பார். அந்தக் குண்டூசி பாதி பாகம் இருட்டிலும் பாதி பாகம் வெளிச்சத்திலுமாகச் சுற்றுகிறது. நாம் வசிக்கும் ஊர் அந்தக் குண்டூசி என வைத்துக்கொள்வோம். அதுபோலவே நமக்கும் சூரிய வெளிச்சமும் இருட்டும் ஏற்படுகிறது. பூமியாகிய பெரிய பந்து இவ்விதமாகவே சுற்றிக் கொண்டிருப்பதால் சூரியனருகே உள்ள ஒரு பாதியில் வெளிச்சமும் அப்பாலுள்ள இன்னொரு பாதியில் இருட்டாகவும் இருக்கிறது. நமக்கு சூரிய வெளிச்சமில்லாதபோது, பூமியின் இன்னொரு பாதியில் சூரிய வெளிச்சம் இருக்கும். இது எவ்விதமென்று பழத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு இரவுக்குப் பிறகும் பகல் வருகிறது. ஒவ்வொரு பகலுக்குப் பிறகும் இரவு வருகிறது. ஒரு சூரிய உதயத்திலிருந்து மறு சூரிய உதயம்வரையில் ஒரு நாள் என்று ஹிந்துக்கள் கணக்கு.

23. நாம் வசிக்கும் பூமி எவ்வளவு பெரியது?

இந்த பூமி ஒரு பெரிய பந்து, ஜலமும் நிலமும் சேர்ந்தது. ஒரு பரங்கிக்காயின் காம்பிலிருந்து நேராக உள் ஒரு கம்பியைக் குத்தினால் அக்கம்பியின் நீளம் எவ்வளவிருக்கும்? அதே விதமாக பூமியில் ஒரு நீண்ட கம்பியைக் குத்தினால் அதன் நீளம் சுமார் 8000 மைல் இருக்கும். பூமியின் சுற்றளவு 25000 மைல். சென்னைப் பட்டணத்திலிருந்து ராமேசுவரம் சுமார் 450 மைல் தூரம். ஹிமாசலத்திலிருந்து கன்னியாகுமரிமுனைக்கு நேராகச் சென்றால் சுமார் 1800 மைல் தூரம். ஆகவே நாம் வசிக்கும் இந்த பூமி நமது தேசத்தை விட இவ்வளவு பெரியதாக இருக்குமென்று ஒரு நிதானமாக மனதில் பாவித்துக் கொள்ள முடியும். இந்த பூமி ஒரு பந்துபோல இருக்கிறது என்று ஒருவரும் பார்த்துச் சொல்லமுடியாது. அப்படித்தானிருக்க வேண்டுமென்ற ஒரு ஊகம். ஒரு பம்பரம் சுற்றுவதுபோலச் சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றிப்போய்க் கொண்டேயிருக்கிறது. அந்தரத்தில் பம்பரம் சுழல்கிறது!

24. காலையில் தினம் எவ்விதம் ஆரம்பிக்கிறது?

இது ஒரு விடுகதை. வாஸ்தவத்தில் பகல் நேரம் எப்போதும் இருந்துகொண்டேயிருக்கிறது. சூரியன் ஒருபோதும் அஸ்தமிப்பதேயில்லை. சதா காலமும் பிரகாசித்துக்கொண்டேயிருக்கிறது. இந்த பூமி பம்பரம்போல் சுழன்று கொண்டேயிருப்பதால் ஒவ்வொரு விநாடியிலும் ஒவ்வொரு இடத்தில் சூரியன் உதயமாகிக் கொண்டேயிருக்கிறது. இன்னொரு இடத்தில் அஸ்தமித்துக் கொண்டேயிருக்கிறது. நாம் நமது ஊரில் இப்போதுதான் சூரியன் உதயமாகிறது என்றால் அந்த இப்போது என்பது மற்ற ஊர்களில் சூரிய உதய காலமாயிராமலிருக்கும். பூமி சுற்றும்போது நமது ஊர் பாகம் சூரியனை நோக்கி வரும்போது சூரிய உதயமாகிறது. ஆனால் நமக்கு முன் சில பாகம் சூரியனை நோக்கிச் சுழன்று போயிருக்கும். அவைகளில் சூரிய உதயமாகி நெடுநேரமாகி யிருக்கலாம். ஆகவே சூரியன் எப்போதும் ஒரே விதமாகப் பிரகாசித்துக் கொண்டுதானிருக்கிறது. நாம் தலைக்கு மேல் நேர் உச்சத்தில் சூரியனைப் பார்க்கும்போது நடுப்பகல் என்கிறோம். பூமியின் மற்றொரு

பாதியில் இருப்பவர்கள் நள்ளிரவு என்கிறார்கள். சூரிய உதயமும் எப்போதும் ஆகிக்கொண்டே யிருக்கிறது. அதாவது இப்போது நமது ஊரில் சூரிய உதயம், இன்னும் சில நேரங்கழித்து நமக்குக் கிழக்காக உள்ள இன்னொரு ஊரில் சூரிய உதயம், இன்னும் சில நேரங்கழித்து இன்னுங் கிழக்காக உள்ள ஊரில் சூரிய உதயம் இவ்விதமாகச் சூரியன் உதயமாகிக்கொண்டே யிருக்கிறது.

25. ஒரே காலத்தில் இரண்டு நாட்கள் கணக்கு வருமா?

முந்திய விஷயத்திலிருந்து நமக்குத் தெரிந்தது என்னவென்றால் நமக்குப் பகலாயிருக்கும்பொழுது, பூமியின் இன்னொரு பாகத்திலிருப்பவர்களுக்கு இரவு ஆக இருக்கும் என்பது; நமக்கு இரவு ஆக இருக்கும்போது இன்னொரு பாகத்தில் வசிப்பவர்களுக்குப் பகல் ஆக இருக்கிறது. அதாவது நாம் இன்று இரவு திங்கள்கிழமை இரவு என்று சொல்லும்போது பூமியின் மற்றொரு பாகத்தில் வசிப்பவர்கள் அந்த நேரத்தை திங்கள் பகல் என்றும் சொல்லலாம் அல்லது செவ்வாய் பகல் என்றும் சொல்லலாம். ஆயினும் நாம் ஒரே சமயத்தைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆதலால் நாம் ஒரே சமயத்தைப் பற்றிச் சொல்லியபோதிலும் நமக்கு அப்போது ஒரு காலமாகவும் பூமியின் வேறு பாகத்தில் வசிப்பவருக்கு வேறு காலமாகவும் இருக்கிறது.

நேரத்தைப் பற்றிப் பேசும்போது எப்போதும் நமது ஊரில் என்ன நேரம் என்பது. அதற்கு லோகல் டயம் (Local Time) என்று சொல்வது. இவ்விதமான லோகல் டயம் ஒவ்வொரு ஊருக்கும் உண்டு அல்லவா? ஆனால் வியாபாரம் செய்வதற்கும் மற்றும் பல விதங்களில் ஊருக்கு ஊர் வியவகாரங்கள் நடத்திக்கொள்வதற்கும் இவ்விதம் அந்தந்த ஊர் லோகல் டயம் மாறுபட்டிருப்பதால் பலவித கஷ்டங்கள் ஏற்படும். இதற்காக எல்லா தேசத்தாரும் ஒற்றுமைப்பட்டு ஒரு கட்டுப்பாடுசெய்து கொண்டிருக்கிறார்கள்

26. சட்டை போட்டுக் கோள்வதால் உடம்பு உஷ்ணமாயிருப்ப தெவ்வாறு?

சட்டைபோட்டுக் கொள்வதால் சட்டையிலிருந்து நமக்கு உஷ்ணம் வருவதில்லை, நீ கவனித்திருந்தால் ஒரு விஷயம் ஞாபகம் வரும். சில சமயம் சட்டை ஜில்லென்று இருக்கும் போது நமது உடம்பிற் போட்டுக்கொண்டு சில நேரங்கழித்து அந்த சட்டை சூடாகி விடுகிறது. ஆகவே சூடு நமது உடம்பில் இருக்கிறதே யொழிய சட்டையிலிருந்து வரவில்லை. சட்டைபோட்டுக் கொள்வதால் என்ன சௌகரியம்? நமது உடம்பிலிருக்கும் உஷ்ணத்தை வெளியே விட்டுவிடாமல் சட்டை மூடிக்கொண்டிருக்கிறது. உஷ்ணத்தின் சுபாவம் எப்போதும் பரவுவது. சில சாமான்கள் உஷ்ணத்தைச் சீக்கிரம் கிரகித்துக் கொள்ளும். நம்மைச் சுற்றிலும் இருக்கும் ஆகாயம் நமது உடல் உஷ்ணத்தை விட மிகவும் குறைந்து இருக்கும் போது, நமக்கு அதிகக் குளிர்ச்சி என நாம் உணர்கிறோம். விளக்கு வெளிச்சத்தை மறைப்பதற்கு ஒரு தகரத் தட்டு வைக்கிறோம். அம் மாதிரியே நமது தேக உஷ்ணம் வெளியே ஓடாமல் மறைப்பதற்கு ஒரு சுவர்போல நாம் போட்டிருக்கும் சட்டை இருக்கிறது.

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ஞ் ஆகஸ்டுமீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்பிரவரி மீ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செவிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட நவமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செவிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. இவ் ஆறு தனிப்பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும்.

முதல் வருஷ ஆரம்பத்தின் ஆறு பிரதிகளும் தேவையென (1924 ஆகஸ்டிலிருந்து 1925 ஜனவரிவரை) 500 ஆர்டர்கள் பதிவானதும் அவை அச்சிடப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடத்தப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாரராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பி யிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செந்துறையில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பதிலுபகாரங்கருதாது தம் கடமையை அன்புடன் புரிந்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அஸ்திவாரத்துள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவுமென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப் பெறும் பெருபகாரத்திற்கும் இந்தியப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங்கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார் :—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸுபோத ராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீரென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா .

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும்பான்மையாய் அப்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜனமுள்ளதாகவுமிருக்கிறது.

4-8-26 ல் F. M. S விருந்து ஸ்ரீமதி சொர்னலக்ஷ்மி எழுதுவது :—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை யெடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப்பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமே யல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியினாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்னமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

சிந்தாமணி பைண்ட் வாலியம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுபுத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாரராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதாரர் ஆனவர்களுக்கும் மட்டும் மேற் கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3—ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப்படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர்.செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாப்பூர், சென்னை.

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிர் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

ஸுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாடச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டாவென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகளடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4–8–0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். ஸபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,

சிந்தாமணி பத்திராதிபர்,

மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மாரட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகா ராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம சிறுவர்கள் படித்தல் அவசியம்.

பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணா.	0—6—0
பால பாரதம் ஷை 92-பக்கங்கள் அணா.	0—8—0
பால பாகவதம் ஷை 87-பக்கங்கள் அணா.	0—8—0

தாபற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்

மயிலாபூர், சென்னை என்றெழுதவும்.

"சிந்தாமணி"

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 6 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. $6\frac{1}{2}$; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி, "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தை தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவ சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டு கொள்ளப்படும்.

9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னரு காக இன்னார் அனுப்பிய தென்பதையும தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.

10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்க முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச் சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

இனம்! இதுவே தகுந்த தருணம்—என்றுமில்லா லாபம். இனம்!!



எங்களுடைய அழகான 18 காரெட் ரோல்டுகோல்டு ரேயர் லீவர்கோல்டு ஷைனிங் டபல் பாக்கட் கடியாரத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு நாங்கள் ஒரு "டீ" டைம் பீஸை ஷை கடிகாரத்தை வாங்குவோருக்கு இனமாகக் கொடுக்கிறோம்.

ஐந்து வருடங்கள் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது.

ஆயுள் பரியந்தம் சரியாக ஓடக் கூடியது.

விலை ரூபாய் 4—12—0.

எமது விலாசம்:—

லீகல் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெம்பர் 243, மதராஸ்.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

குழந்தைகளின்

மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜஸுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகுலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26 பிராட்வே, மதராஸ்.

வெளியாகிவிட்டது!

வெளியாகிவிட்டது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணு 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"

சலிவன்ஸ் கார்டன் ரோட்,

மைலாப்பூர், சென்னை.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ. 22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,

31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

'தமிழ் நேசன்.'

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பொருளுள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹேப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, **Part I-B, page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.

11. காளிதாஸன்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப் ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

SRINIVASA VARADACHARI & CO.,
4, Mount Road, Madras.

ஸ்ரீமதி N. குப்பம்மாள் அவர்கள் 24-3-26-ல் டெலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

பூமகள் திலகம்போல் நின்றிலங்கும் அன்பிற்கினிய சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனம். தங்களுடைய சிந்தாமணி என்ற உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மக்களனைவரும் ஆதரிக்கக் கூடியவாறு அமைந்திருத்தல் போற்றத் தக்கதாம். இவ்வுயர்தரப் பத்திரிகை இன்னும் பல வழிகளிற் சிறப்புற்று விளங்க தமிழ் நாடெங்கும் பரவவேண்டுமென்பது எனது எண்ணம். ஆகையால் யானும் சந்தாதாராகச் சேர வேண்டுவதுடன் என்னாலான கூடிமானவரை வியாசங்களையும் எழுத நினைக்கிறேன். பெண் கல்வியைப் பெருகச் செய்யும் செல்வியே! தங்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன்.

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

தெய்வீகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு, தாங்கள் பிரசுரித்து வரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில் ஒவ்வொன்றும் மிகவும் உற்சாகத்தையும் நல்வழிக்கு ஆதாரவையும் அளிப்பதுடன் இவ்வரிய பெரிய வியாசங்களும் பண்டை காலத்து சரித்திரங்களும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி அவர்கள் தற்கால நிலைமையினின்றும் உயர் நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம் முதலிய மகளிர்க் குரித்தான நற்குணங்களைப் போதிப்பதான விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள் விஷயத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

ஸ்ரீமான் R. M. A. L. மாணிக்கம் பிள்ளை அவர்கள் 20-6-26-ல் மைடானிலிருந்து எழுதுவது.

சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். பெண்கள் விஷயமாய் கவனம் செலுத்தி அவர்கள் முன்னேற்றம் வழியைப் பற்றி தாங்கள் முயற்சி யெடுத்துக் கொண்டதைப் பற்றியும் சிரமம் பாராது பத்திரிகை நடத்தி வருவது பற்றியும் சகோதரர்கள் சந்தோஷமடைகிறார்கள். தங்களுக்கு கடவுள் பூரண ஆயுளைக் கொடுத்து சிந்தாமணியை என்றும் நடத்தி வரும்படியாய் சதா கடவுளை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

24—9—25-ல் சித்தியவானிலிருந்து ஸ்ரீமான் R.M.P.R. ராமசுவாமி செட்டியார் அவர்கள் எழுதுவது:—

அம்மா,

ஒரு காலத்தில் நாகரிகமே உருவாக விளங்கி மற்ற தேசங்களுக்கு வழி காட்டியாக விருந்த நம் நாடானது பல காரணங்களினால் நவ நாகரிகத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் பொதுவாகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் சிறப்பாக நம் பெண்மணிகளின் வளர்ச்சியையுமே முக்கிய நோக்கமாகக் கொண்டு பல அறிஞர்களின் அரிய கட்டுரைகளுடன் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியுமாகிய தங்களால் நடத்தப்பெறும் நமது "சிந்தாமணி" மேலும் மேலும் அதிக சிறப்புடன் நீடூழி காலம் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவார்.

ஸ்ரீமதி செ. ராசம்மாள் ஸிலோனிலிருந்து 2-11-1926-ல் எழுதுவது.

சாத்வீகம் தங்கிய சகோதரிக்கு நமஸ்காரம்,

தாங்கள் நந்தமிழ் நாட்டிற்கும் விசேஷமாக அதிலுதித்துள்ள பெண்மக்களுக்கும் மிகவும் பிரயாசையுடன் வெளியிட்டு வரும் சிந்தாமணியை கையில் எடுத்தவர்கள் முற்றும் வாசியாமல் வைக்க விரும்பாததுடன் அந்த சஞ்சிகைகளையும் பார்க்க விரும்புகின்றனர். தங்களைச் சகோதரியாக அடையப் பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கியம். தாங்கள் புரியும் இந்நன்றிக்கு பிரதியுபகாரஞ் செய்ய எம்மால் இயலாதாயினும், தங்களுக்கும் தங்கள் சிந்தாமணிக்கும் நீடித்த ஆயுளைக் கொடுக்குமாறு படைத்தளித்துக் காக்கவல்ல பழம் பொருளைப் பன்முறை வேண்டுகிறேன்.

27—1—26-ல் ஸிலோனிலிருந்து ஸ்ரீமான் டி. ஜெ. பரமானந்தம் அவர்கள் எழுதுவது:—

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகிழ்ச்சிக் கோரளவில்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின் நன்மைக்கோஸ்கரம் சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாங்கள் நடத்திவரும் சஞ்சிகையை எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி" நீடூழி வாழ்க. தாங்கள் அன்புடன் எனக்கு சஞ்சிகையும் திருப்பமனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். அனுப்பியிருக்கும் சந்தாவைப் பெற்றுக்கொண்டு என்னையும் ஓர் சந்தாதாரராகப் பதிவுசெய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான் ஜி சக்கிரிசாமி முதலியார் அவர்கள் 22—4—25ல் சிங்கப்பூரிலிருந்து எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்டு வரும் சிந்தாமணி என்னும் தமிழ் மாதப்பத்திரிகையின் 1924 டிசம்பர் இதழ் எனது நண்பர் மூலமாக சமீபத்தில் எனக்குக் கிடைத்துக் கண்ணுற்றேன் அதிலடங்கிய சில விஷயங்களைப் பார்க்க என்மனது குதூகலமடைந்தது. ஆகையால் என்னையொரு சந்தாதாரராகச் சேர்த்துக்கொண்டு பழைய பிரதிகளையுமனுப்பக் கோருகிறேன்.

ஸ்ரீமான் மு. ரா. கபாலி அவர்கள் 9—2—26ல் பினாங்கிலிருந்து எழுதுவது.

நம் பாரத நாட்டில் அவதரித்து செந்தமிழ்த் திலகம் போல் விளங்கும் சிந்தாமணி வரப்பெற்றேன. உள்ளம் மகிழ்ந்தேன். பெண் கல்வி முன்னேற்றத்தைப்பற்றியும் நம் தாய் நாடு தூங்கிக் கொண்டிருந்ததைத் தட்டி எழுப்பி நல்கி செய்த நன்றிக்கு.........வைகறும்......... மாற்றலரிது. நம் சகோதரிக்கு நீடித்த ஆயுளளித்து இம்முயற்சிக்கு கடவுள் கருணை புரிய வேண்டுகிறேன்.

207614
7/13 ...
N 26.39

ஸ்ரீமதி தேவி ராதா (மிஸஸ் R. A. நாகநாதர்) அவர்கள் கோலாலம்பூரிலிருந்து 21-10-1926-ல் எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமூகத்திற்கு.

தங்களது அரிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகைமலர் III-ல் 1வது இதழ் கிடைத்தது அதை வாசிக்க வாசிக்க உற்சாகத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கின்றது. நம் போன்ற பெண் மணிகளுக்கு இக்காலத்துக்கேற்ற புத்திமதி புகட்டும் இம்மணி மேன்மேலும் தழைத்தோங்க எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். சந்தாவை மணியார்டரில் அனுப்பி இருக்கிறேன். தயவு செய்து மாதந்தோறும் பத்திரிகையை யனுப்பி வைக்கவும்.

M.R.Ry. S. K. Ponniah Avl, Teacher, Maxwell School, Kualalumpur, writes under date 12th Feb. 1926 as follows:—

Your Paper is read over and over again with deep interest by me and my friends.

Wishing you continued prosperity.

M.R.Ry. V. C. Pillay Avl., from South Africa writes under date 15—9—1926 as follows:—

I have perused several numbers of Sister Balambal's Tamil Journalism, the "Chinthamani". It contains a number of well written and interesting stories; I found them very interesting and appreciative.

Primarily intended to exalt the status of our Tamil women, physically, morally, intellectually and religiously, the Journal is in everyway really high class production and the talented Editress deserves our grateful thanks for her valuable service in circulating education, especially among our Tamil women.

Wishing the Journal continued prosperity and rapid increase in subscribers

---

School Folk, 26—8—1926:—

CHINTHAMANI. (Madras).—This Tamil monthly, edited by that talented and patriotic lady Sister Balambal, is one of the high-class magazines in Tamil devoted to the advancement of the cause of women. In the combined May and June issue, there are very useful and enlightening articles on The Culture and Education of Women. The Queen of Jansi and Padmini Bai, and the series entitled 'Nur Jehan' and 'Morco Polo's Travels', all furnish very pleasant reading. There are also some very interesting short stories. We wish our learned contemporary all success and prosperity in itsnoble endeavour. (Subs: Rs. 5 per annum.)

கணபதி துணை.

வேதாந்த தருக்க போதகாசிரியர் திருவாளர் சென்னை கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அபிப்பிராயம் 8-5-26.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமுகத்திற்கு; தாங்கள் எனது பார்வைக்குத் தந்த தங்களது 'சிந்தாமணி' என்னும் பெரிய மாதப்பத்திரிகை (மலர் 2 இதழ் 7) யை நான் முற்றுஞ் செவ்வையாகப் படித்துப் பார்த்தேன். பெண் மக்கள் அபிவிருத்தியாதற்குரிய விஷயங்கள் மிக அழகாகத் தெளிவான நடையிலெழுதப்பட்டு விளங்கும் தங்கள் பத்திரிகை ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமாயிருக்கவேண்டு மென்பதும், இப்பத்திரிகையைப் படிப்பவர் சாஸ்திரார்த்தம், மருத்துவ முறை தேச சரித்திரம், இல்லற வொழுக்கம், காலப் போக்கு முதலியவற்றுளின்றியமையாதான பலவற்றையும் மிகத் தெளிவாயறிந்து கொள்ளுதற்குரியவராவரென்பது எனதபிப்பிராயமாம்.

நேரிசை வெண்பா.

சிந்தாமணியாய்த் திகழுஞ்சிந் தாமணியை
நந்தாது நாளு நலமாகப்—பந்தமறக்
கற்பார்க்கு நல்ல கனிவுண்டாம் வாழ்வுண்டாம்
பொற்பாயீ தோங்க பொலிந்து.

7-2-26-ல் டர்பனிலிருந்து ஸ்ரீமான் R. M. பிள்ளை அவர்கள் எழுதுவது:—

தேவரீர் சகோதரி பாலம்மா அவர்களுக்கு தங்களுக்குச் சேரவேண்டிய சந்தாவை யனுப்பியிருக்கிறேன். நிற்க என்னுடைய மனைவி தங்கள் மாதாந்தப் பத்திரிகை சிந்தாமணியைப்பற்றி தன்னைப் போன்ற பெண்களிடம் பத்திரிகையிலுள்ள இனிய விஷயங்களைச் சொல்லி வருவதுடன் "சிந்தாமணி" கண்டு ஆனந்தம் கொண்டதாக என் மூலம் தங்களுக்கு அறிக்கை செய்யச் சொன்னதுடன் தங்களைப் பார்க்கப் பிரியமாயிருப்பதால் தங்கள் உருவப்படம் ஒன்றை யனுப்பும்படிக்கும் எழுதச் சொல்லியிருப்பதால் ஒரு படம் அனுப்பி வைக்கவும்.

7—10—25-ல் கட்டாவிலிருந்து ஸ்ரீமதி மிஸ் குணரத்தினம் நாயுடு எழுதுவது:—

சகோதரி அவர்களுக்கு.

தாங்களனுப்பிவரும் "சிந்தாமணி' எனும் பெயர் பெற்ற மாத சஞ்சிகையை மாதந்தோறும் வரப்பெறுகிறேன். அதன் சிறப்பை என்னென்று வரைவது! 'சிந்தாமணி' நீடூழி வாழ ஸ்ரீ கண்ணபிரான் கருணைபுரிவாராக.

ஸ்ரீமதி அம்புஜவல்லி அம்மாள் 19—9—'26ல் எழுதுவது.

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற இரண்டு வருடங்களாய் நடந்து வரும் இச்சிந்தாமணியை ஆவலுடன் படித்து வருகையில், அதில் வெளிவரும் விஷயங்கள் சிறந்தவைகளாகவும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு சாதகமானவைகளாகவும், தற்காலப் போக்கிற்கு ஏற்றவைகளாகவும் இருக்கக் காண சந்தோஷப்படுகிறேன். மேலும் சிந்தாமணியில் வெளிவரும் விஷயங்கள் தெளிந்த சுலபமான நடையில் வாயப்பட்டிருப்பதானது அதிக உயர்ந்த தமிழ் கல்வியாவது இலக்கண பரிச்சயமாவது இல்லாதவர்களும் அவரவர்கள் நுண்ணறிவிற்கு எட்டியவாறு ஏதோ சில விஷயங்களை எடுத்து கூற இடந்தருவதாய் இருக்கிறது.

ஸ்ரீமான் V. M. M. ஆச்சாரி அவர்கள் 16—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

இதில் வைத்திருக்கும் போஸ்டல் ஆர்டரைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டில் திலகமாக விளங்கும் அருமை பெருமை பொருந்திய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையை கீழ்க்காணும் விலாசத்திற் கனுப்பி வரவும். தாங்கள் மேரிட்ஸ்பர்க் வாலிபர்களுக்கு விடுத்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்து மிகவும் ஆனந்த மடைந்தேன். தாங்கள் நமது பாத கண்டத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றங்கருதி சிரமம் பாராமலும் சுயநலத்தைக் கருதாமலும் தொண்டு புரிந்து வருவதைப் பார்க்க அதிகசந்தோஷமடைவதுடன் தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தீர்க்காயுளும் திடகாத்திரமும் அளித்துத் தாங்கள் எடுத்துள்ள கைங்கரியத்தை சித்தி பெறச் செய்து தங்கள் நாமம் இவ்வுலகில் நீடித்திருக்கச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலவன் அவர்கள் இலங்கையிலிருந்து 7-10-1926-ல் எழுதுவது.

எம் சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு,

தங்களாலியற்றும் "சிந்தாமணியின்" எழுச்சியால் தமிழ் மகளிருட் கிடந்த பேதமை அகல வாரம்பிக்கின்றது. அம்மா! தந்தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமையை நோக்கிப் பரிதவித்து அவர்கள் முற்காலத்து வாழ்ந்த பெண்மணிகளின் சீரிய வியல்வை யொட்டுமாறு வற்புறுத்தி அந்நிலைமைக்கு இவர்களை யுயர்த்து மாற்றமைக் கொண்டும் "சிந்தாமணியின்" சேவையை வரைய இயலாது. எம் சகோதரிகளடைந்த சீர்திருத்தத்தையும் அவர்கள் தங்களினிடை கொண்டிருந்த மருளை ஒழித்ததும் இதனால் நானடைந்த உற்சாகத்தையும் இஃது போன்று நாங்களடைந்த முன்னேற்றமே இச் சிந்தாமணியின் ஆற்றலை வெளிப்படுத்தும்.

அம்மா! தங்களிடமிருந்து புறப்படும் சிந்தாமணியின் வாசனையை நுகர்ந்த பெண்மணிகளிற் சிலரை நான் கண்ட பொழுது அவர்கள் சிந்தாமணியின் கட்டுரைகளைத் தங்களுள்ளத்திற் பதித்தமையினால் அதைக் கடைப்பிடித்து தாங்கள் நடப்பதாயும் தாங்கள் முன்னிருந்த நிலைமையினின்றும் இப்பொழுது மறுபிறப்படைந்திருக்கின்றோம் எனக் கூறினார்கள். இதுமட்டோ!!! இச்சிந்தாமணியைக் கண்ணுறும் பெண்கள் ஒவ்வொருவரும் தங்களை யுணர்ந்ததுமல்லாமல் தாங்கள் இதுகாறும் நடந்து வந்த வழிகளை அறவே ஒழித்து விட்டனர்.

அம்மா! தங்களால் வெளிப்படும் சிந்தாமணிக்கும் தங்களுக்கும் எம்பெருமான் நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவாராக.

ஸ்ரீமதி டி. நடராஜா அவர்கள் 13—6—26ல் பாஜாமிலிருந்து எழுதுவது.

தாங்கள் அனுப்பிய சிந்தாமணி இதழ்களைப் படித்து விஷயங்களின் ரசங்களை யுணர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் தமிழ் நாட்டின் கண்ணுள்ள சகோதரிகளின் முன்னேற்றத்தை விரும்பி தாங்கள் எடுக்கும் பிரயாசையும் இரசமும் வெறும் விலைக்கீடாகாது இவ்வரிய பத்திரிகை பெண்களுக்கு உற்ற துணையாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. தங்கள் பத்திரிகைத் தழைத்தோங்கும் பொருட்டுத் தாங்கள் நீடூழி வாழச் சிவபிரான் கிருபை பாலிப்பாராக.

LIFE MEMBERS.

1. M.R.Ry. The Hon'ble P. K. Nambyar Avl., M.L.C. (S.S.) Penang.
2. ,, Dr. K. Muttukumaru J.P., Penang.
3. ,, Rm. N. Nagappa Pillay Avl., Penang.
4. ,, V. Nadasam Pillay Avl., J.P., Penang
5. ,, A. Veerappa Pillay Avl., J.P., Penang.
6. ,, M. Doari Ross Avl., Penang.
7. ,, O. E. Mohamed Sheriff Avl., Penang.
8. ,, S. Ramanathan Chettiar Avl., Butterworth.
9. ,, K. P. Mohamed Kassim Saheb Avl., Penang.
10. ,, C. Yahambaram Pillay Avl., Penang.
11. ,, M. A. M. Alagappa Chettiar Avl., Penang.
12. ,, S. N. S. T. Sathappa Chettiar Avl., Penang.
13 ,, S. N. S. Narayanan Chettiar Avl, Penang.
14. ,, S. Muthiah Nadar Avl., Penang.
15. ,, S. P. Nadasam Pillai Avl., Penang.
16. ,, O. R. M. O. M. Alagappa Chettiar Avl., Penang.
17. ,, S. M. P. L. Saminathan Chettiar Avl., Devakottai.
18. ,, A. K. M. Meyyappa Chettiar Avl., Bukit-Mertajam.
19. ,, P. L. R. M. Arumugam Chettiar Avl., Penang.
20. ,, K. Vengadasalam Pillay Avl., Penang.
21. ,, S. Veeraswami Avl., Bar-at-law, Kuala-Lumpur.
22. ,, K. S. Dorai Avl., Kuala-Lumpur.
23. ,, Dr. A. Visvalingam, Kuala-Lumpur.
24. ,, M. S. Vadivelu Pillay Avl., Kuala-Lumpur.
25. ,, K. S. Pillai Avl., Advocate, Kuala-Lumpur.
26. ,, K. Kandiah Avl., Klang.
27. ,, T. P. Subramania Iyer Avl., Klang.
28. ,, S. S. Iyer Avl., P. W. D., Klang.
29. ,, Gopala Iyer Avl., Kuala-Lumpur.
30. ,, M. Kumaraswami Pillai Avl., Kuala-Lumpur.
31. ,, R. D. Ramaswami Avl., Kuala-Lumpur.
32. ,, Nilakanta Iyer Avl., Klang.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Moun. Road, Madras.
and Published by Sister V. Balammal, Sallivan's Garden Road, Mylapore, Madras.—2,020—9-5-192